கேரளப் பாடநூல்

# தமிழ்

## வகுப்பு VIII

**Kerala Reader - Tamil (AT)**

**Standard VIII**

கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2016

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப  சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

*- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்*

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

---

**_Prepared by_**

State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala
*Website:* www.scertkerala.gov.in
*e-mail:* scertkerala@asianetindia.com
Phone : 0471 - 2341883, Fax: 0471 - 2341869
*First Edition*: 2015, Reprint: 2016
*Type setting*: SCERT Computer Lab

© Government of Kerala • Department of Education

**மாணவச் செல்வங்களே!**

உயர்தனிச் செம்மொழி என்னும் பெருமை பெற்றது, நம் தாய்மொழித் தமிழ். பழமை வாய்ந்த மொழிகளுள் இலக்கண, இலக்கிய வளம் பெற்ற மொழி நம் தமிழ் மொழியே என்றால் அது மிகையன்று. அத்துணை பெருமை பெற்ற மொழியைக் கையாளவும் மொழி அறிவை வளர்க்கவும் உறுதிதுணையாகத் தமிழ் பாடப்புத்தகங்கள் அமைய வேண்டும். இதை மனதில் கொண்டே இப்பாடப்புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ்ச் செறிவு பெற்ற பாடல்கள், இலக்கியக் கட்டுரைகள், கவிதைகள், அனைத்தையும் வாசியுங்கள், எழுதுங்கள், சிந்தியுங்கள், வளருங்கள்!

உங்கள் தமிழ் வளர்ச்சிக்கு உற்றதுணையாக இப்புத்தகம் இருக்கும் என நம்புகிறேன்.

வாழ்த்துகளுடன்,

**முனைவர். பி.ஏ.பாத்திமா,**
இயக்குநர்,
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவனந்தபுரம்.

# Textbook Development Committee

## Tamil - VIII (AT)

***Members***

Albert Iruthayaraj. , HSA, GHSS, Muthalamada, Palakkad.
Allipathumma. K, HSA, GHSS, Chunduvarai, Idukki.
Bindu. , HSA, GHSThenari, Palakkad.
Buvaneshwari. , HSA, GHSS, Marayoor, Idukki.
Dominic Savio. J, HSA, SFXVHSS, Parisakkal, Palakkad.
Dr. Jayalakshmi. S, HSA, GHSS, Devikulam, Idukki.
Dr. Santhoshkumar. G, HSA, BRC Trainer, Thiruvananthapuram.
Glory Jesseela. , HSA, Little flower HS, Munnar, Idukki.
Kamaludeen. , HSA, GHSS, Muthalamada, Palakkad.
Srinivasan. , HSA, KKMHSS, Vandithavalam, Palakkad.
Varghese. , HSA, St.Sabastin HS, Cheenthalar, Idukki.
Vijayalakshmi. , HSA, BRC Trainer, Varkala, Idukki.

***Experts***

Dr. Gomathy Nayagam. E, Guest Lr. University of Madras, Chennai.
Dr. Karthikeyan. A, Prof., (Rtd.), Tamil University, Thanjavur.
Dr. Nainar M, Reader., (Rtd.), University College, Thiruvananthapuram.
Dr. Parasuraman. T, Prof., PILC, Pondichery.
Dr. Rajaram. S, Prof.,(Rtd.), Tamil University, Thanjavur.
Dr. Ratnasabapathy. P, Prof.(Rtd.), Chennai.
Dr. Sethupandian. T, Prof., (Rtd.), M.K.University, Madurai.
Dr. Veerappan. P, Prof., (Rtd.), NCERT, Mysore.

***Artists***

Nandhakumar. C , Chittur, Palakkad.
Radha Krishnan. P, Neyardam, TVM.
Subin. M.S, Nedumangadu, TVM.

***Academic Co-ordinator***

Dr. Sahaya Dhas D, Research Officer, SCERT.

**State Council of Educational Research and Training(SCERT)**
Poojappura, Thiruvananthapuram - 695 012.

# பொருளடக்கம்


பக்கம்

1. குறிஞ்சி மலர் ........ 7 - 22
   - தேனருவி ........ 8
   - பொதிகைத் தென்றல் ........ 12
   - மனமுடையும் மலைகள் ........ 15
2. கொட்டு முரசு ........ 23 - 38
   - மேள தாளங்கள் ........ 24
   - கண்கவர் கட்டடங்கள் ........ 28
   - மலையாளக் கரையோரம் ........ 34
3. இலக்கியப் புதையல் ........ 39 - 50
   - யாமறிந்த மொழிகளிலே ........ 40
   - அமுத ஊற்று ........ 44
   - இக்கால இன்சுவைகள் ........ 48
4. மண் மணக்குது ........ 51 - 63
   - கற்பனைச் சிறகு ........ 52
   - வீரம் விளைந்த நிலம் ........ 56
   - நோய்முதல் நாடி ........ 59
5. பாசப் பறவைகள் ........ 64 - 80
   - கல்லுக்குள் ஈரம் ........ 65
   - நெஞ்சம் மறப்பதில்லை ........ 71
   - கொள்ளெனக் கொடுத்தல் ........ 78
6. ஒருகூட்டுப் புறாக்கள் ........ 81 - 95
   - இலக்கியம் காட்டும் ஒருமைப்பாடு ........ 82
   - குடையின் கீழ் ........ 86
   - அமைதி யுத்தம் ........ 90

சொல்லகராதி ........ 96

# அலகு 1

# குறிஞ்சி மலர்




மனிதன் தோன்றி வளர்ந்த வரலாறு எப்படியிருப்பினும், அவன் ஓரிடத்தில் நிலையாக இணைந்து வாழக் கற்றுக்கொண்ட இடம் மலைப்பகுதியே. மலைப் பகுதியைத் தமிழில் குறிஞ்சிநிலம் எனக் குறிப்பிடுவர். குறிஞ்சி நிலம் பல்வேறு வளங்கள் நிறைந்த பகுதி. இத்தகைய மலையின் மாண்பினை எடுத்துரைக்கிறது இந்த அலகு.

## முதன்மைக் கற்றல் அடைவுகள்

- கவிதைகளை வாசித்து நயம் பாராட்டி எழுதுகிறார்கள்.
- இயற்கையை வருணணை செய்து குறிப்பு எழுதுகிறார்கள்.
- பத்திரிகைச் செய்திகள், துண்டுப்பிரசுரம் போன்றவற்றை எழுதுகிறார்கள்.
- பாடப்பகுதி சுட்டிக் காட்டும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு கட்டுரை எழுதுகிறார்கள்.
- இயற்கைப் பாதுகாப்புச் செயல்பாடுகளில் ஈடுபடுகிறார்கள், அது பற்றிய குறிப்பு எழுதுகிறார்கள்.

# தேனருவி



## மலை

பரந்து விரிந்து நிமிர்ந்து உயர்ந்த
வரையே, விண்ணோடு
பிறந்து தவழ்ந்து வளர்ந்த இருண்ட
முகிலின் அன்போடு
அடர்ந்து செரிந்து வளர்ந்த மரங்கள்
நிறைந்த உடலோடு நீ
நடந்து அறியா திருந்த வாறே
ராஜிய மாள்வாயோ?

விடங்கள் நிறைந்த அரவும், கொல்லும்
விலங்கும் உன்மீது
இடங்கள் அடைந்து தழைத்து வாழ்ந்து
இனங்கள் விரிவாக்க
தடங்க லின்றி இடங் கொடுத்தாய்
தகுமோ கபடாகத் தன்
கொடுங்குணங்களை நகைத்து மறைக்கும்
நரனின் மேல் என்றோ?

சுனையில் பிறந்து தவழ்ந்து பாறைச்
சரிவில் பாய்ந்தோடி
தரையில் புரண்டு அலைகள் சுழிகள்
துறைகள் உளதாக
உயிர்கள் தழைக்க நதியை அனுப்பி
உதவும் மலை நாதா நீ
உலவாதமர்ந்தே பலபேர் துயரை
ஓட்டிட அறிவாயோ?

**பூரணி**



**பூரணி**

பிறந்த ஊர் பழனி, இவருடைய தந்தையும் சகோதரர்களும் சிறந்த தமிழ்ப் புலவர்களாக விளங்கியவர்கள். பல சூழ்நிலைகளில் எழுதப்பட்ட இவருடைய கவிதைகள் பூரணி கவிதைகள் என்ற தலைப்பில் தொகுப்பாக வெளிவந்தது.

### செயல்பாடுகள்

- ‘மலைவளம்’ எனும் கவிதைக்கு இரசனைக் குறிப்பு எழுதுங்கள்.
- மலைகளைப் பற்றிய விடுகதைகள், பழமொழிகள் போன்றவற்றைத் திரட்டுங்கள்.

## கருங்காற் குறிஞ்சி

‘இலங்கு வெள்ளருவியோடு சிலம்பகத் திரட்டக் கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பணிந்து’ என்கிறது மதுரைக் காஞ்சி (299 – 300).

திடீரெனத் திரையொன்றைத் தூக்கினாற்போல் மூடுபனி விலகியது, எங்கு நோக்கினாலும் நீல நிறப் பூக்கள். கண்ணுக்கெட்டிய தூரம் வரை மலையடுக்குகள். நீலநிறப் போர்வை ஒன்றால் போர்த்தியதுபோல் தோன்றின குறிஞ்சிப்பூக்கள்.

மேற்குத்தொடர்ச்சி மலையில் சுமார் 1600 மீ உயரத்தில், மழைக் காடுகளும் புல்வெளிகளும் இணைந்திருக்கும் பிரதேசங்களில் செழித்து வளரும் ஒரு புதர்ச்செடி இது. நீலகிரியிலிருந்து சயாந்திரி மலைகள் வரை, மலைச்சரிவுகளில் புதர்களாகவும் குற்று மரங்களாகவும் வளரும் இச்செடியில் பல வகைகள் உண்டு. எல்லா வகைகளும் கூட்டமாகத்தான் வளரும். குறிஞ்சி மலர்கள் நீல வண்ணமானது என்றாலும். மஞ்சள் நிறப் பூப்பூக்கும் ஓர் அரிய குறிஞ்சி வகையும் உண்டு. எல்லா வகைக் குறிஞ்சிச் செடிகளும் பல ஆண்டுகளுக்கு ஒரு முறையே மலரும். அதுவும் ஒவ்வொரு செடியும் ஒரே ஒரு முறைதான் மலரும். பூக்கும் காலம் முடிந்ததும் அச்செடி பட்டுப்போகும். பின் உரிய காலத்தில், அதே இடத்தில் புதிய செடிகள் முளைத்துச் செழிக்கும்.

ராபெர்ட் வைட், பெடாம் என்ற இரு பிரித்தானியர்கள் முதன் முதலாக இத் தாவரத்தைக் கவனித்து, இதில் பல வகை இருக்கின்றன என்றெழுதி வைத்தனர். தென்னிந்தியத் தாவரவியலின் பைபிள் என்றறியப்படும் Flora of Madras Presidency என்ற நூலை எழுதிய தாவரவியலாளர் கேம்பிள் நாற்பத்தியாறு வகைக் குறிஞ்சிச் செடிகள் உண்டு என்பார். கொடைக்கானல் மலைகளில் வளரும் குறிஞ்சிக்குத் தாவரவியலாளர்கள் இட்ட பெயர் Phleobophylum kunthianum என்பது.

சங்கப்பாடல்களில் குறிஞ்சி மலரைப்பற்றிய குறிப்புகள் இருந்தாலும். இம்மலர் பூத்துக் குலுங்கும் வருடங்கள் ஆதாரப்பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டிருப்பது 1858 முதல்தான். கோத்தகிரியில் வசித்த கோபண் என்ற ஆங்கிலேயரிடம் இக் குறிப்புகள் இருந்தன. இவரது தந்தை நீலகிரியில் குடியேறிய முன்னோடி ஆங்கிலேயர்களில் ஒருவர். அவரது தாய் (கோபணின் பாட்டி) குறிஞ்சி பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை மலர்வதைக் குறிப்பிடுகிறார். சுற்றுச்சூழலை ஐந்து திணைகளாகப் பிரித்து.

மலைப் பிரதேசத்திற்கு அங்கு வளரும் முக்கிய செடியாகிய குறிஞ்சியின் பெயர் சூட்டப்பட்டது. முருகன் வேட்டுவர் குலப்பெண் வள்ளியை மணந்தபோது அணிவித்தது குறிஞ்சிப்பூக்களால் தொடுக்கப்பட்ட மாலையே.

நீலகிரியில் பூக்கும் குறிஞ்சியைத் தமிழ் மக்கள் நீலக்குறிஞ்சி என்று குறிப்பிடுவர். இம்மலர்ச்செடி முக்குறுத்தி சரணாலயப் பகுதியிலும், மாஞ்சூர் மலைகளிலும், மணவூர் அருகிலும் மிகுதியாக வளர்கின்றது. பாண்டிச்சேரி சலிம் அலி சுற்றுச் சூழல் நிறுவனம் இப்பகுதியில் குறிஞ்சி மலர் பற்றிப் பல ஆண்டுகள் கள ஆய்வு நடத்தியது. ஏறக்குறைய



ஒரு மீட்டர் உயரம் இருக்கும் தண்டு சிகப்பாகவும், காம்புகளின் கணுக்கள் கருப்பாகவும் இருக்கும். மதுரைக் காஞ்சி ''கருங்கால் குறிஞ்சி'' என்று குறிப்பிடுவது இத்தாவரத்தைத்தான். இது பூக்கும் காலத்தில் மலைச் சரிவே நீலமாகக் காணப்படும். இந்த மலரால்தான் நீலகிரி மலைக்கு அப்பெயர் வந்தது என்றும் சிலர் கூறுகின்றார்கள்.

குறிஞ்சி, மலரும் காலத்தில், அப்பூக்களில் நிறையக் கிடைக்கும் தேனை நாடி, மலைத்தேனீக்கள் பெருமளவில் தோன்றி, பாறை இடுக்குகளில் பெரிய கூடுகளைக் கட்டித் தேன் சேகரிக்கும். மற்றெல்லாத் தேனிலும் சிறந்ததாகப் போற்றப்படும் குறிஞ்சித் தேனைக் குறிஞ்சி நாடனின் நட்புக்கு ஒப்புமையாகக் குறுந்தொகை குறிப்பிடுகின்றது.

*"கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு*
*பெருந்தேனிழைக்கும் நாடனொடு நட்பே."*

மூணாறு மலைகளில் வாழும், தமிழும் மலையாளமும் கலந்த மொழி பேசும் முதுவர் எனும் பழங்குடியினர் குறிஞ்சி மலர்வதைக் கொண்டே தங்கள் வயதினைக் கணக்கிடுகின்றார்கள். செங்குத்தான பாறை இடுக்குகளிலும், நெடிதுயர்ந்த மரங்களிலுமிருக்கும் தேனடைகளைச் சேகரிப்பதே இவர்களின் பாரம்பரியத் தொழில். பச்சை மூங்கிலில் நூலேணி போல் செய்து, தேனடையை எப்பாடு பட்டாவது எடுத்துவிடுவார்கள். இதிலிருந்து தோன்றிய பழமொழியே 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவது' போலென்பது. ஒரு பொருளை அடைந்தே தீருவது என்ற மன உறுதியைத்தான் இது குறிக்கின்றது. மூணாறைச் சுற்றியிருக்கும் மாட்டுப்பட்டி, குண்டுமலை மற்றும் குண்டலை போன்ற பகுதிகளில் மலைச்சரிவுகளில் குறிஞ்சிப் புதர்கள் மண்டிக் கிடக்கின்றன.

இயற்கை வரலாற்றாசிரியர்கள் மேற்குத்தொடர்ச்சி மலையை இரு பகுதிகளாக - பாலக்காட்டுக் கணவாய்க்குத் தெற்கே உள்ள மலைகளைப் பழனி மலைத்தொடர் என்றும், வடக்கே உள்ள மலைகளை நீலகிரி மலைத் தொடர் என்றும்-குறிப்பிடுவர். பழனிமலைத் தொடரில் மூணாறு அருகே உள்ள ஆனைமுடி என்ற சிகரத்தைச் சூழ்ந்த பகுதிகளில் குறிஞ்சி ஏராளமாக வளர்கின்றது. மூணாறைச் சுற்றியுள்ள மாட்டுப்பட்டி, குண்டுமலை குண்டலை போன்றவை குறிஞ்சிப்புதர்கள் மிகுந்த இடங்கள். தென்னிந்தியாவில் மிக உயர்ந்த மலைச்சிகரம் இந்த ஆனைமுடியே. தொட்ட பெட்டாவைவிடப் பல மீட்டர்கள் உயரமானது. ஆனால் முதலில் பிரபலமடைந்தது உதகமண்ட லத்திற்கருகே உள்ள தொட்டபெட்டா. இங்கே தான் வரையாடுகளுக்கு என ராஜமலை சரணாலயம் இருக்கின்றது. இதையொட்டித் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஆனை மலை சரணாலயமும் உள்ளது.

பல நூற்றாண்டுகளாக வளமாகச் சிதைவின்றி இருந்த குறிஞ்சிமலர்ப் பிரதேசம், கடந்த ஐம்பது

ஆண்டுகளில் பரவலாகச் சீரழிக்கப்பட்டது. மழைக் காடுகள் வெட்டுமரத் தொழிலுக்காகத் திருத்தப்பட்டன. தேயிலைத் தோட்டத்திற்காகக் காடுகள் அழிக்கப்பட்டன. தோல் பதனிடும் தொழிலுக்காகக் குறிஞ்சி மலர்ச்செடி வளரும் இடங்களில் சிகை மரங்கள் நடப்பட்டன. செயற்கை நூலிழைக்காக தைல மரங்கள் நடப்பட்டன. இம் மரங்கள் இந்தப் புவியியல் பகுதிக்கு முற்றிலும் அந்நியமான தாவரங்கள். ஆகவே இம்மலைப்பகுதிகளின் சமன்நிலை குலைக்கப்பட்டது. மலைச்சாலைகளும் அணைகளும் குறிஞ்சிப் பிரதேசத்தை மேலும் ஆக்கிரமித்துவிட்டன. எஞ்சியுள்ள குறிஞ்சிப்பூ வளரும் பகுதிகளைக் காக்க ஓர் இயக்கம் உருவாகியிருக்கின்றது.

கொடைக்கானலுக்கும் மூணாறுக்கும் இடையே, 1600 மீட்டர் உயரத்திலுள்ள 95 சதுர கி.மீ. பரப்புள்ள பகுதியைக் குறிஞ்சி மலர்ச் சரணாலயமாக அறிவிக்க வேண்டுமென்பது இவர்கள் கோரிக்கை. இந்த இடத்தின் பெருவாரியான பரப்பு தமிழ்நாட்டி லும் கேரளத்திலுள்ள இடுக்கி மாவட்டத்திலும் உள்ளது. வைகை நதியும் அமராவதி நதியும் உற்பத்தியாவது இந்தப் பகுதியில்தான். வேறெங்கு இத்தாவரம் அழிந்துவிட்டாலும் இந்தக் குறிஞ்சி மலை சரணாலயத்தில் அது பாதுகாக்கப்படலாம் என்று இவர்கள் நம்புகிறார்கள். வருடா வருடம் கொடைக்கானலில் இருந்து மூணாறுக்குக் குறிஞ்சி மலர்ப் பிரதேசத்தின் வழியாக நடைப்பயணம் மேற்கொள்கிறார்கள்.




குறிஞ்சிச் செடியைப் பாதுகாப்பது இம்மலைப் பிரதேசத்தின் பல பரிமாணங்களையும் பாதுகாப்ப தாகும்; அங்கு ஊற்றெடுத்துப் பிறக்கும் ஜீவநதி களைப்பேணுவதாகும்; அங்கு வாழும் உயிரினங் களைப் பாதுகாப்பதாகும். உலகில் வேறு எங்கும் காண முடியாத பல அரிய உயிரினங்களுக்கும் இந்தப் பிரதேசம்தான் உறைவிடம். மலை முகடுகளில் பாறைகளிடையே வரையாடுகள் வாழ்கின்றன. சிங்கவால் குரங்குகளுக்கும் இக்குறிஞ்சி நிலமே வாழிடம்.


குறிஞ்சிப்பூ அரிய உயிரினங்களுக்கும் நதிகளின் ஊற்றுக்கண்களுக்கும் எழில் பொங்கும் மலைப் பிரதேசங்களுக்கும் ஒரு குறியீடு. நாடு என்பது மக்களால் மட்டுமே ஆனது அல்ல. அதில் ஓடும் ஆறுகள், மலைகள், காடுகள், அங்கு வளரும் செடி கொடிகள், மரங்கள், காட்டுயிர் இவை யாவுமே ஒரு நாட்டின் முழுப் பரிமாணத்திற்குக் காரணம் ஆகின்றன. ஓடி ஓடிப் பொருள் சேகரிக்கும் அவசரத்தில் இதை நாம் மறந்து விடுகின்றோம்.

**– தியோடர் பாஸ்கர்**



## செயல்பாடுகள்


- குறிஞ்சி மலர் குறித்துச் சிறு குறிப்பு எழுதுங்கள்.
- மலைப்பகுதியில் வாழும் உயிரினங்களின் படங்களைத் தொகுத்துக் குறிப்பு எழுதுங்கள்.
- மலையை வருணித்துக் கவிதை ஒன்று எழுதி பொருத்தமானத் தலைப்பிடுங்கள்.
- வரையாடு பற்றி விளக்கக் குறிப்பெழுதுங்கள்.



# பொதிகைத் தென்றல்

## மாமலைகள்

நாட்டின் பல்வளத்திற்கும் அடிப்படையாய் அமைவன மலைகள். மலைவளம் நிறைந்த நாடு மழைவளம் சிறப்பத் தன்னிறைவுடன் திகழும். மனிதனுடைய வாழ்வுக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் அங்கே கிடைக்கும். தேனும் கிழங்கும் கனியும் காயும் மணியும் பொன்னும் அகிலும் ஆரமும் என்று பல்வேறு பொருள்களைத் தயங்காமல் வழங்குகிறது மலை. நிமிர்ந்துயர்ந்து வளர்ந்து நிற்கும் மலைக்காட்சி ஒரு நாட்டின் வளத்தைப் பெருமிதத்தோடு அனைவர்க்கும் காட்டும் அழகிய தோற்றமாகும். தண்மை மிக்க சுனை நீரும், அலைத்து வரும் அருவி நீரும், கருங்குயிலின் பாட்டும், தோகை மயிலின் ஆட்டமும், புள்ளி மானின் துள்ளலும், பறவைகளின் ஓசையும், விலங்கினத்தின் கூட்டமும் என்றிவ்வாறாக எழிலும் பயனும் மிக்கதாக விளங்குவது மலை. தமிழக மலைகள் கண்டாரை ஈர்க்கும் கவின்மிகு காட்சி தருவனவாய் அமைந்தன; மக்களுக்கு வேண்டிய பல்வகைப் பொருட்களைத் தந்து தாயெனவும் திகழ்ந்தன.



கற்கால மக்கள் பெரிதும் குன்றுகளிலும் மலைச் சரிவுகளிலும் வளம் செறிந்த காடுகளின் ஓரங்களிலும் வாழ்ந்து வந்தனர். இரும்பினைக் கண்டறிந்த பின்னரே, ஆதி மனிதர் காட்டினைத் தம்முடைய வாழ்விடமாகக் கொண்டிருக்கலாம் என்று கருதுவது பொருத்தமாகத் தோன்றுகிறது.

முல்லையில் மொட்டவிழ்ந்து, மருதத்தில் மலர்ந்து விரிந்து, நெய்தலில் முழுதும் மணம் பரப்பிய தமிழரின் நாகரிக மலர் முகிழ்த்த இடம் குறிஞ்சியாகிய மலையே என்பது வெள்ளிடைமலை. இதனால்தான் குறிஞ்சியை முதல் நிலமாகவும், குறிஞ்சித் திணையை முதல் திணையாகவும் கொண்டொழுகினர் சங்ககால மாந்தர்.

### பொதிகை மலை

பொதிகை மலை பாண்டிய வேந்தருக்குரியது. இம் மலை சேர நாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் எல்லையாக அமைந்து விளங்குவது. அதன் ஒரு புறம் பாண்டியருக்கும் மற்றொரு புறம் சேருருக்கும்

உரியதாயினும் அதனுரிமை பாண்டியர்க்கு வழங்கப் பட்டதனால் சேரர்க்குக் கூறப்பெறுதல் இல்லை.

படுமரத்து மோசி கொற்றன் என்னும் சங்கப் புலவர்.

"மண்ணுயி ரறியா துன்னரும் பொதியில்" என்று குறிப்பிடுகின்றார்.

## பறம்பு மலை

வேள் பாரி பாண்டி நாட்டுப் பறம்பு மலையைச் சூழ்ந்த நாட்டை உடையவன். இப் பறம்பு நாடு முந்நூறு ஊர்களை உடையது. பறம்பு மலை இப்போது பிரான்மலை என வழங்கப்படுகிறது. புதுக்கோட்டை நாட்டைச் சார்ந்திருக்கின்றது. வேள் பாரியின் மலைவளமும் சுனைநீர் நலமும் புலவர் பாடும் புகழ் படைத்தவை.

## குடமலை

குடமலை என்பது மேற்குமலை. காவிரிப் பேராறு குடமலையிற் பிறந்து பெருவளம் பெருக்கும் பான்மையது,

*"குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி"*

என்று குறிப்பிடுகிறது மலைபடுகடாம். இதனால் குடமலை என்பது குடகுமலையே என்பது உறுதியாகிறது.

பட்டினப்பாலை''குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்" பற்றிக் குறிப்பிடுகிறது.

## ஏழில் மலை

பண்டைய கேரளத்தில் மூன்று அரசுகள் அமைந்திருந்ததாகவும் அவற்றுள் ஆய்நாடு தென்கோடியிலும், சேரநாடு நடுவிலும், ஏழில்நாடு வட கோடியிலும் இருந்ததாகவும் குஞ்ஞன் பிள்ளை அவர்கள் குறிப்பிடுவார். இவ்வேழில்நாடு நன்னன் என்பானுக்கு உரிமையுடையது என்பதனை,

"பாரத்துத் தலைவன் ஆர நன்னன்
ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பிற்
களிமயில் கலாவத் தன்ன தோளே"

என்னும் அகப்பாட்டின் வரிகள் உறுதி செய்கின்றன.

## குமரி மலை

டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் சிலப்பதி காரப் பதிப்பின் முகவுரையில் மலைகள் என்ற தலைப்பில் பல்வேறு மலைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அவற்றுள் 'குமரிக்கோடு' என்பதும் இடம் பெற்றுள்ளது. "குமரியாறும் குமரி மலையும் பனிமலையினும் கங்கையாற்றினும் மிகமிகத் தொன்மை வாய்ந்தனவாம்'' என்பார் டாக்டர் சி. இலக்குவனார் அவர்கள்.

*"ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்*
*தென்னங் குமரியொ டாயிடை"*
*"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்*
*தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்"*
*"தென்கு மரி வடபெருங்கல்*
*குணகுடகட லாவெல்லை"*

எனவரும் சங்க இலக்கியப் பாடல் அடிகள் தமிழக எல்லை பற்றிக் குறிப்பனவாம். வடக்கே இமயத்தை மலை என்று கொண்டு தெற்கே உள்ள குமரியை மட்டும் ஆறு என்று பொதுவாகக் கொள்வது வழக்கம். ஒரு பக்கம் மலையைக் குறித்துப் பின் அதன் மறுபக்கம் மீண்டும் மலையயையே குறித்துச் சொல்லியிருக்கலாம்; அதுவே இயல்பு. குமரி மலையில் தோன்றிய ஆறு குமரியாறு என்று பெயர் பெற்றிருக்கலாம்; பின்னாளில் ஆறே எல்லையாகக் கூறப்பட்டுவிட்டது. சிலப்பதிகாரத்தில் பஃறுளியாறும் குமரிக்கோடும் ஆழ்ந்தமை பற்றிக் கூறி, அதற்கீடாக இமயமும் கங்கையும் கொண்டது பற்றிக் குறிப்பிடுவதனால் குமரி மலையே தெற்கெல்லை எனலாம்.

பேராசியர் அ.மு. பரமசிவானந்தம் அவர்கள் "இமயமும் குமரியும்" என்னும் கட்டுரையில் குமரி மலையும் குமரியாறும் இருந்தனவாகக் குறிப்பிடுவது ஈண்டுக் கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

## பிற மலைகள்

மேற்கூறப்பட்ட மலைகளே அன்றி, வேறு பல மலைகளும் சங்க இலக்கியத்தில் ஆங்காங்கே குறிக்கப்படுகின்றன. ஏரகம், சிறுமலை, விச்சிமலை,

செங்கோடு, மேருமலை முதலான மலைகள் சங்கப் பாடல்களில் சுட்டப்பெறுகின்றன. மேலும் பல குன்றுகளும் மலைகளும் பெயரினால் சுட்டப்பெறாமல் நெடுங்குன்றம், பெருமலை என்றெல்லாம் வழங்கப்பட்டுள்ளன.

## மலைவளம்

மலைகள் நிறைந்த நாடுதான் நல்வளம் நிறைந்த நாடாகத் திகழும். வானளாவ உயர்ந்தோங்கிய மலைகள் மழை மேகத்தைத் தடுத்து நிறுத்திப் பருவமழை பொய்க்காமல் பொழியச் செய்கின்றன. கனி, கிழங்கு, தேன், முதலான வற்றைத் தருவதோடு ஆரம், அகில், தேக்கு முதலானவற்றையும் மலைகள் தருகின்றன; பொன், மணி, இரும்பு ஆகியனவும் கிடைக்கின்றன.

இன்று மிகச் சிறந்த குளிர்மலைப் பகுதியாக விளங்கும் தமிழகத்துக் கொடைக்கானல் மலை சங்க காலத்திலேயே பெருமை பெற்று விளங்கி யதாகும்.

மலைகள் நாட்டின் எல்லைகளாகவும் அமைந்து சிறந்தன. அவற்றின் அடர்ந்த காடுகள் வளம் தந்து அரணாகவும் விளங்கின.



மலைகளின் மீது மழை பொழிவதால் ஆங்கிருந்து வரும் ஆறுகளும் பெருக்கெடுத்து ஓடிவருகின்றன. வற்றாத அருவிகள் இழிந்தோடி அழகும் பயனும் தருகின்றன.

குடகுமலையிலும் பொதிகை மலையிலும் தோன்றி வரும் காவிரியும் தாமிரபரணியும் தமிழகத்தின் நீர்வளத்தைப் பெருக்கி, நிலவளத்தை மிகுதிப் படுத்தும் ஆற்றல் வாய்ந்தனவாய்த் திகழ்கின்றன.

இன்னும் பல்வேறு வகையான மலைபடு பொருள் களாகிய செல்வத்தையும் அவை தருகின்றன, காய், உயரிய வேங்கட மலையும் அதன் காடுகளும் பழந் தமிழகத்திற்குப் பெரும்பாதுகாப்பாக அமைந்திருந்தன, அதனால்தான் வேங்கடத்தைக் கடந்து வேறெந்த மன்னனாலும் தெற்கு நோக்கிப் படையெடுத்து வர இயலவில்லை.

மலைகளைச் சங்கச் சான்றோர்கள் பெரிதும் விரிவாகப் பாடிப் பாராட்டியுள்ளது அவர்தம் இயற்கை வாழ்வையும் சிந்தனை ஆற்றலையும் நிலவியல் அறிவையும் நன்கு உணர்த்துவதாகும்.

**– தங்கராசு. மு**



# மனமுடையும் மலைகள்

## அப்பச்சி மலை

பத்தாம் வகுப்பின் இறுதித்தேர்வு அன்றுடன் முடிந்தது.

ஜெறி தேர்வு எழுதி முடித்துவிட்டு வகுப்பறையை விட்டு வெளியே வந்தான். அவனிடத்தில் ஒரு பெரிய பாரத்தை இறக்கி வைத்துவிட்டு வரும் பெருமிதம் தெரிந்தது.

இனிமேல் இரண்டு மாதத்திற்கு அவன் வீட்டுப்பாடம் எழுதவேண்டாம். பூகோளப் படத்தை வரையா ததற்குச் சரித்திர ஆசிரியரிடம் மல்லுக்கு நிற்க வேண்டாம். எப்போதும் கையில் கம்புடன் ஆங்கிலப்பாடம் எடுக்கவரும் ஆசிரியரைக்கண்டு பயப்படவேண்டாம். புரியாத கணக்குகளைப் புரிய வைக்க அவஸ்தைப்படும் காந்திக் கண்ணாடி கணக்கு வாத்தியாரிடம் திட்டு வாங்கவேண்டாம். இன்றிலிருந்து விடுதலை... விடுதலை... இரண்டு மாதத்திற்கு விடுதலை. ஜெறியின் மனம் கும்மாளமிட்டது.

இந்த விடுதலை என்றென்றும் நிரந்தரமாய் இருக்கக்கூடாதா? செயற்கையான இந்தப் புத்தகங்களை விட்டுவிட்டு இயற்கையைப் பற்றிப்படிக்கும் படிப்பு அதனோடு ஒட்டி உறவாடும் ஒரு படிப்பு இருக்கக்கூடாதா? ஜெறினுக்கு ஏக்கம் ஏக்கமாக இருந்தது.

பள்ளிக்கூட வெளிச்சுவரைவிட்டு வெளியே வந்து அண்ணாந்து பார்த்தான். மேலே வானம் மட்டும் தான் தெரிந்தது. அதன்மீது கரிய வெள்ளை மேகங்கள் ஒன்றோடொன்று தொட்டு விளையாடிக் கொண்டிருப்பதைத் தவிர ஒன்றும் அங்கே தெரியவில்லை. அவற்றைத் தடுப்பார் இல்லாமல் அவைபாட்டிற்கு ஓடிக்கொண்டே இருந்தன.

சுற்றும் முற்றும் பார்த்தான். வானளாவிய கட்ட டங்கள்... ஒண்டியாய்க் கூட்டமாய்ப் பல்வேறு வர்ணங்களில் வடிவங்களில் நிறைந்திருந்தன. சுற்றிலும் மனிதக்கூட்டங்கள், ஓடுகின்ற எந்திரங்கள், மக்களின் எந்திரங்களின் இரைச்சல்கள், புகைகள், கரிய, வெளிறிய, நச்சுப்புகைகள். மனிதனின் மூச்சை அடைப்பதற்குத் தோன்றிய நவீன காலத்தின் அறுவடையாகிய நச்சுப்புகைகள் சே... சே... வாழ்க்கையா இது?

அந்தச் சென்னை மாகாணத்தையே ஒரு தடவை காறி உமிழ்ந்தான்.

இதிலிருந்து விடுபட எத்தனையோ தடவை பெற்றோர்களிடம் கூறிப் பார்த்தான்.

“அப்பா... அப்பா... எனக்கு டவுன் பிடிக்கல்லைப்பா... நான் கிராமத்திலே தாத்தா வீட்டிலேதங்கி படிக்கிறேன்...”

“போடா அதிகப் பிரசங்கி! அங்கே என்னல வசதி இருக்கு. இங்கிலீசு சரியா உச்சரிக்கவாவது அங்குள்ள எவனுக்காவது தெரியுமா? பேசாம இங்கே இருந்து படில. ஒவ்வொருத்தனும் படிக்க வசதியில்லாம லோ.... லோன்னு அலையிறான். உனக்கு இருக்கிற வசதிய பயன்படுத்தவும் தெரியல்ல”. அவன் அப்பா போட்ட சத்தத்தில் ஆடிப்போய் ‘கப்சிப்’ ஆயிட்டான்.

போலிஸ் வேலை அவன் அப்பா உள்ளத்தை இரும்பாக மாற்றியிருந்தது.

அவன் அம்மாவும் எப்பவும் அப்பா பக்கம்தான். “மோனே! அப்பா சொல்லறதுதாம்பா சரி. உன் அப்பாதான் இந்தப் போலீஸ் வேலையில் சேர்ந்து இப்படி அல்லாடிட்டிருக்காரு. உனக்கும் அப்படி ஆகக்கூடாது. கண்ணா! நீ கலட்டருக்குப் படிக்கணும். அதுக்கு இதுதான் வசதி” இப்படி மாறி

மாறிச் சொல்லிச் சொல்லியே அவன் ஆசையை அழித்து விட்டார்கள். ஆனால் கிராமத்தைப் பற்றிய ஏக்கம் அவர்கள் அறியாமலேயே அவன் உள்ளத்தில் குடிபுகுந்தது. அதனால் பள்ளிக்கூட விடுமுறை நாட்களில் கிராமத்தில் போய் ஆசைதீர விளையாடுவான்.

வயல்களிலும் காடுகளிலும் சிட்டுக்குருவியைப் போலச் சிறகடித்துப் பறப்பான். அவனுடைய ஒவ்வொரு சந்தேகத்தையும் போக்கும் ஞானியாய் அவன் தாத்தா கிராமத்தில் இருந்ததனால் அவனுடைய விடுமுறை நாட்கள் சொர்க்கமாய்க் கிராமத்தில் கழிந்தன. இந்த ஆசைக்கு ஜெறியின் பெற்றோரும் தடை போடவில்லை. அங்கே அவனுக்கு மிகவும் பிடித்த இடம் அப்பச்சி மலைதான்.

கிராமத்தில் வயதில் முதியவர்களை அப்பச்சி என்று அன்புடன் அழைப்பார்கள். எனவே கிராமத்தில் அப்பச்சியைப் போல் தோற்றம் கொண்ட மலைக்கும் மக்கள் அப்பச்சி என்ற பெயரையே சூட்டி மகிழ்ந்தார்கள்.

அப்பச்சி மலையைத் தொலைவில் நின்று பார்த்தால் வயதான தாத்தா பச்சைப் போர்வையால் தன்னை மூடிக்கொண்டு காலை நீட்டிப் படுத்திருப்பது போல் தோன்றும். அதன் கூர்மையான நீண்ட மூக்கின் மீது மேகங்கள் தவழ்ந்து விளையாடும். அதன் உடம்பில் ரோமமாய்ச் சிறுசிறு புற்களும் மரங்களும் முளைத்திருந்தன.

அந்த மரங்களின் மீது காக்கைகளும், குருவிகளும் கூடுகட்டிப் பாட்டுப்பாடும். அப்பச்சியின் வாயிலிருந்து கக்கியபடி வெளிவரும் வெள்ளை நுரை நீரோடையாகப் பாய்ந்தோடும். அதைப்பார்த்துக் கொண்டே நின்றால் பொழுது போவதே தெரியாது.

ஜெறி அந்த விடுமுறை நாட்களில் காலை முதல் மாலை வரை அங்கேயே கழிப்பான். அப்பச்சி மலையின் மூக்குப்பாகத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அங்கேயே உட்கார்ந்திருந்தால் மேகங்கள் சூழ்ந்து கிச்சு முச்சு காட்டும் அந்த இன்ப கிளுகிளுப்பில் ஜெறி கிறங்கிப்போவான். இனம் புரியாத ஒருவித உணர்ச்சி அவனை ஆட்கொள்ளும். காலம் முழுவதும் இந்த உணர்விலே இருந்து கொண்டே உயிரை விட்டுவிட்டால் எப்படி இருக்கும்?...

ஒரு நிமிடம் அப்பச்சி மலையின் நினைவுகளில் தன்னை மறந்துபோனான். கிராமத்திற்குப் போகும் பரவசத்துடன் விரைவாக வீட்டை நோக்கி நடந்தான்.

தாய் முன்னதாகவே அவன் துணிமணிகளை எடுத்து சூட்கேஸில் அடைத்து வைத்திருந்தார். தந்தை பஸ் ஏற்றிவிட இவனுக்காகவே காத்திருந்தார்.

அவன் வீடு வந்ததும் தந்தையார் கூறினார்.

“ஜெறி உனக்காகத்தான் நாங்க காத்திருக்கிறோம்.



எனக்கு ஊருக்கு வருவதற்கு லீவு கிடைக்கல்ல. ஊரில இப்ப அப்பாவும் இல்லை. என் தம்பி வீட்டில் தான் நீ நிக்கணும். இப்ப உன்னைத் தனியா விட மனசில்ல. பிறகு போகலாம்னு சொன்னாலும் நீ கேட்கமாட்ட. உன் விருப்பப்படி சில நாள் கிராமத்தில் இருந்திட்டுவா. ஊருக்குப்போனா அப்பாவுக்கு கல்லறையில் மெழுகுவர்த்தி கொளுத்திவைக்க மறந்திடாத'' என்று எதை எதையோ சொல்லி நேரத்தைக் கடத்திக்கொண்டே இருந்தார். அம்மாவும் தன் பங்கிற்கு, " மோனே! உன் தாத்தா இருந்திருந்தா உன்னை நல்லமுறையில் பார்த்தி ருப்பாரு. கடந்த வருடம் தான் காலன் அவரைக் கொண்டுபோயிட்டான். உங்க அப்பாவுக்கு லீவு கிடைச்சதும் நாங்க அங்க வருகிறோம். அதுவரை கவனமா உன்னைப் பார்த்துக்க. அங்கேயும் இங்கேயும் சும்மா வெயிலில அலையாத" என்று கூறிக்கொண்டே இருந்தார். பஸ்ஸில் ஏறி அமரும் வரை அப்பா அம்மாவின் தொண தொணப்புத் தொடர்ந்து கொண்டே இருந்தது.

பஸ்ஸில் வசதியான இடத்தில் ஏறி உட்கார்ந்தான். பஸ் ஓடிக்கொண்டிருந்தது. ஜன்னல் வழியாக ஜில் என்று மாலைநேரக் குளுமையான காற்று அவன் முகத்தில் சுழன்று அடித்துக் கொண்டிருந்தது. அந்த இனிமையான குளுகுளுப்பில் ஜெறி தன்னை மறந்து போனான். அவன் உள் எண்ணங்கள் கிராமத்தைப்பற்றிய பழைய நிகழ்ச்சிகளுக்குத் தாவி ஓடியது.

''தாத்தா''.... தாத்தாவின் நினைவுகள் அவன் மனதைச் சிலிர்க்க வைத்தன.

அந்தக் கிராமத்தின் பசுமையோடு தன்னை ஐக்கியப்படுத்திவிட்டு அதிலிருந்து கடைசிவரை விடுபடாமல் இறுதி மூச்சுவரைக்கும் வாழ்ந்து மறைந்த இல்லை, வாழ்ந்து கொண்டிருக்கும் அவர் எண்ணங்கள் இன்பக் கிளர்ச்சியைக் கொடுத்தன. அறிவு வந்த நாள் முதல் அவனுக்குத் தோழனாய், நண்பனாய், கூட இருந்து இயற்கையின் ஒவ்வொரு அசைவையும் சுவைபட அவன் உள்ளத்தில் ஊட்டிய நிகழ்ச்சிகள் அவன் மனதில் தோன்றி மயங்க வைத்தன.

எப்போது கடைசியாக அவன் அவரை சந்தித்தான்? ஒரு நாள் பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும்போது அவன் அப்பா அவனைத் தேடி வந்தார். தாத்தா வுக்குச் சுகமில்லை; உடனே புறப்பட்டு ஊருக்குப் போகவேண்டும் என்று கூறி அழைத்துச் சென்றார்.

வருகிற வழியில் அப்பாவும், அம்மாவும் அழுது கொண்டே வந்தார்கள். ஜெறியின் மனமும் சங்கடப்பட்டுக்கொண்டே வந்தது. ஆனாலும் அவனைப் பார்க்காமல் தாத்தா கண்ணை மூட மாட்டார் என்ற எண்ணம் அவனிடம் இருந்தது.

வீட்டில் போனபோது தாத்தா அமைதியாகப் படுத்தி ருந்தார். அவர்களை ஒரு தடவை நோக்கினார். மீண்டும் அவர் கண்கள் ஜெறியின் முன் நிலைத்து நின்றது. அவனை மெல்ல அருகில் அழைத்தார்.

"தாத்தா! என்னை விட்டுப் போய்விடமாட்டேயே! எனக்கு எல்லாமே நீ தானே தாத்தா?" தாத்தாவின் மடி மீது முகம் புதைத்து ஏங்கி ஏங்கி அழுதான்.

"என் ராசா... நீ அழாதேடா... நான் எங்கே சாவப்போ றேன், நான் இங்கே தான்பா வாழ்ந்து கொண்டி ருப்பேன். நீ தினமும் பார்க்கப் பிரியப்படுவியே அப்பச்சி மலை. அதில் உள்ள நீரோடை, மேகங்கள், மரங்கள், பூக்கள், பறவைகள், இங்கு எல்லாம் நான் இருப்பேன்டா. கண்ணா... இப்ப நான் எடுத்த பிறவி உடம்பு மண்ணோடு மண்ணாகக் கலக்க வேண்டிய காலம் வந்தாச்சு. ஆனால் என் உயிர் இங்கே தானப்பா இருக்கும். அப்பச்சிமலை உள்ள வரைக்கும் நான் வாழ்ந்திட்டுதான்பா இருப்பேன். நீ எனக்காக இப்போது அழக்கூடாது'' என்று மெல்ல ஈன ஸ்வரத்தில் அவன் காதுகளில் முணுகினார். பல்லில்லா அவர் பொக்கை வாயிலிருந்து வந்த குரல் காற்று அவர் எண்ணங்களை ஓரளவிற்கு அவனுக்கு உணர்த்திற்று.

காலையில் தாத்தாவின் உடம்பு நடு அறையில் விறைத்துக் கிடந்தது. உறவினர்களின் அழுகைக் குரலால் அந்த வீடு துக்கவீடாக மாறியிருந்தது. ஆனால் ஜெறி அழவேயில்லை. அவன் ஓடினான். அப்பச்சி மலையின்மீது படபட வென்று ஏறினான். காற்று அவனைத் தழுவிச்சென்றது. மரங்கள் படபட வென்று அசைந்து கொண்டே இருந்தன.

‘‘தாத்தா... நீ இங்கே தானிருப்பேன்னு நான் புரிஞ்சிட்டேன்.. தாத்தா நான் புரிஞ்சிட்டேன்” உரத்த சத்தமாய் மலையின் மீது நின்று கூப்பிட்டான்.

தாத்தாவின் ஈமச்சடங்கில் இவன் கலந்து கொள்ளவே இல்லை. தாயும், தந்தையும் உறவினர்களும் இவனை ஒருமாதிரியாய்ப் பார்த்தனர்.

“அடா, என்னடா இவன். இப்படி செஞ்சிட்டான். தாத்தா இவனை நேசிச்சதுபோல யாரையாவது நேசித்தாரா? ஆனா இந்தப் பயலோ அவர் இறந்த ஒரு கவலையுமில்லாமல் சிரிச்சிட்டே இருக்கான். பயலுக்கு என்ன நேர்ந்ததோ? இப்படிப் பலவாறு ஒன்றுக்கொன்று கூறிக்கொண்டே இருந்தனர். தாத்தா இறந்த பின்னர் துக்கவீடு இவனைக் குறித்த பேச்சுகளினால் கலகலப்பாக மாறியிருந்தது.

ஆனா ஜெறி எவரைப் பற்றியும் கவலைப்பட வில்லை. தாத்தாவின் பதினாறாம் நாள் சடங்குகள் எல்லாம் முடிந்து ஊருக்குத் திரும்பும் நாளில் அப்பச்சி மலைக்கு ஓடிப்போனான், அதன் உச்சாணியில் ஏறிக்கொண்டு ‘‘தாத்தோவ்... தாத்தோவ்...” என்று குரல் எழுப்பினான். இவன் குரலுக்கு ஏற்றபடி மரங்களும், செடிகளும் ஆடி மேகங்கள் மலையைச் சூழ்ந்தன. அவன் இருந்த இடமும் மேகக்கூட்டத்தால் நிறைந்தது.

தாத்தா அவனைக் கையினால் தழுவினது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.... “தாத்தோவ் நான் போய்யிட்டு வாறேன்.”

சத்தமாய்க் கூறினான். மேகக் கூட்டங்கள் சூழ்ந்து சுழன்று கொண்டே இருந்தன.

பிரியப்போகும் ஒருவித இறுக்கமான உணர்ச்சி அங்கு நிவியது. லேசான மழைத்துளிகள் ஒரு சில அவன்மீது தெளித்தன. அதைத் தாத்தாவின் கண்ணீர்த் துளிகளாக நினைத்தான் ஜெறி.

“தாத்தோவ் நான் மீண்டும் வருவேன், நான் வளர்ந்து இதன் பக்கத்தில் ஒரு குடிசையையும் போட்டு விட்டு எப்போதும் உன்கூடவே இருப்பேன் தாத்தா’’. மானசீகமாகத் தாத்தாவின் உருவத்தை மனதிலே நினைத்து வேண்டினான். அவன் நினைக்கவும் அவனுக்கு விடை கொடுப்பதுபோல் மேகங்கள் திடீரென்று விலகின. மரங்கள் லேசாக அசைந்தன. குயில்களின் குரல்கள் சோகமாக ஒலித்துக்கொண்டே இருந்தன.

ஜெறியும் இறுக்கமான மனதுடன் மலையை விட்டு இறங்கி நடந்தான். கண்களில் பெருகி நின்ற கண்ணீரைத் துடைத்துவிட்டு மலைக்கு ‘டாட்டா’ காட்டிவிட்டு நடந்தான்.

வண்டி குலுங்கலுடன் நிறுத்தத்தில் நின்றது. உடம்பு குலுக்கலில் ஆடியதால் பழைய நினைவுகளிலிருந்து விடைபெற்றான்.

“ம்... பல மாதங்களுக்குப் பிறகு தாத்தாவைப் பார்க்க போறேன்”, மனதிலே சந்தோசப்பட்டான்.

ஊர்வந்ததும் தாத்தாவீட்டிற்குச் சென்றான். சித்தப்பா கேட்டதற்கு பதில் ஒன்றும் கூறாமல் கொண்டுபோன துணிமணிகளைப் போட்டுவிட்டு





18

அப்பச்சி மலைக்கு நேராக ஓடினான்.

தூரத்தில் பார்க்கும்போது அந்த கிராமத்தில் ஒரு மாற்றம் வந்திருப்பதை உணர்ந்தான். மனதிலே ஒரு வித பயம் பரவத்தொடங்கியது. தொலைவிலே நின்றுபார்த்தால் காலை நீட்டிக் கம்பீரமாகப் படுத்திருக்கும் அப்பச்சி மலையைக் காணவில்லை.

“ஐயோ... மலை எங்கே?” கேட்டுவிட்டு தலை தெறிக்க ஓடினான். அங்கே அப்பச்சிமலை இருந்த இடத்தில் ஒரு பெரிய நீண்ட பள்ளம் மட்டும்தான் இருந்தது. மரம், செடி, கொடிகள் எல்லாம் அழிந்து போயிருந்தன.



எப்போதும் சிலுசிலுவென்று ஓடிக் கொண்டிருக்கும் நீரோடை வறண்டு போயிருந்தது.

“தாத்தா... ஐயோ... தாத்தா... உன்னை கொன்னுட் டாங்களே பாவிகள்...” ஏங்கி ஏங்கி அழுதான்.

அப்பச்சிமலையின் மூக்கோடு மோதி விளையாடிக் கொண்டிருந்த மேகங்கள் இப்போது தலைவிரி கோலமாய் தூரத்தில் ஓடிக்கொண்டிருந்தன.

குழிவிழுந்து கிடக்கும் இடத்தில் காற்று சுழன்று அடித்துக்கொண்டிருந்தது. அதன் ஓவென்ற இரைச்சல் செத்து போனவர்களுக்காக அழும் ஒப்பாரிபோல் கேட்டுக் கொண்டே இருந்தது.

ஜெறியால் இதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. “தாத்தோவ்.... தாத்தோவ்...” என்று அழைத்துக் கொண்டே அங்கும் இங்கும் பைத்தியம்போல் ஓடினான். கண்ணீர் பெருகிக்கொண்டே இருந்தது.

வீடு வந்தான்.

‘‘சித்தப்பா! அப்பச்சிமலை எங்கே?’’ என்று வேதனையுடன் கேட்டான்.

“ஓ... அதுவா... அரசாங்கம் கிரானைட் கற்கள் வெட்டி எடுப்பதற்காகத் தனியாருக்கு குத்தகைக்குக் கொடுத்தது. அவங்கதான் அதைப் பெயர்த்து எடுத்து வெளிநாடுகளுக்கு அனுப்பிட்டாங்க” என்று சித்தப்பா சொல்லவும், ‘‘சித்தப்பா.... அவனுங்க கொலைகாரனுங்க..... நம்ம தாத்தாவைக் கொன்னுட் டானுங்க” திரும்பத் திரும்ப இப்படியே சொல்லிக் கொண்டே இருந்தான். அதன்பின் அவன் அங்கே ஒரு நிமிடம் கூட நிற்கவில்லை. ஊருக்கு வண்டி ஏறினான்.

விடுமுறையைக் கழிக்கப் போனவன் உடனே திரும்பி வந்ததைக்கண்டு தாய், தந்தைக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஜெறி ஓடிப்போய்த் தாயின் மடிமீது முகம் புதைத்து ஏங்கி ஏங்கி அழுதான்.

‘‘அம்மா... என் தாத்தாவைக் கொன்னுட்டாங்க பாவிங்க, தூரோகிங்க, அயோக்கியங்க எல்லா ருமாச் சேர்ந்து என் தாத்தாவைக் கொன்னுட்டாங்க” என்று கூறி அழுதுக்கொண்டே இருந்தான். தாத்தா இறந்தபோது அழாத ஜெறி இப்போது அழுது கொண்டே இருந்தான்.

அவனைப் புரிந்து கொள்ளாத தாயும் தந்தையும் திக்பிரமை பிடித்தவர்களாய் நின்று கொண்டிருந்தனர்.

**குழித்துறை எஸ்.ஜெபமணி**

**குழித்துறை எஸ்.ஜெபமணி**

குழித்துறையைச் சார்ந்தவர். கனல் என்ற பெயரில் நாவல் படைத்து வருகிறார். மேடை நாடகங்கள் வழியாகவும் மக்களோடு பேசுகிறார். சிறுகதை ஆசிரியராக – நாவலாசிரியராக – நாடகாசிரியராக ஜெபமணி வளர்ந்து வருகிறார். 'வெள்ளரிப்பிஞ்சு' என்பது இவருடைய சிறு கதைத் தொகுப்பு.

## செயல்பாடுகள்

- ஜெறியின் பாத்திரப்படைப்பினை ஆய்ந்து குறிப்பெழுதுங்கள்.
- அப்பச்சி மலையை இழந்து மனம் வருந்தும் ஜெறிக்கு 'மலைகளைக் காக்க இணைவோம்' என்ற கருத்தின் அடிப்படையில் ஆறுதல் கடிதம் எழுதுங்கள்.
- பாடப்பகுதியில் வரும் பிறமொழிச் சொற்களைத் தொகுத்து எழுதுங்கள்.

# உடைக்கப்படும் பாறைகளும் மீறப்படும் சட்டங்களும்

பாறைகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. இதனை உணர்ந்த உலக நாடுகளின் சுற்றுச் சூழல் தலைமையகம் "பாறைகளின் வருடம்" என்று ஒரு வருடத்தை ஒதுக்கிப் பாறைகளின் முக்கியத் துவத்தை மக்களிடையே உணர்த்தி வருகிறது. பாறைகள்தான் சூரிய ஒளி, மழை, காற்று போன்ற இயற்கைச் சூழல்களின் காரணமாக உடைந்து மண்ணாக மாறி, நிலப்பரப்பு ஆகியிருக்கிறது.

ஆனால் இன்று நாம் பாறைகளைச் சுற்றுச்சூழல் ஆதாரம் என்று கருதாமல் கண்மூடித்தனமாக அழித்து வருகிறோம். நாம் குளங்கள், காடுகள், நீரோடைகள், நன்னீர் நிலங்கள் இவற்றை அழிப்பதோடு நிற்கவில்லை, பாறைகளையும் பாறைக் குன்றுகளையும் அழித்து அதிலிருந்து எவ்வளவு பணம் கிடைக்கிறது என்று மட்டும் பார்க்கிறோம். இதனால் வரும் பாதகங்களைப் பற்றிச் சிந்திக்கவில்லை.

பாறைகள் வெடிக்கும் ஓசை சட்டவிரோத மென்று அறிந்தும் இதைத் தடுப்பதற்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் யாதொரு நடிவடிக்கையும் எடுப்பதில்லை. ஆனால் மாவட்ட நிர்வாகங்களோ பல பாறை உடைக்கும் மையங்களும் சட்ட ரீதியாகத்தான் இயங்குகின்றன என்று கூறுகின்றன. இந்தப் பாறை உடைக்கும் மையங்களினால் வரும் முக்கியமான தாக்கம் அவற்றிலிருந்து வரக்கூடிய பாறைத் துகள்கள்தான் என எண்ணுகிறார்கள்.

தேசிய மட்டத்தில் பாறை உடைப்பு விழிப் புணர்வு உண்டாகக் காரணம் டில்லியைச் சேர்ந்த எம்.சி . மேத்தா என்ற சுற்றுச்சூழல் வழக்கறிஞர். உச்சநீதிமன்றத்தில் பாறை உடைப்பு சுற்றுச் சூழலுக்குத் தீங்கு விளைவிக்கிறது என்றும் அதனால் டில்லி பொதுமக்கள் ஓசை, பாறைத் துகள்கள் போன்றவற்றால் பாதிக்கப்படு கிறார்கள் என்றும் ஒரு பொதுநல வழக்குத் தொடர்ந்து வெற்றியும் பெற்றார். இதைத் தொடர்ந்து உச்சநீதிமன்றம் டெல்லியைச் சுற்றியுள்ள பாறை வெடிக்கும் மையங்களுக்குத் தடைவிதித்தது.


பாறைத் துகள்களில் சிலிக்கா, கார்நெட், சிலிமினேட், இரும்பு போன்ற பாறை உடைக்கும் மையங்கள் நன்னீர் நிலைகளின் இருப்புகளிலிருந்து 300 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் இருக்க வேண்டும் என்றும் கல் உடைக்கும் மையங்களில் இருந்து வெளிவரும் கனிமம் கலந்த காற்றைத் தண்ணீர் வழியாகத்தான்

வெளியேற்ற வேண்டும் என்றும், பாறைத் துகள்கள் காற்றில் கலக்க அனுமதிக்கக்கூடாது என்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 தெளிவாகக் கூறுகிறது. ஆனால் சில பாறை உடைக்கும் மையங்கள் நன்னீர் நிலங்களிலிருந்து 20 மீட்டர் தூரத்தில் கூட அமைக்கப்பட்டிருக்கின்றன.

சட்டப்படி பாறை வெடிக்கும் மையங்கள் மாவட்ட மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்தும், கனிமம் பாதுகாப்பு இயக்குனரிடமிருந்து அனுமதி பெறவேண்டும். ஆனால் இந்தக் கட்டுப்பாடுகள் கண்காணிக்கப்படுவதில்லை. வேறு ஒரு முக்கிய மான சுற்றுச் சூழல் சீர்கேடு இந்தப் பாறை உடைக்கும் மையங்களில் இருந்து எழும் ஓசையாகும். ஓசை மாசுக்கட்டுப்பாடு (ஒழுங்கு மற்றும் விதிகள் 2000) படி 125 டெசிபலுக்கு மேலாக ஓசையின் அளவு இருக்கக் கூடாது. ஆனால் 250 டெசிபல் வரை பாறை வெடிக்கும் மையங்க ளிலிருந்து ஓசை எழுப்பப்படுகிறது. இதனால் சிறு குழந்தைகளும் முதியோர்களும் பல பாதிப்பு களுக்கு உள்ளாகின்றனர்.

முக்கியமாக நரம்புத் தளர்ச்சி, தூக்கமின்மை எரிச்சல், பாதிப்புகள் ஏற்படலாம். மற்ற ஜீவ ராசிகளான பறவைகள் பாம்புகள் முதலியவையும் இந்த ஓசையினால் தாக்கப்படுகின்றன. பாறைத் தூசியினால் வரும் வேறு ஒரு முக்கியமான தாக்கம், இது விவசாய நிலங்களைத் தரிசு நிலங்களாக்கி விடுகின்றது. இந்தத் தூசு நன்னீர் நிலங்களில் விழுவதினால் நன்னீர் நிலங்களின் செழிப்புத் தன்மை குறைகிறது. இவை நன்னீர் நிலங்களின் ஒரு படலமாகப் படிந்து நுண்ணுயிர் செயல்பா டுகளைத் தடுக்கிறது. மரங்கள், செடி, கொடிகள், வாழைப்பயிர்கள், தென்னை மரங்கள், நெற்பயிர் கள் இலைகளில் இந்தத் தூசிபடிந்து அந்தப் பயிர்கள் தழைக்க மிக முக்கியமான ஒளிச்சேர்க்கை நடைபெறாமல் தடுத்துவிடுகிறது. வேளிமலை சரகத்தில் சமூகக் காடுகளுக்கு மிக அவசியமான மலை அருவிகள் அழிந்து கொண்டிருப்பதால் அந்தப் பாகத்திலுள்ள பசுமை அழிகிறது.

இதைப்போல் விவசாயத்திற்கு இன்றியமையாத குளங்களும், பாறைப் பொடி படிவதினால் அழிந்து கொண்டிருக்கின்றன. இந்தச் செயல்கள் சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 இன்படி சட்ட விரோதமாகும்.



இறைவன் கொடுத்த பாறை என்னும் பரிசை நாம் பேண வேண்டும். இதை அழிக்க நமக்கு உரிமை கிடையாது. இந்த உரிமையைப் பாதுகாக்க அரசு பல சட்டங்களை இயற்றியுள்ளது. இந்தச் சட்டங்கள் பறி போகாமல் அல்லது பலி ஆடுகளாக மாறாமல் காப்பது நம் அனைவரின் கடமையாகும்.

**– பத்திரிகைச் செய்தி**

## வினைமுற்று

புவனா பாட்டு எழுதினாள்.

கண்ணன் பாட்டு எழுதி முடித்தான்.

நித்யா எழுதின பாட்டு நன்றாக இருந்தது.

இவற்றுள் 'எழுதினாள்'. 'எழுதி', 'எழுதின' என்னும் சொற்கள் தொழிலைக் குறிப்பதால் இவை வினைச்சொற்கள் ஆகும். இதில் எழுதினாள் என்பது வினைமுடிந்து நிற்கும் சொல். எனவே இது வினைமுற்று அல்லது முற்றுவினை எனப்படும்.

### வினையெச்சம், பெயரெச்சம்

#### வினையெச்சம்

எழுதி முடித்தான் என்னும் தொடரில் எழுதி என்ற வினை 'முடித்தான்' என்னும் மற்றொரு வினையைக் கொண்டு முடிகிறது. ஆகையால் இது வினையெச்சம் எனப்படும். வினை எஞ்சி நிற்பது வினையெச்சம்.

| | | |
|---|---|---|
| எகா. | நடந்து | பாடி |
| | போய் | உடைந்து |
| | கண்டு | படித்து |

#### பெயரெச்சம்

அவன் எழுதிய பாட்டு என்னும் தொடரில் எழுதிய என்ற வினை பாட்டு என்னும் பெயரைக் கொண்டு முடிவதால்

பெயரெச்சம் எனப்படும். பெயர் எஞ்சி நிற்பது பெயரெச்சம்.

| | | |
|---|---|---|
| எகா | நடந்த | உடைந்த |
| | பாடின | கண்ட |
| | போன | படித்த |
| | பறந்த | |

வினையெச்சம் வினையைக் கொண்டு முடியும். பெயரெச்சம் பெயரைக் கொண்டு முடியும்.



## செயல்பாடுகள்

- அழிந்து வரும் மலைகளைப் பாதுகாக்க நீங்கள் கூறும் பரிந்துரைகளைக் குறிப்பாக எழுதுங்கள்.
- பாறைகளை உடைப்பதால் ஏற்படும் தீமைகளைப் பற்றிச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரிக்குப் புகார் கடிதம் எழுதுங்கள்.
- "மலைகள் நம் வாழ்வாதாரம்" என்ற தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை எழுதுங்கள்.
- உங்களுக்குத் தெரிந்த சில மலைகள் குறித்த வரலாற்று, புராணச் செய்திகளைத் தொகுத்து எழுதுங்கள்.
- பாடப்பகுதியில் வரும் வினையெச்ச, பெயரெச்சச் சொற்களைத் திரட்டுங்கள்.

# அலகு 2

# கொட்டு முரசே...



கலைகள் வளரும் போது பண்பாட்டு மலர்ச்சியும் மனித வாழ்வோடு இயைந்து வெளிப்படுகின்றன. கலைகள் மனித மனங்களை இணைக்கின்றன. ஒற்றுமை உணர்வை வளர்த்து அழகுணர்ச்சியைப் பெருக்கிடும் உன்னதப் பணியாற்றுகின்றன. இவ்வலகு கேரள மக்களின் கலை உணர்வை வெளிப்படுத்துகின்றது.

## முதன்மைக் கற்றல் அடைவுகள்

- விழாக்கள், ஊர்வலங்கள் முதலான நிகழ்ச்சிகளை வருணனை செய்து வருணனைக் குறிப்பு எழுதுகிறார்கள்.
- பண்டைய இசைக் கருவிகளை அறிந்து அவைப் பற்றிக் குறிப்பு எழுதுகிறார்கள்.
- சுய அனுபவங்களின் அடிப்படையில் அனுபவக் குறிப்பு எழுதுகிறார்கள்.
- கலைகள் பண்பாட்டின் அடையாளங்கள் என்பதை அறிந்து அது குறித்துக் கட்டுரை எழுதுகிறார்கள்.

# மேள தாளங்கள்

## திருச்சூர்த் திருவிழா

**வி**ழாக்கள் என்றாலே கொண்டாட்டமும் கும்மாளமும் தானே.. பண்டைக்காலம் முதலே நம்பிக்கைகளின் பேரால் விழாக்கள் கொண்டாடப்பட்டதை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. மனிதன் தனிப்பட்டவனல்லன். சமூகத்தின் ஓர் அங்கமே என்பதை விழாக்கள் உணர்த்துகின்றன. இனம், மொழி, நாடு, வேறுபாடின்றி எல்லா மனங்களிலும் விழாக்கள் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன.

பூரம் என்பது கேரள மாநிலத்தில் கொண்டாடப்பட்டு வரும் ஒரு கோவில் திருவிழா ஆகும். இவ்விழாவின் போது வண்ணங்களும் வாண



வேடிக்கையும் மேளதாளங்களும் என நாடு முழுவதும் குதூகலத்தில் மூழ்கியிருக்கும். குறிப்பாகப் பூரங்களின் பூரம் எனப்படும் திருச்சூர்ப் பூரம் எல்லாப் பூரங்களையும் விடப் பெரியது என்று போற்றப்படுகிறது.

### திருச்சூர்ப்பூரம்

திருச்சூர்ப்பூரம் 200 ஆண்டுகள் தொன்மை வாய்ந்தது. மே மாதத்தில் பூரநட்சத்திர நாளில் இவ்விழா கொண்டாடப்படுகிறது. எனவே இவ்விழா பூரவிழா எனப்படுகிறது. உலகம் முழுதும் இத்திருவிழாவைக் காணத் திரண்டு வரும். "காணாம்போண பூரம் பறஞ்சு அறியிக்கணோ" (காணப்போகும் பூரவிழாவைச் சொல்லித் தெரிய வேண்டுமோ) என்று வழங்கப்பட்டு வரும் பழமொழியாலே இவ்விழாவின் சிறப்புத் தெரியவரும். எட்டு பூரங்கள் ஒன்றாகச் சேர்ந்து இத்திருவிழா நடைபெறுகிறது. கேரளத்திற்கே பெருமைசேர்க்கும் 50க்கும் மேற்பட்ட யானைகளின் அணிவகுப்பும், அமைதியாகத் தொடங்கி, உச்ச கட்டத்தை அடைந்து, பின்னர் முறைப்படுத்தப் பட்ட தொடர்ச்சியாக ஒத்திசையில் முடியும் பஞ்சவாத்தியமும், அதிகாலைப் பொழுதில் நடத்தப்படும் கண்கவர் வாண வேடிக்கையும் உலகில் வேறு எங்குமே ஒன்றாகக் கண்டு களிக்க முடியாதவை. வடக்குநாதன் என்று போற்றப்படும் சிவபெருமானே இவ்விழாவை நேரில் கண்டு களிப்பார் என நம்பப்படுகிறது. பூரத் திருவிழாவுக்கு முன்பு பல வழிபாடுகள் நடத்தப்படும்.



பூமிபூஜை, கால்கோள் எடுத்தல் போன்ற சடங்குகள் முக்கியமானவை. யானை அலங்காரம் மிகச் சிறப்பானது. நெற்றிப்பட்டம் சூட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்ட யானைகள் திருச்சூர் நகரைச் சுற்றி வலம் வரும். இக்காட்சியைக் காண அனைவரும் திரண்டிருப்பார்கள். அதிகாலை தொடங்கி அடுத்தநாள் காலை விடியும்வரை கண்ணுக்கும் செவிக்கும் இன்பம் தரும் இவ்விழா தொடரும்.

### குடைமாற்றம்

திருச்சூர்ப் பூரத்தில் மிகவும் குறிப்பிட வேண்டிய நிகழ்வே குடைமாற்றம். திருவம்பாடி கோவில் தேவியும், பாறமேகாவு கோவில் தேவியும் நேருக்கு நேர் சந்தித்துக்கொள்ளும் ஒரு நிகழ்ச்சியாக இது கருதப்படுகிறது. அலங்கரிக்கப்பட்ட யானைகள் மேல் அமர்ந்து வண்ண வண்ணக் குடைகளை மாற்றிமாற்றி உயர்த்திக் காட்டி ஒரு போட்டிபோல் இரு கோவில் சபைகளும் இதை நடத்தும். இதில் யார் வண்ணக் குடைகளைக் கண்கவர்வண்ணம் நிகழ்த்துகிறார் என்று மக்கள் ஆரவாரத்துடன் உற்றுக்கவனிப்பார்கள்.



ஒவ்வொரு குடை உயர்த்தும் போதும் மூன்றுமுறை வெண்சாமரமும் ஆலவட்டமும் உயர்த்திய பிறகே அடுத்த குடை உயர்த்தப்படும். பகல் பூரம் அதிகாலை வாண வேடிக்கையுடன் நிறைவு பெறும்.

பூரத்திருவிழா வடக்குநாதன் கோவில் வளாகத்தில் நடைபெறும். பல கோவில் உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டாலும் குடைமாற்றம் நடத்துவது திருவம்பாடி, பாறமேகாவு கோவில்களுக்கு மட்டுமே உரித்தானது.

# பஞ்ச வாத்தியம்



பண்டைக் காலம் முதல் இன்றுவரை இசைக்கு உலகம் கட்டுண்டு கிடக்கின்றது. உயிர்கள் மட்டு மல்லாமல் இறைவனும் கூட இசைக்கு மயங்குகிறான் என்றே நம்புகின்றனர் மக்கள். அதனால்தான் வழிபாட்டுத்தலங்களில் எல்லாம் இசையால் இறைவனுக்கு அர்ச்சனைகள் நடைபெறுகின்றன. நமது கேரளத்தில் கோவில்களிலும் விழாக்களிலும் வாசிக்கப்படும் பஞ்சவாத்தியம் எனும் கருவிமேளம் உலகப்புகழ் வாய்ந்தது. ஐவகை இசைக் கருவி களின் தொகுப்பே 'பஞ்சவாத்தியம்'. கருவிகளின் இசை சங்கமம் மனதை மயக்கிடும் வல்லமை வாய்ந்தது.

பஞ்சவாத்தியக் கருவிகளான இலைத்தாளம், கொம்பு, மத்தளம், திமிலை, இடைக்கா.... என்பன பண்டைக்காலம் முதலே பயன்படுத்தப்பட்டுவரும் இசைக்கருவிகள். பஞ்சவாத்தியத்தின் பிரமாதமான மாயாஜால வித்தை என்பது ஐந்து மேளதாளங்களின் கலவையாகும்.

## இலைத்தாளம்



கேரளத்தின் மரபுக் கலைகளில் பண்டைக்காலம் முதலே பயன் படுத்தப்பட்டுவரும் ஓர் இசைக் கருவியே இலத்தாளம். வெண் கலம் எனும் உலோகத்தால் ஆனதும் வட்டமான இலை வடிவமானதுமே இக்கருவி. இதன் மையப்பகுதியில் அமைந்தள்ள துளையில் சரடு கட்டி வைப்பார்கள். சரடுகளைக் கைகளில் பிடித்து இரு இலைத் தாளங்களை ஒன்றோடொன்று தட்டி இசை எழுப்புகின்றனர். கைமணி போன்ற உருவ அமைப்புள்ள இக்கருவி கதைகளி பஞ்ச வாத்தியம், செண்டைமேளம் போன்றவற்றில் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டு இசைக்கரு வியான சிங்கி (ஜால்ரா) இதனுடன் தொடர்புடையது. இது உலோகக் கருவியாகும்.

## கொம்பு (தாரை)

கேரள இசைக்கருவியான கொம்பு வெண்கலத்தால் உருவாக்கப்பட்ட வளைந்த குழல் போன்ற ஒரு துளைக்கருவி யாகும். வாயோடு சேர்த்து வைக்கும் பகுதி சிறுவிரல் அளவுள்ள பருமனை உடையது. நடுப்பகுதி மீண்டும் விரிவாகி அமையும் வாய்ப்பகுதி வளைந்து கொம்பு போன்று அமைந் திருக்கும். இம்மூன்று பகுதிகளையும் தனித் தனியாகக் கழற்றி இணைக்கலாம். இசைக்கும் வேளையில் ஒன்றாக இணைக்கப்படும். பஞ்ச வாத்தியத்தில் கொம்பு முக்கிய பங்கு வகிக்கின்றது. இதை வாசித்திட மூச்சு பயிற்சியும் வாசிப்புப் பயிற்சியும் மிகத் தேவை. இது காற்றுக் கருவியாகும்.



## மத்தளம்

கோவில்களில் இசைக்கப்படும் தோலால் ஆன ஒருவகை இசைக்கருவியே மத்தளம். பலா மரத்தால் இதன் உடல் பகுதி உருவாக்கப்படுகிறது. திறந்த இருவாய்ப்பகுதிகள் காளை, எருது



போன்றவைகளின் தோலால் முறையே வலப்பக்கமும் இடப் பக்கமும் மூடப்படு கிறது. மத்தளம் வீரமத் தளம், தொப்பிமத்தளம் என இருவகைப்படும். சுத்தநாதம் முழங்கிட வீரமத்தளமும், அடைப்பு ஒலிமுழங் கிடத் தொப்பி மத்தளமும் சாதாரண மாகப் பயன் படுத்தப்படுகின்றன. கதைகளியில் மத்தளம் முக்கியமான இசைக் கருவியாகப் பயன்படுகிறது. இது தோல் கருவியாகும்.

## திமிலை (தேமலா)



பஞ்சவாத்தியம் எனும் இசை சங்கமத்தில் மிக முக்கிய பங்கு வகிப்பது திமிலை எனும் இசைக் கருவியே. நடுப்பகுதி பருமன் குறைந்ததும் கொஞ்சம் நீண்ட உருவ அமைப்பையும் கொண்டது. பலாமரத்தில் கடைந்து உருவாக்கப்பட்ட திமிலை யின் வாய்ப் பகுதிகள் காளைத் தோலால் மூடப் படும். மூடப்பட்ட இரு பகுதிகளும் தோல் வார் களால் இழுத்து முறுக்கிக் கட்டப்பட்டு உருவாக்கப் பட்டிருக்கும். தோளில் மாட்டிக் கொண்டு இதன் ஒரு பக்கத்தை இரு கைகளால் தட்டி இசை எழுப்பு கின்றனர். இதுவும் தோல்கருவியாகும்.

## இடைக்கா




கேரளத்தின் பாரம்பரிய இசைக் கருவியே இடைக்கா. இது கோவில் வழிபாடு களில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. இலகுவான சிறுகம்புகளால் வட்ட வடிவமான வாய்ப்பகுதிகளில் தட்டி இசை எழுப்பப்படுகிறது. அழகுக்காக தோரணங்கள் போல் நூல் உருளைகள் வண்ணக்குஞ்சரங்களாகத் தொங்கவிடப்பட்டிருக்கும். ஆடு மாடுகளின் தோலால் வாய்ப்பகுதிகள் மூடப்பட்டிருக்கும். இதுவும் ஒரு தோல் கருவி.



## செயல்பாடுகள்

- திருச்சூர்ப்பூரத் திருவிழாவைப் போல நீங்கள் கண்டுகளித்த திருவிழா ஒன்றினை வருணித்துக் கட்டுரை எழுதுங்கள்.
- இசைக் கலைஞர் ஒருவரிடம் பேட்டிக் காண்பதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.
- தமிழகக் கோவில்களிலும் கேரளக் கோவில்களிலும் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகளை ஒப்பீடுசெய்து குறிப்பு எழுதுங்கள்.
- இசைக் கருவிகளின் படங்களைத் திரட்டி குறிப்பு எழுதுங்கள்.
- நீங்கள் கண்டு களித்தத் திருச்சூர்ப் பூரத் திருவிழாவின் சிறப்பினை உங்கள் நண்பனுக்குக் கடிதமாக எழுதுங்கள்.



# கண்கவர் கட்டடங்கள்

## அதிசய மாளிகை

காலை ஏழு மணிக்கே மாணவ, மாணவியர் பள்ளி முற்றத்தில் கூடிவிட்டனர். சாதாரணமாகத் தாமதமாக வருகின்றவர்கள்கூட அன்று முன்னதாகவே வந்துவிட்டனர். அதற்கு ஒரு காரணம் உண்டு. அன்று அவர்கள் சுற்றுலாச் செல்லவிருக்கின்றனர். சுற்றுலா என்றால் ஆடிப்பாடிக் கூத்தாடும் இன்பச்சுற்றுலாவன்று. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சில இடங்களைப் பார்வையிடுவது கல்விச்சுற்றுலாவின் நோக்கம். ஏழரை மணியளவில் ஆசிரியர் வந்தார். எல்லோர் முகத்திலும் ஆனந்தக் களிப்பு. வருகைப்பதிவு ஒத்துப்பார்த்தல் முதலான ஆரம்ப வேலைகள் முடிந்தபின் சரியாக எட்டுமணிக்குப் பேருந்து புறப்பட்டது. திருவனந்தபுரம் கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை வழியாகப் பயணம். மாணவ, மாணவியர் உஷாராயினர். அப்புறம் பாட்டும் ஆட்டமும் கைத்தட்டலும்தான்.

அரைமணி நேரப் பயணத்திற்குப் பின் மாணவர்கள் சற்று அமைதியாயினர். அப்போது ஆசிரியர் பேசத் தொடங்கினார்.

குழந்தைகளே! நாம் இப்போது பத்மநாபபுரம் அரண்மனையைப் பார்க்கச் செல்கிறோம். இதுபோன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்குச் செல்லும்போது அந்த இடங்களைப் பற்றிய சில வரலாற்றுச் செய்திகளை முன்னரே தெரிந்து வைத்திருப்பது மிகவும் அவசியம். இப்போது சில செய்திகளைச் சொல்கிறேன்.



கவனமாகக் கேளுங்கள் என்றார் ஆசிரியர். மாணவ, மாணவியர் தங்கள் செவிகளைக் கூர்மையாக்கிக் கொண்டனர்.

இந்தியா விடுதலை பெற்று ஒன்பது ஆண்டு களுக்குப் பின்னர்தான், அதாவது 1956 நவம்பர் முதல்நாள் தான் இன்றைய கேரள மாநிலம் உருவானது. அதற்கு முன்னால் கேரளம் திருவி தாங்கூர், கொச்சி, மலபார் என மூன்று தனித்தனி நாடுகளாக இருந்தன. மொழி அடிப்படையில் கேரளம் ஒரு தனி மாநிலமாக உருவானபோது குமரிமாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டது. இதற்குப் பதிலாகப் பாலக்காட்டின் எல்லைப் பகுதியில் தமிழ்நாட்டுடன் இணைந்து கிடந்த சில பகுதிகள் கேரள மாநிலத்துடன் இணைக்கப்பட்டன.

சுமார் ஒன்றரை மணிநேரப் பயணத்திற்குப் பின் திருவனந்தபுரத்திலிருந்து 55 கிலோமீட்டர் தூரத்தைத் தாண்டிப் பேருந்து தக்கலையை அடைந்தது. எல்லோரும் தேனீரும் வடையும் உண்டனர். பேருந்து இடது பக்கமாகத் திரும்பி பத்மநாபபுரம் அரண்மனையை நோக்கி நகர்ந்தது. ஐந்து நிமிடப் பயணம். அனைவரும் அரண்மனை வாசலின் முன் இறங்கினர். முன்னால் ஓடு வேயப்பட்ட பெரிய கட்டடங்கள். எல்லோரும் ஆச்சரியத்தோடு பார்த்தனர். ஆசிரியர் நுழைவுச் சீட்டைப் பெற்று வந்தார். ஆசிரியரைப் பின் தொடர்ந்து மாணவர்கள் கூட்டமாகச் சென்றனர்.

ஐயா, பத்மநாபபுரம் என்ற பெயர் எப்படி வந்தது? என்று கேட்டான் ஒரு மாணவன்.

சரியான கேள்வி. திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோவில் உங்களுக்கெல்லாம் தெரியும். அது திருவிதாங்கூர் அரச வம்சத்திற்குச் சொந்தமான கோயில். பிற்காலத்தில் ஆட்சிபுரிந்த மன்னர்கள் தங்களைப் பத்மநாபனின் தாசர்கள் என்று சொல்லிக் கொண்டே ஆட்சிபுரிந்தனர்.

இதுதான் திருவிதாங்கூரின் முதல் தலைநகரம். திருவிதாங்கூர் அரசர்கள் தீவிரமான பத்மநாப பக்தர்கள். எனவேதான் தங்கள் தலைநகரான இந்த இடத்திற்குப் பத்மநாபபுரம் என்று பெயரிட்டனர். முதலில் இப்பகுதி கல்குளம் என்றும், அரண்மனை அமைந்திருக்கும் இடம் உடையார் வளாகம் என்றும் வழங்கப்பட்டது.

கோட்டையின் மேற்கு வாயில் வழியாக எல்லோரும் உள்ளே நுழைந்தனர். மிகவும் விசாலமான பகுதி. இவ்வரண்மனை ஆறு ஏக்கர் நிலப் பரப்பளவுக்குள் அமைந்துள்ளது என்றார் ஆசிரியர்.

ஐயா, இங்குப் பல்வேறு கட்டடங்கள் உள்ளனவே. இவற்றைக் கட்டிய மன்னர் யார்? இவை எப்போது கட்டப்பட்டன? என்று கேட்டார் ஒரு மாணவி.

இக் கட்டடங்கள் ஒரே அரசரால் ஒரே காலகட்டத்தில் கட்டப்பட்டவை அல்ல. வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு அரசர்களால் கட்டப் பட்டவை. முதல் அரண்மனை 1550 இல் இரவிவர்ம குலசேகரப் பெருமாள் என்பவரால் கட்டப்பட்டது. இவ்வரண்மனை அல்லது கொட்டாரம் தாய்க் கொட்டாரம் என அறியப்படுறது. பின்னர் கி.பி. 1706 – 1758 காலகட்டத்தில் ஆண்ட அனுஷம் திருநாள் மார்த்தாண்டவர்மா என்பவரால் அரண்மனை வளாகம் விரிவுபடுத்தப்பட்டது என்று கூறிவிட்டு ஆசிரியர் மாணவர்களைச் சற்றுக் கௌரவமாகப் பார்த்தார்.

அந்தப் பார்வையின் பொருளை உணர்ந்த கொண்ட மாணவ, மாணவிகள் தங்களிடமிருந்த நோட்டுப்புத்த கத்தையும் பேனாவையும் எடுத்துக் கொண்டனர்.

நடை மாளிகை, பூமுக மாளிகை, பலாமூட்டில் சாவடி, வேப்பின் மூடு கொட்டாரம், தாய்க் கொட்டாரம், பெரிய ஊட்டுப்புரை, ஹோமப்புரை, புதுக்கொட் டாரம், உப்பரிகை மாளிகை, ஆயுதசாலை, தெற்குத்தெரு மாளிகை, பந்தடிக்களம் மாளிகை, அம்பாரி முகப்பு, சந்திரவிலாசம், இந்திரவிலாசம், ஒப்பனைப்புரை, நவராத்திரிமண்டபம், சிறிய மடப்பள்ளி, கம்மட்டம், தேவாரக் கெட்டுக் கோயில், ஆலம்பாறைக் கோயில், தெற்குக் கொட்டாரம் ஆகியவை இங்குள்ள முக்கியக் கட்டடங்கள்.



நடை மாளிகையைத் தாண்டி பூமுக மாளிகை என்னும் இருநிலை மாளிகைக்குள் நுழைந்தனர். வாயிலின் இரு பக்களிலும் மரத்தில் கடைந்து எடுத்த கம்பீரமான இரண்டு ராஜசிலைகள் அவர்களை வரவேற்பதுபோல் காட்சியளித்தன. முகமண்டபம், நாடகசாலை, மந்திரசாலை, மணி மாளிகை இவற்றால் கண்டோர் வியக்கும் வண்ணம் விசாலமாகக் காட்சியளித்தது பூமுக மாளிகை.

மந்திரசாலைக் கண்கவர் ஓவியங்களால் சிறந்து விளங்கியது. கடைந்தெடுத்த சிம்மாசனங்கள் வியக்கவைத்தன. மன்னர்கள் இங்குதான் மந்திர ஆலோசனைகள் நடத்தியதாகக் கருதப்படு கின்றது என்றார் ஆசிரியர்.

மந்திரசாலையின் வடக்குப் பகுதியில் ஒரு மணிமேடை காணப்பட்டது. அதுவும் மரச் சிற்பங்களால் தலைநிமிந்து நின்றது. இங்கு மணிக்கொரு முறை முழங்கும் மணிநாதம் மூன்று கிலோமீட்டர் சுற்றளவில் கேட்குமாம் என்றார் ஆசிரியர். மாணவர்கள் ஆச்சரியத்துடன் மணி மேடையைப் பார்த்தனர்.

பின்னர் 'ட' வடிவில் அமைந்திருந்த பலாமூட்டில் சாவடியைப் பார்த்துவிட்டு, அதே வடிவில் இருந்த வேப்பின் மூடு கொட்டாரத்திற்குள் நுழைந்தனர். அங்கிருந்த பள்ளியறையைப் பார்வையிட்டனர். பள்ளியறையைத் தொட்டிருந்த சிறு அறையைப் பார்த்ததும் மாணவர்கள் ஒருவரையொருவர் பார்த்துச் சிரிக்கத் தொடங்கினர்.

இதில் சிரிக்க என்ன இருக்கிறது? அதன் செய் திறனைப் பாருங்கள் என்றார் ஆசிரியர்.

அதைக் கேட்டதும் மீண்டும் சிரிப்பு வந்தது. ஆனாலும் அடக்கிக் கொண்டனர்.

அது ஒரு கழிப்பிடம். அதன் நடுவே கருங்கல்லால் கழிப்பிடம் வடிவமைக்கப் பட்டிருந்தது.

பின்னர்த் தாய்க் கொட்டாரத்திற்குள் புகுந்தனர். இந்த அரண்மனை வளாகத்தில் இதுதான் மிகவும் பழமையானது. பிரசித்தமான நிலவறையும் குகைவழியும் இங்கு உள்ளன. குகைவழி இப்போது மண்மூடி விட்டது. இதன் மேல்மாடியில் எல்லா வசதிகளும் உடைய பள்ளியறை உள்ளது. ஆசிரியர் தொடர்ந்து விளக்கினார். பின்னர், தாய்க் கொட்டாரத்தில் மிகவும் அழகு வாய்ந்ததும் கவர்ச்சிமிக்கதுமான ஏகாந்த மண்டபத்தை அடைந் தனர். திருவிதாங்கூர் அரசர்கள் ஆண்டுதோறும் 41 நாட்கள் ஏகாந்த பஜனை நடத்துவது இங்குதான்.

அடுத்தது ஊட்டுப்புரை (அன்னதான மண்டபம்) ஒரே நேரத்தில் 2000 பேர் ஒன்றாக அமர்ந்து



உணவு உண்ணும் அளவுக்கு அந்த அறை நீளமாகவும் அகலமாகவும் இருந்தது. அறையின் ஓரத்தில் ஆளுயரச் சீனப் பரணிகள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. மாணவர்கள் சென்று பரணிக்குள் எட்டிப் பார்த்தனர்.

'ஐயா, பகைவர்கள் படையெடுத்து வந்தால் பதுங்குவதற்காகவா இந்தப் பரணிகள் வைக்கப் பட்டுள்ளன' என்று கேட்டான் ஒரு மாணவன். அனைவரும் சிரித்தனர்.

''அலிபாபாவும் நாற்பது திருடர்களும் கதை நினைவுக்கு வந்துவிட்டதா? இவை பதுங்கு பரணிகள் அல்ல. இங்கு உணவருந்த வருபவர் களுக்கு விளம்புவதற்கான ஊறுகாய் பாதுகாத்து வைக்கும் பரணிகள் இவை'' என்று ஆசிரியர் கூறியதும் அனைவரும் வியப்படைந்தனர்.

தொடர்ந்து உப்பரிகை மாளிகைக்குச் சென்றனர்.

ஓவியக் கலையின் சிற்பக் கலையின் கருவூலமாக விளங்கிய உப்பரிகை மாளிகை நான்கு மாடிகளாக அமைந்திருந்தது. அங்கே வித்தியாசமான ஒரு கட்டில்.

'ஐயா இதென்ன? இந்தக் கட்டில் மரத்துண்டுகளால் செய்யப்பட்டுள்ளதே!' என்று கேட்டான் ஒரு மாணவன்.

'இதுதான் மூலிகைக் கட்டில். 64 வகையான மூலிகை மரத்துண்டுகளால் இது செய்யப்பட்டுள்ளது' என்றார் ஆசிரியர். பின்னர் மரத்தால் செய்யப்பட்ட ஏணிப்படிகள் வழியாக மேல் மாடிக்குச் சென்றனர். நான்காவது மாடியின் உள்ளே நான்கு சுவர்களும் சுவரோவியங்களால் அழகுபடுத்தப்பட்டிருந்தன. அங்கு வேலைப்பாடுகள் அமைந்த அழகுக்கட்டில் ஒன்றும் காணப்பட்டது. அந்த அறைதான் ஸ்ரீ பத்மநாபனின் பள்ளியறையாகக் கருதப்பட்டது. அறையின் மேற்குப் பக்கத்தில் ஒரு பீடத்தின் மேல் அரசரின் உடைவாள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது. உப்பரிகை மாளிகையின் அந்தப்புரத்தில் இரண்டு பெரிய ஊஞ்சல்களும் ஆளுயரக் கண்ணாடியும் காணப்பட்டன. அனைவரும் கண்ணாடியில் தங்கள் முகத்தைப் பார்த்துத் தலைமுடியைச் சரிசெய்து கொண்டனர். அங்கு மிங்கும் பார்த்துவிட்டு ஓரிருவர் ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடத்தொடங்கினர். ஆசிரியர் 'கூடாது' என்று அவர்களை எச்சரித்தார்.



தொடர்ந்து நவராத்திரி மண்டபத்தை அடைந்தனர். அங்கு அழகாக ஒரு சரஸ்வதி கோயில் இருந்தது. பத்மநாபபுரம் அரண்மனையில் சிறப்புச் சிறப்பு வாய்ந்த அழகு மண்டபம் நவராத்திரி மண்டபம். இதற்கு இணையான இன்னொரு மண்டபம் கேரளத்தில் மட்டுமல்ல இந்தியாவிலே இல்லை என்பர். நவராத்திரி விழாவை ஒட்டி இங்குப் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெறும் என்றார் ஆசிரியர். மாணவ, மாணவிகள் மிகுந்த ஆச்சரியத்துடன் மண்டபத்தைச் சுற்றிப் பார்த்தனர்.

'ஐயா, இங்குப் பல கட்டடங்கள் இருந்தாலும், கீழே இறங்காமலேயே எல்லாக் கட்டடங்களையும் பார்த்துவிட்டோமே' என்றார் ஒரு மாணவர்.



சரிதான். நீ நன்றாகக் கவனித்திருக்கிறாய். இங்குள்ள எல்லாக் கட்டடங்களின் இரண்டாவது மாடிகளும் ஒன்றொடொன்று தொடர்புடையன. ஏதேனும் ஒரு கட்டடத்தின் இரண்டாவது மாடிக்குச்



சென்றுவிட்டால் வெளியே வராமலேயே எல்லாக் கட்டடங்களுக்கும் சென்றுவிடலாம். இதன் கட்டட அமைப்பு அப்படி என்றார் ஆசிரியர்.

இரண்டாவது மாடியின் இன்னொரு பக்கத்தில் கலைத்திறன் வாய்ந்த ஒரு வாசலைத் தாண்டி உள்ளே சென்றால் அழகான ஓர் அறை. அதுதான் அந்தப்புரம். பழமையின் தனிமை நிறைந்து நிற்கும் அறை. இரண்டு பெரிய கண்ணாடிகளையும் இரண்டு தூக்கு மஞ்சங்களையும் வேலைப்பாடுகள் அமைந்த இரட்டைக் கட்டில்களையும் அங்குக் காணலாம். எல்லோரும் அந்த அறையின் தரையையே பார்த்துக் கொண்டு நின்றனர். கறுப்புத்தரை. ஆனால் கண்ணாடிபோல் பளபளத்தது.

'முட்டைக்கரு, கரிப்பொடி, எண்ணெய் முதலான பொருட்களைப் பயன்படுத்திப் பலபேர் பலநாட்கள் தேய்த்துத் தேய்த்து உருவாக்கியது இத்தரை' என்றார் ஆசிரியர்.

அரண்மனையின் இன்னொரு பக்கம் தொல் பொருள் கண்காட்சிசாலை ஒன்று அமைக்கப் பட்டிருந்தது. இது 1994இல் அமைக்கப்பட்டது என்றாலும் பழைய கட்டட அமைப்பிலேயே கட்டப்பட்டிருந்தது. மரச் சிற்பங்கள், கற்சிற்பங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள், பலவகையான ஆயுதங்கள் போன்ற ஏராளமான பழம்பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. ஆசிரியர் அவற்றையெல்லாம் விளக்கினார்.

இன்னொரு பக்கத்தில் கால்பந்தைவிடச் சற்று பெரிய அளவில் ஓர் இரும்புருண்டை காணப் பட்டது. மாணவர் இருவர் ஓடிச்சென்று அதைத் தூக்க முயன்றனர். முடியவில்லை. பின்னர் நான்கைந்து பேர் சேர்ந்து தூக்கிப் பார்த்தனர். அசைக்கக்கூட முடியவில்லை. கூடிநின்றவர்கள் சிரித்தனர்.

'இது என்ன ஐயா'? என்று கேட்டார் ஒரு மாணவி.

அக்காலத்தில் படைவீரர்கள் தேர்வுக்கான போட்டிக்காக இது வைக்கப்பட்டது. யார் இதை எடுக்கிறார்களோ அவர்களே படை வீரர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்றார் ஆசிரியர்.

"கடவுளே!" என்று யாரோ பெருமூச்சு விடுவது கேட்டது.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னுள்ள ஒரு காலகட்டத்திற்குச் சென்று திரும்பிய உணர்வு எல்லோர் முகத்திலும் தெரிந்தது. தங்கள் முன்னோர் களின் கட்டடக் கலைத்திறனை நினைத்து



ஆச்சரியப்பட்டனர். அப்போது ஆசிரியர், "குழந்தைகளே, இப்போது பார்த்த பத்மநாபபுரம் அரண்மனை தமிழ்நாட்டின் எல்லைக்குள்

இருந்தாலும் இதனைப் பராமரிப்பதற்கும் பாதுகாப்ப தற்குமான உரிமை கேரள அரசுக்கு உரியது'' என்றார். அதைக் கேட்டதும் மாணவ, மாணவிகள் பெருமை அடைந்தனர்.

மதிய உணவிற்குப் பின் புறப்படத் தயாராயினர். களைப்பு இருந்தாலும் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தின் மகிழ்ச்சியில் அவர்கள் அனைத் தையும் மறந்தனர். ஆனாலும் அவர்களின் உள்ளங் களில் மறக்கமுடியாத அனுபவங்கள். பேருந்து அனந்தபுரிக்குத் திரும்பியது.

**- பணிமனைப் படைப்பு**

**திருமலை நாயக்கர் அரண்மனை** அல்லது திருமலை நாயக்கர் மகால் என அழைக்கப்படும் அரண்மனை மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களில் ஒருவரான திருமலை நாயக்கரால் கி.பி. 1636 ஆம் ஆண்டில் கட்டுவிக்கப்பட்டது. மதுரையில் அமைந்துள்ள இக்கட்டடம், புகழ் பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோயிலிலிருந்து சுமார் 2 கிலோமீட்டர் தென்கிழக்குத் திசையில் அமைந்துள்ளது. இத்தாலியக் கட்டடக் கலைஞர் ஒருவரால் வடிவமைக்கப்பட்டதாகக் கருத்தப்படும் இக்கட்டடத்தின் நான்கில் ஒரு பகுதியே தற்போது எஞ்சியுள்ளதாகக் கருதப்படுகின்றது.

**அமைப்பு**

இந்து, முஸ்லீம் கட்டடக் கலைப் பாணிகள் கலந்து அமைந்த இந்தோ சரசனிக் பாணி என அழைக்கப்படும். கட்டடக்கலைப் பாணியில் வடிவமைக்கப்பட்ட இந்த அரண்மனை, அக்காலத்தில் இரண்டு பகுதிகளைக் கொண்டதாக அமைந்திருந்தது. ஒன்று சொர்க்க விலாசம் என்றும் மற்றது ரங்க விலாசம் என்றும் அழைக்கப்பட்டன. சொர்க்க விலாசம் மன்னரின் வசிப்பிடமாகவும், ரங்க விலாசம் அவரது தம்பியான முத்தியாலு நாயக்கரின் வசிப்பிடமாகவும் இருந்தது.

இந்த அரண்மனைத் தொகுதியில், இசை மண்டபம், நாடக சாலை, பல்லக்குச் சாலை, ஆயுத சாலை, வழிபாட்டிடம், வேறு அரச குடும்பத்தினர்க்கும், பணியாளர்களுக்குமான வசிப்பிடங்கள், அந்தப்புரம், பூங்காக்கள், தடாகங்கள் போன்ற பல்வேறு பகுதிகள் அடங்கியிருந்தன.



## செயல்பாடுகள்

- கலைகள் மக்களின் அழகுணர்ச்சியின் வெளிப்பாடுகள் என்பது குறித்து கட்டுரை எழுதுங்கள்.
- வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களுக்குச் சென்று வந்த உனது அனுபவத்தை நண்பனுக்குக் கடிதமாக எழுதுங்கள்.
- உங்கள் ஊர்த் திருவிழா பற்றி வருணனைக் கட்டுரை எழுதுங்கள்.



# மலையாளக் கரையோரம்

## மலையாளக் காற்றே வா

**கா**ற்றே வா
மலையாளக் காற்றே வா

இளங்காலைப் போதில்
தெருவே மணக்கவரும் பூக்காரிபோல்
வாசனை நடைபோட்டு வா

தாய்வீடு வரும்
செல்லமகள் உனக்கு
அடையா நெடுங்கதவாய்த்
திறந்தே கிடக்கும்
பாலக்காட்டுக் கணவாய்.

அரபிக் கடலின் நீலச் சுரங்கத்தில்
புதையல் எடுத்து
திமிரோடு கரையணைக்கும்
அலைச்சுகத்தை அள்ளிவா

சங்கம்புழைக் கவிதைகள் போல்
அடர்ந்து செறிந்த தேக்குமரக் காடுகளின்
தோளில் உராய்ந்து வா

தென்னை மரங்களைக் கதகளி ஆடவிட்டு
மிளகுக் கொடிகளோடு
கண்ணாமூச்சி ஆடிவா
பச்சைப் கிளிகளைப் போல்
பலா இலைகள் பறக்கவும்
மஞ்சள் கிளிகளைப் போல்
தாழப் பூக்கள் சிறகடிக்கவும்
விந்தைகள் செய்யும் மோகினி வா

ஆடி மாதம்
தமிழ் நாடே வெயிலில் கிறங்கும்
அப்போது உன் தோளிலிருந்து
எம் கணவாய் வாசலில்
முகில் தங்கம் இறங்கும்

பாலக்காட்டு மணியின்
மிருதங்க ஆவர்த்தனமாக
எரிமேலிப் பேட்டைத் துள்ளலாக
பளிங்கு மழைப்பந்து
விளையாடி வருகிறாய்

தாகித்த எங்கள் மண்ணுக்கு
அம்பலப்புழைப் பால் பாயசமாகிறாய்

என்னென்ன கொண்டு
வந்தனை காற்றே!

ரோமானியர்களோடு கை கோர்த்து
அன்றொரு காலம்
வெள்ளியும் தங்கமும்
விதைத்துப் போனாய்

விம்மியழும் தேவகியைக்
குலசேகரப் பெருமாளோடு
கூட்டிக்கொண்டு வந்தாய்
சேரமான் பெருமாளின்
ஈரச் சொற்களால்
ஆதியுலா நடத்தினாய்
காட்டுப் யானையின் தந்தம் போல்
தத்துவக் கூர்மை பூத்த சங்கரனை
இடுப்புப் பிள்ளையாய்
எடுத்து வந்தாய்

சாதி இருட்டைத் தகர்த்த
கேரளத்து ஞாயிறு
ஸ்ரீ நாராயண குருவின்
தேவாரங்களோடு
குருவின் ஆத்ம தரிசனக் கண்ணாடியாய்
மலையாளக் கவிதையில் பிரதிஷ்டையான
குமாரன் ஆசானின் சிம்ம கர்ஜனையையும்
ஏந்தி வந்து தந்தாய்

நீலக் கடலோரம்
கருத்தம்மா அழுதகுரல்
காயம் சுமந்து வந்தாய்
மனப்புண் தழும்பாகக்
கானராக கந்தருவன்
ஏசுதாஸ் சிந்தும் இசையமுதில்
கரைந்து கரைந்தெம்மைக்
காணாமல் போக வைத்தாய்

வைகை பெருகிவரப்
பெரியாற்றில் தேங்கிநின்றாய்
கோவை களைப்பாறச்
சிறுவாணியால் விசிறினாய்
பரம்பிக் குளத்தால் நெஞ்சில்
பச்சை பிடிக்க வைத்தாய்
இத்தனையும் செய்தாய்
மலையாளப் பூங்காற்றே
என்ன கைம்மாறு செய்தோம்?





நீ வரும்
கணவாய்ப் பாதையில்
உன்னை வரவேற்கப்
பளிங்குக்கல் பதித்து
அதன் மேல்
பட்டு விரித்தது போல்
ஓர் இளம் நதியை - ஆழியாற்றை
அன்போடு அனுப்பி வைத்தோம்.

அதிசயம் பார்....
நல்லோர்க்குச் செய்த உபகாரம்
பன்மடங்கு பெருகுமென்பார்

உனக்காக விரித்த நடை பாவாடை
அந்தச் சின்னஞ்சிறு நதி
கேரளத்தின் சரித்திரத்துச் சீதனமாய்க்
கலைநதியாய்க் குலதனமாய்ப் பாரதப் புழை யாயிற்று.

வள்ளுவன் சொன்னது போல்
தினைத் துணை நன்றியைப்
பனைத் துணை ஆக்கினாய்
வாழ்க நீ
மலையாளக் காற்றே

**-சிற்பி பாலசுப்பிரமணியம்**

### சிற்பி



மரபில் வேரூன்றிப் புதுமையில் கிளை பரப்பி, கவிதை, நாடகம், குறுங்காவியம், மொழிபெயர்ப்பு, திறனாய்வு எனத் தமிழிலக்கியத் திசைகளில் விழுதிறக்கி நிற்கும் கவி விருட்சம் சிற்பி. க.நா.சு நடத்திய இலக்கிய வட்டம் இதழில் புதுக்கவிதை எழுதியவர். சிரித்த முத்துக்களில் (1968) பாடிய கவிஞர், ஒரு கிராமத்து நதி என்னும் கவிதை நூலுக்காக மத்திய சாத்திய அக்காதமி விருது பெற்றவர்.

## செயல்பாடுகள்



- கவிதையில் வரும் கேரளக் கலைகளை வரிசைப்படுத்திக் குறிப்பு எழுதுங்கள்.
- கீழ்வரும் பகுதிக்கான இரசனைக் குறிப்பு எழுதுங்கள்.

"நீலக் கடலோரம்
கருத்தம்மா அழுதகுரல்
காயம் சுமந்து வந்தாய்
மனப்புண் தழும்பாகக்
கானராக கந்தருவன்
ஏசுதாஸ் சிந்தும் இசையமுதில்
கரைந்து கரைந்தெம்மைக்
காணாமல் போக வைத்தாய்"

## கலைகளில் ஒற்றுமை

### திருவாதிரைக்களி

திருவாதிரைக்களி கைகொட்டிக்களி என்றும் அறியப்படுகிறது. இது கேரளத்தின் மிகத் தொன்மையான நாட்டுப்புறக் கலை வடிவமாகும்.



இது பெண்கள் வட்டமாகக் கூடிநின்று ஆடும் ஆட்டமாகும். விழாக்காலங்களில் வீட்டு முற்றத்தில் இக்கலை நிகழ்த்தப்படுகிறது. கேரளத்தின் பாரம்பரிய உடையுடன் சிவபெருமான் பார்வதி தேவியைத் திருமணம் செய்ததை நினைவு றுத்தும்படி திருவாதிரை ஆடப்படுகிறது.

### ஒப்பனை

ஒப்பன அல்லது ஒப்பனைப் பாட்டு என்பது கேரளத்தின் இசுலாமிய மாப்பிளைச் சமுதாயத்தி னரின் ஒரு கலைவடிவம். திருமண நற்சடங்குகளின் ஒரு பகுதியாக இது நடைபெறுகிறது. மலப்புறம், கோழிக்கோடு, கண்ணூர் ஆகிய வடகேரளப் பகுதிகளில் இக்கலை பெரிதும் பேணப்படுகிறது. ஒப்பனை என்பதற்கு அழகுபடுத்தல் என்பது பொருள். அழகான அலங்காரத்துடன் மணப் பெண்ணைச் சுற்றித் தோழிகள் வட்டமிட்டு ஆடுவர். மணமகனுக்கும் சில இடங்களில் ஒப்பனை நடைபெறும்.



### மார்க்கங்களி

கேரளத்தில் கிறித்தவர் நிகழ்த்தும் கலைகளில் மார்க்கங்களியும் ஒன்று. கி.பி.52இல் கேரளத்திற்கு வந்ததாகக் கருதப்படும் தோமா ஸ்லீஹாவின் வரலாற்றை நினைவுகூர்ந்து பாடப்படும் பாடலை



மார்க்கங்களிப்பாட்டு என்பர். முன்னர், ஆண்கள் மட்டுமே நிகழ்த்தி வந்த இக்கலையில் தற்போது பெண்களும் பங்குபெறுகின்றனர். பள்ளிகளிலும், கலைப்பள்ளிகளிலும் பெண் குழந்தைகள் இதை நிகழ்த்துகின்றனர். பாரம்பரியக் கிறித்துவ உடை (வெள்ளை உடை) அணிந்து ஆடுவர்.


– மனோரமா பத்திரிகைச் செய்தி

## செயல்பாடுகள்

- கேரளக் கலையான திருவாதிரைக்களியைத் தமிழகக்கலையான கும்மியுடன் ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுங்கள்.
- உங்களுக்குப் பிடித்த கலை ஒன்றினைப்பற்றி விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.
- பலவிதமான கேரள, தமிழகக் கலைகளின் புகைப்படங்களைத் திரட்டிப் படத் தொகுப்புத் தயாரியுங்கள். அது குறித்து எழுதுங்கள்.
- பள்ளி இலக்கிய மன்றம் சார்பில் கலை விழா நடைபெற உள்ளது. இவ்விழாவை பொது மக்கள் அறிந்துகொள்ளுமாறு விளம்பரம் தயாரியுங்கள்.
- கலைகளின் வளர்ச்சியில் ஊடகங்களின் பங்கு என்ற தலைப்பில் சொற்பொழிவு ஒன்று தயாரியுங்கள்.
- கேரளம் "கடவுளின் சொந்த நாடு" எனப் போற்றப்படுகிறது. இதற்கான காரணங்களைக் குறிப்பாக எழுதுங்கள்.

# அலகு 3


# இலக்கியப் புதையல்




இலக்கியங்களைக் காலத்தின் கண்ணாடி என்பர். காலந்தோறும் மக்களின் எண்ணங்கள் மாறுபடும் போதெல்லாம் இரசனைக்கேற்பப் படைப்புகளின் தன்மையும் மாறுபடுகிறது. நம் தமிழ் மொழி மிகப் பழமையானது; அளவற்ற சுவையான இலக்கியச் செல்வங்களைத் தன்னிடத்தே கொண்டது. சங்கச் செய்யுள்கள் முதல் இன்றைய ஹைகூக் கவிதை வரையிலான படைப்புகள் வெளிப்படுத்தும் பல் சுவைகளையும் அள்ளிக் கொடுத்து நம்மைக் கவர்கிறது இவ்வலகு.

## முதன்மைக் கற்றல் அடைவுகள்

- கருத்தரங்கம், பட்டிமன்றம் போன்றவற்றில் பங்கு பெற்றுத் தொகுப்புரை வழங்குகிறார்கள்.
- மரபுக்கவிதை, புதுக்கவிதை இவற்றிற்கு இடையேயான வேறுபாடுகளைக் கண்டறிந்து எழுதுகிறார்கள்.
- படைப்பிலக்கியங்களில் இடம்பெறும் உவமை, உருவகம் முதலியனவற்றைக் கண்டறிந்து எழுதுகிறார்கள்.



# யாமறிந்த மொழிகளிலே...

## நமது தாய்மொழி

மக்கள் அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாத சாதனமாயிருப்பது மொழி. மொழியே மக்களை விலங்கினின்று வேறுபடுத்துவதாகும். இப்பொழுது உலக மக்களால் ஆயிரக்கணகான மொழிகள் பேசப்படுகின்றன. எம்மொழி எவ்வினத்தவரால் வழிவழியாகப் பேசப்படுகின்றதோ அம்மொழி அவ்வினத்தவர்க்குத் தாய்மொழி என்று சொல்லப் படும். ‘காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு’ என்பது போல் ஒவ்வொருவருக்கும் அவரவர் தாய்மொழி மதிப்பிற்குரியதே.




நம் தாய்மொழியாகிய தமிழ் இன்ன காலத்தில் தோன்றியதென்று வரையறுக்க முடியாத அத்துணைப் பழமைவாய்ந்ததாகும். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களையும், அவற்றினும் முந்தியதாகிய தொல்காப்பியத்தையும் நோக்குமிடத்துப் பல்லா யிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் உயரிய நிலையை அடைந்துள்ளமை புலனா கின்றது. தமிழ் மிக்க இனிமையுடைய மொழி என்றும், இலக்கண வரம்புடைய மொழியென்றும் தொன்று தொட்டுப் பலராலும் பாராட்டப் பெற்று வருகிறது. பழைய புலவர்கள் தமிழ் மொழியைக் குறிக்கும்போ தெல்லாம் அதன் பெயரை மட்டும் கூறாது, செந்தமிழ், பைந்தமிழ், மென்றமிழ், இன்றமிழ் என இவ்வாறாக யாதேனும் ஓர் அடைமொழி கொடுத்தே வழங்கி வந்திருக்கின்றனர்.

சுப்பிரமணிய பாரதியார், ‘யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்’ என்று பலமொழிகளோடு ஒப்பிட்டு நோக்கித் தாமறிந்த உண்மையை உரைத் துளாரன்றோ? தமிழ் இங்ஙனம் இனிமை உடையதானதால் தமிழ் என்ற சொல்லுக்கே இனிமையென்ற பொருளும் உளதாயிற்று! ஆனால் தமிழ் இனியது என்று பிறர் கூறக் கேட்டதனாலேயே அதன் இனிமை புலப்படமாட்டாது. கற்கண்டு சுவை மிக்கதென்று கேட்டவளவில் அதன் சுவையை உணர முடியுமா? அதனை வாயிலிட்டுச் சுவைத்து உண்ணும் பொழுதன்றோ அதன் இன்சுவை புலனாகும்? அது போல் தமிழைப் பலகாலும் கற்றும் கேட்டும்

சிந்தித்தும் உரைத்தும் ஆராய்ந்தும் துய்க்கும் பொழுதே அதன் இனிமை மிகுதியும் புலனாவதாகும். தமிழ் தன் இனிமையால் கடவுளரையும் வயமாக்கும் இயல்பினதாதல் பற்றியே பரம்பொருளாய் இறைவனைப் பாடி அவனருளைப் பெறுவதற்குத் திருஞானசம்பந்தர் முதலிய நாயன்மார்களும், சடகோபர் முதலிய ஆழ்வார்களும், பட்டினத்தார், தாயுமானவர் போன்றோரும் தாய்மொழியாம் தமிழைக் கருவியாகக் கொண்டு பாடியுள்ளார்கள். அவர்கள் பாடிய அத்திருப் பாடல்கள் இசையோடும், பொருளுணர்வோடும் திகழ்கின்றன. இன்று நாம் பாடினும் அவை நம்மை இன்ப வெள்ளத்திலே திளைக்கச் செய்கின்றன.

சங்கவிலக்கியங்களாகிய எட்டுத்தொகை, பத்துப் பாட்டுகளிலிருந்து அக்காலத்தில் கல்வி எவ்வளவு பரவியிருந்ததென்பதும், வேளாண்மை, வாணிகம், கைத்தொழில்கள் எங்ஙனம் ஓங்கியி ருந்தன வென்பதும், அரசியல், சமயநிலை, ஒப்புரவொழுக்கம் என்பன எத்தகைய நன்முறையில் விளங்கினவென்பதும், தமிழர்களுடைய காதல், மானம், வீரம், வண்மை, நீதி, சான்றாண்மை முதலியனவும் நன்கு அறியப்படும். திருக்குறள் என்னும் தெய்வச் செழுந்தமிழ் மறையானது தமிழர் தனி நாகரிகத்தின் ஒப்பற்ற அடையாளம்.

சிலப்பதிகாரம், சிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம் முதலிய காப்பியங்களோ ஒன்பான் சுவையும் பெய்துவைத்த சுவைப்பெட்டகங்கள்.

உலகிலுள்ள யாதொரு மொழியும் தோன்றிய நாள்தொட்டு ஒரே தன்மையாய் இருந்து வருவதன்று. ஒரு குழந்தை பிறந்து வளர்ந்து உயர்நிலையடைவது போன்றே மொழியும் தோன்றி வளரும் இயல்பினதாகும். அது வழக்கற்ற நிலையை எய்தின் ஒருகால் அது ஒரே தன்மையை உடையதாகலாம். வழக்காறுடைய உயிருள்ள மொழிகள் யாவும் காலப்போக்கிற்கேற்ப வேறுபடுதல் இயல்பே, தமிழ் இவ்விதிக்கு விலக்கானதன்று.

காலத்திற்கேற்ப மொழி பல்வேறு மாறுதல்களை அடைகிறது. தமிழ் மொழியும் பல மாறுதல்களை அடைந்தும் இன்றளவும் உயிருள்ள வழக்காறுடைய மொழியாகவே திகழ்கின்றது. என்றும் வளரும் இளமைத் தமிழென்று போற்றப்படுவதும் அதனாலேயே. உலக மொழிகளில் எல்லாம் ஊடுருவித் தொன்மை உணர்த்தும் அருந்தமிழாம் நம்தமிழைப் போற்றி வளர்த்தல் நம் கடமையன்றோ...

**– ந. மு. வேங்கடசாமி நாட்டார்**

### நாயன்மார்கள்

சிவபெருமானை வழிபடும் நெறி சைவம் எனப்படும். சிவனடியார்களை நாயன்மார்கள் என்று அழைப்பர். நாயன்மார்கள் அறுபத்து மூவர் ஆவர். இவர்கள் பாடிய பாடல்கள் பன்னிரு திருமுறைகள் என அழைக்கப் படுகின்றன.

கேரளத்தைச் சேர்ந்த நாயனார் சேரமான் பெருமாள் நாயனார். நாயன்மார்களில் ஒரே ஒரு பெண் காரைக்கால் அம்மையார் ஆவார்.

### ஆழ்வார்கள்

திருமாலை (விஷ்ணு) வழிபடும் நெறி வைணம் எனப்படும். வைணவ அடியார் களை ஆழ்வார்கள் என்று அழைப்பர். ஆழ்வார்கள் பன்னிரண்டு பேர். இவர்கள் பாடிய நாலாயிரம் பாடல்கள் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்று அழைக்கப் படுகிறது.

கேரளத்தைச் சேர்ந்த ஒரே ஆழ்வார் குல சேகர ஆழ்வார். ஆழ்வார்களில் ஒரே ஒரு பெண்மணி ஆண்டாள்.

**ந. மு. வேங்கடசாமி நாட்டார்**



இன்னா நாற்பது, களவழிநாற்பது, கார் நாற்பது, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி ஆகிய நூல்களுக்கும், திருவிளையாடல் புராணத்திற்கும் நல்லுரை கண்டு உரைவேந்தர் என அழைக்கப்பட்டார். வேளிர் வரலாறு, நக்கீரர், கபிலர், கள்ளர் சரித்திரம், கண்ணகி வரலாறு, சோழர் சரித்திரம் ஆகிய ஆய்வுப் பெருநூல்கள் இவரால் எழுதப்பட்டன.

## செயல்பாடுகள்

- ‘தமிழ் என்றால் இனிமை’ என்ற தலைப்பில் இலக்கிய மன்றத்தில் உரையாற்றச் சொற்பொழிவு உரை தயாரியுங்கள்.
- “காலந்தோறும் மொழி மாறுபடுகிறது” என்பதனை ஆதாரங்களுடன் விளக்கி எழுதுங்கள்.

## தலைமை தாங்கும் தமிழ்

படுத்திருக்கும் வினாக்குறிபோல் மீசை வைத்த
பாண்டியர்கள் வளர்த்தமொழி; கடலின் நீரை
உடுத்திருக்கும் உலகத்தில் தலைமை தாங்கும்
உயர்ந்தமொழி; வெளிநாட்டார் மொழிக்குச் சொற்கள்
கொடுத்திருக்கும் வள்ளல்மொழி; வன்மை மென்மை
கொண்டமொழி; குமரிமொழி; காப்பி யங்கள்
வடித்திருக்கும் ஆதிமொழி; அறிவில் மூத்த
வள்ளுவனை ஈன்றமொழி தமிழே யாகும்

–சுரதா

**சுரதா** (1921)



சுப்புரத்தினதாசன் என்பதைச் சுருக்கிச் சுரதா எனக் கொண்ட இவரது இயற்பெயர் இராசகோபால். தனித்துவமிக்க உவமைகளைச் சிறப்புறக் கையாண்டவர். உமைக்கவிஞர் என அழைக்கப்பட்டவர். சிரிப்பின் நிழல், தேன்மழை, சுவரும் சுண்ணாம்பும், துறைமுகம் போன்ற பாடல் தொகுதிகளைத் தந்தவர்.

## தமிழ்த் தென்றல்

இசை மயமான இயற்கை நிலத்தில் வாழ்வு நடத்தி, இயற்கைத் தமிழைச் சுவைத்தவர் நம் முன்னோர். தமிழ் என்பதற்கு, 'இனிமை' என்பது பொருள். தமிழ் தழீஇய சாயலவர் என்றும் தமிழ்சேர் காஞ்சி என்றும், 'இனிமை' என்னும் பொருள்படத் 'தமிழ்' என்னுச் சொல்லைப் புலவர் ஆண்டிருத்தல் காண்க. பழமை மக்கள் இயற்கையிலூறுந் தமிழையோ, பின்னைத் தாங்கள் அவ்வியற்கைப் பொருளுக்கிட்ட சொன் மொழிக்கும் வழங்கினர் போலும்! இயற்கை இனிமையோடு- தமிழோடு- அம்மக்கள் கொண்ட வாழ்விலெழும் இன்பக் கிளர்ச்சியால், தாங்கள் மாந்த இனிமை - தமிழ் - உறையுளாம் இயற்கையைச் சொல்லோவியமாக எழுதுவது அவர்களது பெருவிளையாட்டு. அச் சொல்லோவியங்களைக் கொண்ட இன்பப் பெட்டகங்கள் பல மறைந்தன. இப்பொழுதுள்ளன சில. அவை கலித் தொகை, நெடுநல்வாடை, சிலப்பதிகாரம் முதலிய நூல்கள்.

நம் மக்கள் வாழ்வே தமிழ் வாழ்வு. அவர்கள் கண்டது தமிழ்; கேட்டது தமிழ்; உண்டது தமிழ்; உயிர்த்தது தமிழ், உற்றது தமிழ், அத்தமிழ் அமிழ் தங்கொண்ட நாடு இந்நாடு. ஆ! ஆ! இது நினைவிலுறும் போது உறும் இன்பத்தை என்னென்பேன்! அவ்வின்பம் நுகர்ந்த இக்காலத் தமிழ்ப்பாவலர் பெருமானாகிய நம் பாரதியார் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்று கூறியிருத்தல் காண்க.

**- திரு. வி. கலியாணசுந்தரனார்**

**திரு.வி.கலியாணசுந்தரம் (1883-1953)**



திருவாரூரில் பிறந்து சென்னையில் வாழ்ந்த திரு.வி.க நாட்டு விடுதலை இயக்கத்தில் தீவிரப் பங்கு கொண்டவர். ராயப்பேட்டை வெஸ்லியன் கல்லூரி ஆசிரியராய்த் திகழ்ந்தார். எழுத்திலும், பேச்சிலும், வீறுநடை, ஆவேசம் ததும்பக் காணலாம். தமிழ்த் தென்றல் என்று போற்றுமாறு நறுந் தமிழ்நடை கமழ்வன இவர்தம் நூல்கள்.

### செயல்பாடுகள்

- தலைமை தாங்கும் தமிழ் என்ற பாடலின் மையப் பொருளை உணர்ந்து நயம் பாராட்டுங்கள்.
- தமிழை வள்ளல்மொழி என்று கூறுவதற்கான காரணங்களை ஆராய்ந்து குறிப்பு எழுதுங்கள்.
- பாரதி விழாவில் 'தமிழ் மொழியின் பழமை' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்ற உரை ஒன்று தயார் செய்யுங்கள்.
- பள்ளிக் கலைவிழாவிற்கு வருகைதரவிருக்கும் கலைஞர் ஒருவருடன் உரையடுவதற்கான வினா நிரல் உருவாக்குங்கள்.




# அமுத ஊற்று

## தேன்குறள் துளிகள்

- துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை
  - குறள் எண் 12
- பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்
  - குறள் எண் 216
- மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு
  - குறள் எண் 610
- ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை
  - குறள் எண் 656
- காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று
  - குறள் எண் 1114

**- திருவள்ளுவர்**



**திருவள்ளுவர்**



இவருக்கு நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் என வேறுபெயர்களும் உண்டு. திருக்குறள் நூலுக்கு முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், திருவள்ளுவம், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை என வேறுபெயர்கள் கூறப்படுவது உண்டு. தமிழ்ச்சான்றோர் கண்டறிந்த நல்வாழ்க்கைத் தத்துவங்களை மனித உலகுக்கு வாரி வழங்கும் அமுத சுரபியே திருக்குறள்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியில் அமைந்துள்ள திருக்குறட் பாக்களின் தனித்தன்மைகளைக் கண்டறிந்து தொகுத்து எழுதுங்கள்.
- "பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் - செல்வம்
நயனுடைய யான்கண் படின்"
என்ற குறளின் இலக்கிய நயத்தைச் சிறு கட்டுரை வடிவில் எழுதுங்கள்.

# சங்கம் வளர்த்த தமிழ்

### ஈதலும் இசைபட வாழ்தலும்



தெண் கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண் குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்,
நடு நாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடு மாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்,
உண்பது நாழி; உடுப்பவை இரண்டே;
பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே;
செல்வத்துப் பயனே ஈதல்;
துய்ப்பேம் எனினே தப்புந பலவே.

**புறநானூறு 189**

திணை: பொதுவியல்; துறை: பொருண்மொழிக் காஞ்சி.
- மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது.

### யானோ தேறேன்

வண்டு படத் ததைந்த கொடி இணர் இடையிடுபு
பொன் செய் புனை இழை கட்டிய மகளிர்
கதுப்பின் தோன்றும் புதுப் பூங் கொன்றைக்
கானம் கார் எனக் கூறினும்
யானோ தேறேன் அவர் பொய் வழங்கலரே

**- குறுந்தொகை 21**
**ஓதலாந்தையார்**

## செயல்பாடுகள்

- செல்வத்துப் பயனே ஈதல் என்ற புறநானூற்றுச் செய்யுள் வரிகளுக்கு ஏற்ப இன்றைய சமூகம் செயல்படுகிறதா? விமர்சனக் கட்டுரை எழுதுங்கள்.
- குறுந்தொகைப் பாடலின் பொருள் நயம் பற்றிக் குறிப்பெழுதுங்கள்.

# காப்பியச் சுரங்கம்

## தெய்வம் கொள்ளுமின்



சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே
நிறங்கிள ரருவிப் பறம்பின் றாழ்வரை
நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழோர்
தெய்வங்கொள்ளுமின் சிறுகுடி யீரே
தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்
கோடுவாய் வைம்மின் கொடுமணி
யியக்கும்மின்
குறிஞ்சி பாடுமி னறும்புகை யெடுமின்
பூப்பலி செய்ம்மின் காப்புக்கடை நிறுமின்
பரவலும் பரவுமின் விரவுமலர் தூவுமின்

**சிலம்பு 24: 11-20**

### இளங்கோவடிகள்

இவர் மலைநாட்டைச் சார்ந்தவர். சேரன் செங்குட்டுவனின் சகோதரன் ஆவார். இவர் சமண மதத் துறவியாக இருந்த போதிலும் அவருடைய கலைத்திறமும் காவிய உள்ளமும் நூல் முழுவதும் ஆட்சி புரிகின்றன. இவர் இயற்றிய சிலப்பதிகாரம் ஐம்பெரும் காப்பியங்களுள் முதன்மைக் காப்பிமாகக் கருதப்படுகிறது.

## கோதை நடை

சீறடிய கிண்கிணி சிலம்பொடு சிலம்ப
வேறுபடு மேகலைகள் மெல்லென மிழற்றச்
சேறுபடு கோதைமிசை வண்டுதிசை பாட
நாறுமலர்க் கொம்புநடை கற்பதென வந்தாள்

**சீவகசிந்தாமணி - பாடல் 2019**

### திருத்தக்க தேவர்

சோழவமிசத்தினர். மொழி நலம் சான்ற புலவராய் மதுரை சென்றபோது 'ஆருகத சமயத்தார் இன்பச்சுவை ததும்பும் நூல் எழுத இயலாது' என்று புலவர் சிலர் ஏளனம் புரிய அதனை மறுத்து, தேவர், சீவசிந்தாமணியை இயற்றினார் என்பர். நரி விருத்தம் இவர் இயற்றிய மற்றொரு நூலாகும்.

## எழுவர் ஆனேம்

குகனொடும் ஐவர் ஆனேம் முன்பு பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானேம் எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய நின்னொடும் எழுவர் ஆனேம்
புகலருங்கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் நுந்தை

**கம்பராமாயணம் - யுத்த காண்டம்**
**விபீடணன் அடைக்கலப் படலம் - 448**

### கம்பன்



கல்வியிற் பெரியவன் கம்பன். கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும். என்றெல்லாம் வழங்கும் சிறப்புத் தொடர்கள் கம்பன் கவித்திறனுக்கு எடுத்துக்காட்டு. தமிழுக்குக் கதி எனவும் கம்பன் புகழப்பட்டார். இவர். கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.



### செயல்பாடுகள்

- தமிழ்க் காப்பியங்கள் குறித்துக் குறிப்பு எழுதுங்கள்.
- கம்பராமாயணம் பாடல் உணர்த்தும் மனிதநேயக் கருத்தை விளக்கி எழுதுங்கள்.
- அன்பு என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதுங்கள்.

**1. இலக்கணமுடையது**

இலக்கண நெறியுடன் வழங்கும் சொற்கள் இலக்கணமுடைய சொற்கள் ஆகும்.

**2. இலக்கணப் போலி**

இலக்கண நெறிக்கு மாறாக முன்பின் மாறி இருப்பினும் இலக்கணமுடைய சொற்களைப் போல் கருதப்பட்டு சான்றோர்களால் தொன்றுதொட்டு வழங்கப்படும் சொற்கள் இலக்கணப் போலியாகும்.

எ.கா. புறநகர், முன்றில், உலாப்புறம்


(இல்முன் என்பது முன்றில் என்றும், நகர்ப்புறம் என்பது புறநகர் என்றும், புறவுலா என்பது உலாப்புறம் என்றும் மாற்றி வழங்கப்படுகின்றன)

**3. மரூஉ**

சில சொற்கள் தொன்றுதொட்டு வருதலின்றி இடையிலே சிலவெழுத்துகள் கெட்டும் சில எழுத்துகள் திரிந்தும் சில எழுத்துகள் தோன்றியும் இலக்கணத்தின் சிதைந்து ஒரு புதிய வடிவம் பெற்று மருவி வழங்குகின்றன. இவை மரூஉச் சொற்கள் எனப்படும்.


எ.கா. அருமந்த, சோணாடு, தஞ்சை

(அருமருந்தன்ன, சோழநாடு, தஞ்சாவூர் என்பன முறையே அவற்றின் உண்மை வடிவங்களாகும்)



# இக்கால இன்சுவைகள்

## பன்னீர் மரங்கள்



பன்னீர் மரங்களே!

மண்ணில் முளைத்த நட்சத்திர மேடைகளே!

மௌனக் கவிதைகளே!

சொர்க்கம் தந்த உங்களின் சிறிய நாதஸ்வரப் பூக்களை அங்கே ஊதியவள் ஊர்வசியோ?

பூச்சுமையில் மேனகை போல் அழகு காட்டும் நீங்கள்...

மறுநிமிஷமே மலர்களைப் பூமிக்குச் சமர்ப்பித்து விட்டு விசுவாமித்திர வேஷம் போடுவது ஏன்?

வானத்திலிருந்து உதிரும் நட்சத்திர விதைகள் உருவம் பெற்று மண்ணில் மலர்ந்த பிறகு மறுபடியும் உதிருவது ஏன்?

உங்கள் காய்ந்த உடலும் கண் சிமிட்டும் பூக்களும் ஏழைக்குப் பட்டுத் தலைப் பாகையைக் கட்டத் துடிக்கும் புரட்சிக்காரர்களின் எதிர்காலக் கனவுகளை எனக்கு நினைவூட்டுகின்றன.

பூஜைக்குப் பயன்படாத பூக்களை நீங்கள் சுமப்பதாக

யார் சென்னது?

நீங்கள்தான் பொழுது புலர்ந்ததும் பூமிதேவியை வணங்க அந்த மலர்களை அவசரத் துடிப்போடு அள்ளி வீசுகிறீர்களே!

அந்தச் சிரிக்கும் மலர்கள் சின்னவயதில் நான் வைத்து விளையாடிய சிறிய சிறிய மரப்பாச்சி பொம்மைகள்.

நீங்கள் காற்றில் ஊதும் வால் முளைத்த உமிழ்நீர் முட்டைகள்.

வாசனையுள்ள வால் நட்சத்திரங்கள்! பூமியின் மேல் இயற்கைத்தாய் போடும் கோடுகள் இல்லாத கோலப்புள்ளிகள்

இலைக்குளத்திலிருந்து துள்ளிவிழும் மலர் மீன்கள்.

நீங்கள் ஒவ்வொரு ஊரிலும் பிள்ளையார் கோவிலின் பின்னழகுகள்...

அங்கெல்லாம் பன்னீர்மலர்கள் ஒரு பிரம்மச்சாரிக்காக விதவை உடையில்

காத்திருந்து சலித்து உதிர்கின்றனவோ?

பன்னீர் மலர்கள் வேதகாலத்தில் சுலோகங்களைப் போல்

உதிர்ந்திருக்கலாம்.

சங்கத் தமிழ்நாட்டில் அந்தக் கவிதை மலர்கள் தேரிலிருந்து மன்னன் வீசிய பரிசுப் பொருள்களைப் போல் பூமிக்கு வந்திருக்கலாம்.

ஆனால் தற்காலத்திலோ சில்லரைகள் லஞ்சம் போல அவை மண்ணிலே வந்து விழுகின்றன.

ஓ! பன்னீர் மரங்களே!

மற்ற மரங்களிலிருந்து காக்கை குருவிகள் எச்சமிட்டதற்குப் பிராயச்சித்தம் செய்வதற்காக நீங்கள் இந்த வெள்ளைமலர்களை மண்ணெல்லாம் தூவுகிறீர்களோ?

**நா. காமராசன்**

### நா. காமராசன்




புனைவியலின் இழைகளோடு புதுக்கவிதை நெசவுக்கு வந்த நா.காமராசன் தன் கறுப்பு மலர்கள் தொகுதியில் ஒரு மகிழ்ச்சியான அதிர்ச்சியைத் தந்தவர். தும்பைப்பூச் சந்திரன், சூனியம் ஏந்திய தீபங்கள், சூரியன் தூங்கிய துருவங்கள், வால் முளைத்த மண், நதிகளின் கல்லறை என வனப்புகளையே வார்த்தைகளாக்கும் கவிதைக் கலையில் வல்லவர்.



### செயல்பாடுகள்

- பூக்களை மனித வாழ்க்கையோடு ஒப்பிட்டுச் சிறுகட்டுரை எழுதுங்கள்.
- பாடப் பகுதியில் பயின்றுவரும் உவமைத் தொடர்களைத் தொகுத்து எழுதுங்கள்.
- 'பூ' என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதுங்கள்.

## புதிய தென்றல்



**நிலா**

இவ்வளவு கவிஞர்கள்
சுரண்டினால் நிலவே
ஏன் வராது அமாவாசை...!

"குளம்
முகம் பார்க்கும் நிலா
குளிக்காமல் திரும்பினேன்"

**- மித்ரா**

### மித்ரா

இயற்பெயர் உண்ணாமலை. குடையில் கேட்ட பேச்சு மூலம் தமிழ்க் கவிதைகளில் ஒரு தனிச்சாயலைப் பிரதிபலிக்கிறார். 1990இல் ஹைகூக் கவிதைகள் தொகுப்பை வெளியிட்ட மித்ரா 1993இல் குடையில் கேட்ட பேச்சு நூலை வெளியிட்டார்.

## கோடை

"கல் பொறுக்கிப் போட்டு
நீர் குடிக்க வந்த காகம்
ஒட்டிக்கொண்டது
வெயிலில் உருகிய
பிளாஸ்டிக் குடத்தில்

– **பழனிபாரதி**



**துளிப்பா (ஹைகூ)**
அந்தக் காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங்குழல்...

– **அமுதபாரதி**



எங்கு செல்லும்
புறாக்கள்
நாளை கும்பாபிஷேகம்

– **ப. சங்கீதா**



**டயரி**

காலம் கொள்ளி வைத்தாலும்
சுவாசிக்கும்
சடலம்

– **இரா. மயில்சாமி**

கொடிய விலங்குகள் வாழும்காடு
அதனால் என்ன
மலைத் தேன்...

– **க. இராதா**





## செயல்பாடுகள்

- சமூக அவலங்களை உணர்த்தும் துளிப்பாக்களைத் தொகுத்துக் கட்டுரை எழுதுங்கள்.
- சங்ககால இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூற்களை வரிசைப்படுத்துங்கள்.
- இலக்கியங்கள் காட்டும் சமுதாயம் என்ற தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை எழுதுங்கள்.
- பள்ளி இலக்கிய மன்ற சார்பில் கவியரங்கம் நடைபெறுகிறது. கவியரசு வைரமுத்து தலைமை தாங்கும் இந்நிகழ்ச்சிக்கான அறிவிப்பு ஒன்று தயாரியுங்கள்.
- இடக்கரடக்கல், மங்கலம் இவை இரண்டிற்கும் வேறு சில எடுத்துக்காட்டுகளை எழுதுங்கள்.
- 'டயரி' என்ற ஹைகூக் கவிதயை வாசித்து நாட்குறிப்புகளின் பயன்கள் பற்றி சிறு கட்டுரை எழுதுங்கள்.
- சூரியன் என்ற சொல்லைக்குறிக்கும் பல்வேறு சொற்களைத் தொகுத்து எழுதுங்கள்.

# அலகு
## 4

# மண் மணக்குது



மனித வாழ்வு இயல்பான வாழ்வியல் அனுபவங்களின் வெளிப்பாட்டுடன் விளங்குகிறது. நம் மண்ணின் மக்கள் இரசனை உணர்வோடும் சமூக அக்கறையுடனும் வாழ்ந்து வந்துள்ளனர். வாழ்வியல் நம்பிக்கைகள், வீரத்தைப் போற்றிப்பாடும் பண்பு, இயற்கையோடு இயைந்த வாழ்க்கை. அனுபவ அறிவால் பெற்ற மருத்துவ முறைகள் இவையாவும் வாய்மொழியாகப் பரவி இன்றளவும் இம்மண்ணில் மணம் வீசிக் கொண்டிருக்கின்றன.

**முதன்மைக் கற்றல் அடைவுகள்**

- நாட்டார் வழக்காறுகளின் தனித்தன்மைகளையும் கூறுகளையும் அறிந்து எழுதுகிறார்கள்.
- பழமொழி, பொன்மொழி, விடுகதை, துணுக்கு போன்றவற்றின் அமைப்பினையும் தனித்தன்மைகளையும் எழுதுகிறார்கள்.
- நாட்டுப்புறக்கலைகளை அறிந்து வெளிப்படுத்துகிறார்கள்.
- நாட்டுப்புறக்கலைகளையும் செவ்வியல் கலைகளையும் ஒப்பீடு செய்து கட்டுரை எழுதுகிறார்கள்.



# கற்பனைச் சிறகு

## பாட்டியின் நினைப்பு



ஒரு கிராமத்தில் ஒரு கிழவி இருந்தாள். அவளிடம் ஒரு சேவல் இருந்தது.

அந்தச் சேவல் விடியற்காலையில் எழுந்து 'கொக்க ரக்கோ கொக்கரக்கோ' என்று கூவும்.

சேவல் கூவியதும் கிழவி எழுந்து அடுப்பைப் பற்ற வைப்பாள்.

அப்பொழுது கிராமத்தில் உள்ளவர்களும் எழுந்து, பாட்டி வீட்டுக்கு வந்து நெருப்பு வாங்கிச் சென்று தங்கள் வீட்டில் அடுப்புப் பற்ற வைப்பார்கள்.

இப்படித் தினமும் நடப்பது வழக்கம்.

தன்னுடைய சேவல் இருப்பதால்தான் கிராம மக்களுக்குப் பொழுது விடிவது தெரிகிறது. மேலும் தன் வீட்டில் அடுப்புப் பற்றவைக்காவிட்டால், அவர்கள் நெருப்புக்கு என்ன செய்வார்கள்? இப்படி ஓர் எண்ணம் தோன்றியது பாட்டிக்கு.

தானும் சேவலும் இல்லாவிட்டால் கிராமத்து மக்கள் என்ன பாடுபடுவார்கள் என்பதைப் பார்க்க வேண் டும் என்று நினைத்து, சேவலை எடுத்துக்கொண்டு ஒருவரிடமும் சொல்லாமல் அடுத்த ஊருக்குப் புறப்பட்டு விட்டாள் கிழவி.

மறுநாள் காலையில் சேவலும் கூவவில்லை பாட்டி யையும் காணவில்லை.

ஐயோ பாவம்! பாட்டி என்ன ஆனாளோ தெரிய வில்லையே! என்று ஒருவரை ஒருவர் விசாரித்தனர்.

ஆனால் வழக்கம் போல் எழுந்தார்கள். அடுப்புப் பற்ற வைத்தார்கள்.

ஐந்து நாட்களாகக் கிழவி பக்கத்துக் கிராமத்தி லேயே இருந்தாள். தான் இல்லாததால், கிராமத்து மக்கள் ரொம்பவும் சிரமப்பட்டிருப்பார்கள். சேவலும் இல்லை. எப்படி பொழுது விடிந்திருக்கும்? நெருப்பு இல்லாமல் எப்படி சமைத்திருப்பார்கள்? என்று பலவாறு எண்ணினாள்.

அப்பொழுது அங்கு வந்த ஒருவன், என்ன பாட்டி! நீ இங்கேயா இருக்கிறாய்? யாரிடமும் சொல்லாமல் வந்து விட்டாயே? உன்னை எங்கே, எங்கே என்று எல்லாரும் கேட்கிறார்கள் என்றான்.

தான் நினைத்தது சரிதான், சேவலுக்காகவும் நெருப்புக்காகவும் தன்னைத் தேடுகிறார்கள் என்று எண்ணியவாறு,

ஏன்டா பையா! ஐந்து நாட்களாக நானும் சேவலும் இல்லையே! பொழுது விடிந்தது தெரிந்ததா? நெருப்பு மூட்டி சமைத்துச் சாப்பிட்டீர்களா? என்று அவனிடம் கேட்டாள் கிழவி.

அதைக் கேட்டதும் அவன் கிழவியின் முட்டாள் தனத்தைக் கண்டு சிரி சிரி என்று சிரித்துக் கொண்டு, பாட்டி! அந்தக் கிராமமே உன் சேவலையும், உன் நெருப்பையும் நம்பித்தான் இருக்கிறது என்று நினைத்தாயா? நீ சரியான பைத்தியக்காரக் கிழவி! பிறந்து வளர்ந்த கிராமத்தையும் அறிந்தவர்கள், தெரிந்தவர்களையும் விட்டு விட்டு, இப்படி அநாதையாக ஏன் இங்கே வந்து கிடக்கிறாய்? மூட்டையைக் கட்டிக் கொண்டு புறப்படு என்றான்.



**-முல்லை முத்தையா**

**முல்லைமுத்தையா (1920-2000)**



ஒரு நூலாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் விளங்கியவர். இவர் எழுதிய வாழ்க்கை வரலாற்று நூற்கள் பல. அவற்றுள் பெர்னாட்ஷா வாழ்வும் பணியும், வேடிக்கை மனிதர் புதுமைப்பித்தன், உலகசோதி புத்தர், நபிகள் நாயகம் சரித்திர நிகழ்ச்சிகள் போன்றவை குறிப்பிடத் தக்கவை.

## வெள்ளித்தேர் பூட்டி




வெள்ளிக் கலப்பை கொண்டு
விடிகாலம் ஏர்பூட்டி
தங்கக் கலப்பை கொண்டு
தரிசுழுகப் போனாராம்!

மாம்பழத்தைக் கீறி
வயலுக்கு உரம்போட்டு
தேன்பாய்ந்து நெல்விளையும்
செல்வமுளார் புத்திரனோ!

வெள்ளித்தேர் பூட்டி
மேகம்போல் மாடுகட்டி
அள்ளிப் படியளக்கும்
அதிட்டமுள்ளார் புத்திரனோ!

சம்பா விதைபாவி
கருகுச் சம்பா நாத்துவிட்டு
பிடித்து விதைபாவி
பெருங்கடல் தீர்த்தம்வந்து
வாரி விதைபாவி
வைகைநதித் தீர்த்தம் வந்து
சரஞ்சரமாய் நெல்விளையும்
சமுத்திரம்போல் போர் ஏறும்!
கொத்துக்கொத்தாய் நெல்விளையும்
கோபுரம்போல் போர் ஏறும்
கட்டுக் கலம்காணும்
கதிர் உழக்கு நெல்காணும்!



அடித்துப் பொலிதூற்ற
அதுவும் கலம்காணும்!
பொன்சுளகு கொண்டு
பொதிதூற்றி நிற்பாராம்!
பொன்மரக்கால் கொண்டு
பொதியளந்து நிற்பாராம்!

**- மு.வை. அரவிந்தன்**

## செயல்பாடுகள்

- உழவுத் தொழில் தொடர்பான பழமொழிகளையும் பொன்மொழிகளையும் திரட்டுங்கள்.
- இப்பாடலில் இடம்பெறும் உழவுத் தொழில் தொடர்பான செய்திகளைக் குறிப்பாக எழுதுங்கள்
- 'கோழி கூவிப் பொழுது விடிவதில்லை' என்னும் பழமொழிக்கேற்பப் பாட்டியின் நினைப்பு என்னும் கதை அமைந்துள்ளதல்லவா? இது போன்ற ஏதேனும் பழமொழிக்கேற்பச் சிறுகதை எழுதி பொருத்தமான தலைப்பிடுங்கள்.
- பாட்டியின் நினைப்பு என்ற சிறுகதையை சிறு நாடகமாக வடிவமாற்றம் செய்யுங்கள்

## அகரவரிசைப் பழமொழிகள்

- அக்கினி மலையிலே கற்பூர பாணம் தொடுத்தது போல.
- ஆலைக்குள் அகப்பட்ட சோலைக் கரும்புபோல.
- இரட்டைப் படகில் கால் வைத்தாற் போல...
- ஈ ஏறி மலை குலுங்கியதைப் போல.
- உதிக்கின்ற சூரியன் முன்னே ஒளிரும் மின்மினி போல...
- ஊசிகொண்டு கடல் சூழப் பார்ப்பது போல்....
- எரிகிற தீயை எண்ணெய் விட்டு அணைக்க நினைத்ததாற் போல....
- ஏற விட்ட ஏணியை வாங்குகிறார் போல...
- ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.
- ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் .
- ஓட்டைப் பானையில் தண்ணீர் விட்டதைப் போல...
- ஔவை வாக்கு செவ்வை வாக்கு .

## செயல்பாடுகள்

- உவமைகள் பயன்படுத்தப்பட்டுள்ள பழமொழிகளைத் தொகுத்து எழுதுங்கள்.
- இதுபோன்ற பழமொழிகளைத் திரட்டி அகரவரிசைப்படுத்தி எழுதுங்கள்.

# வீரம் விளைந்த நிலம்

## மருது பாண்டியர் கதைப்பாடல்

சிவகங்கைச் சீமையில் நல்லாட்சி புரிந்து வெள்ளையர்களை எதிர்த்து வீரமரணம் அடைந்த மருது சகோதரர்களைப் பற்றிப் பாடப்படும் பாடல். நமது சேர மண்ணில் மருது சகோதரர்களின் வீரம் வெளிப்படும் பாடல் இது.



ஒளிபடைத் தவிழி யுடையார்! நெஞ்சில்
உறுதி கொண்ட துணிவுடையார்!
களிமி குந்தஇன் சொல்லுடையார்! உடல்
கட்டுடையார்! சாந்துப் பொட்டுடையார்!

விள்ளுமிப் பிள்ளையே மூத்த மகன்பெயர்
வெள்ளை மருதெனப் பேர்படைத்தான்!
தெள்ளிய ஞாம் இவனுக்கு இளையோனவன்
சின்ன மருதெனப் பேரெடுத்தான்!

அன்றந்த கேரள நாட்டினி லேபதி
னாறுஅடி வேங்கைஒன்று ஊர்களிலே
சென்றாடு மாடும னிதர்களைக் கொன்று
தின்றது கேட்டந்த நாட்டரசன்

மிக்க வருந்திஇப் பேய்ப்புலி யைக்கொல்லும்
வீரருக் கேளங்கள் நாட்டினிலே,
தக்கசன் மானங்கள் தந்திடு வோமிது
சத்திய மென்றோர் அறிக்கை விட்டான்!

வீரரெ னப்பலர் வந்து வந்து மந்த
          வேங்கைக்கு இரையாகி விட்டனராம்!
தீர மருதுதன் தம்பியுடன் அங்கே
          சென்றந்த வேங்கை தனைப்பிடித்து

பந்தாடி னன் அதன் வாயைக் கிழித்தனன்
          பார்த்தவர் எல்லாம் நடுநடுங்கத்
தந்தா னிருப்புக் கரங்களி னால்குத்துத்
          தாங்காமல் வேங்கையும் மாண்டதுகாண்!

இச்செயல் கண்டந்த கேரள மன்னவன்
          ஈடற்ற வீரசி காமணிநீர்
மெச்சத் தகுந்தவர் பீம பலமுள்ள
          வேந்தனும் நீரென வாழ்த்தினனே!

**-எஸ் லீலாவதி**



## செயல்பாடுகள்

- மருது சகோதரர்கள் பண்பு நலனைக் குறித்துச் சிறு குறிப்பு எழுதுங்கள்.
- உங்கள் வட்டாரத்தில் நடைபெறும் கபடிப்போட்டியை நேரடி வருணனை செய்து எழுதுங்கள்.

## தீரன் சின்னமலை

கோவை மாவட்டத்தை ஆண்டுவந்த சின்னமலையின் வீரத்தைப் புகழ்ந்து பாடும் சின்னமலைக்கும்மிப் பாடல் இது. வெள்ளையர்களைத் தன் வீரத்தால் விரட்டிய வீரன். தீரன் சின்னமலை என்றே போற்றப்பட்டான்.

சின்னமலை வரிகொடுக்க மறுத்து வெள்ளைக்காரனுடன் போர்புரியவில்லை. வெள்ளையர் இந்நாட்டில் இருப்பதையே மறுத்தான். அவர்களை இந்நாட்டை விட்டு ஓட்டவே போரிட்டான். பலமுறை ஆங்கிலப் பெரும்படைகள் அஞ்சியலறிப் புறங்காட்டி ஓடும்படி அடித்துத் துரத்தினான். அடிமை வாழ்வை அறவே வெறுத்தான். சின்னமலையின் வீரவரலாறு இளைஞர்களுக்கு எழுச்சி ஊட்டும் வரலாறாகும்.

## சின்னமலைக் கும்மி

கட்டுத் தடிக்காரர் முன்னடக்கக் கவுடன்
கறுப்ப சேர்வையும் பின்னடக்க
வட்டப்பொட்டுக்காரச் சின்ன மலையதோ
வார சவுரியம் பாருங்கடி

பட்டத்துக் கத்தி பளபளெனச் செல்லும்
பாளையக் காரர்கள் முன்னடக்க
வெட்டுந்துரைமகன் சின்னமலைவரும்
வேடிக்கை தன்னையும் பாருங்கடி...

பூனைக்குலமென வெள்ளைப் படையோடப்
பூரித்து வீரப்புலிபோலச்
சேனைக் கதிபதி சின்னமலைவரும்
தீரத்தை வந்துமே பாருங்கடி

கச்சை கட்டுந்தடிக்காரர்களே வெள்ளைக்
காரர் களையெங்குக் கண்டாலும்
காலையொடித்துத் தூரத்துங்களென்றுமே
கட்டளையிட்டானாம் சின்னமலை



சின்னமலை வெடிக்குண்டுக்குத் தப்பியே
சீமைப் படையின் குதிரையெல்லாம்
ஒன்னின் பின்னொன்னாகக் குள்ளநரிபோல்
ஓடு மொய்யாரத்தைப் பாருங்கடி


**- புலவர் குழந்தை**

**புலவர் குழந்தை** (1906-1972)

இலக்கண இலக்கியப் பெரும் புலவர். இராம காவியத்துக்கு மாற்றாக இராவண காவியம் பாடியவர்.

### செயல்பாடுகள்

- கும்மிப்பாடலுக்கு விளக்கம் தந்து வேறு சில கும்மிப்பாடல்களின் பெயர்களை எழுதுங்கள்.
- தீரன் சின்னமலைக் கும்மிப்பாடலைச் சிறுகதையாக ஒரு பக்க அளவில் எழுதுங்கள்.
- தீரன் சின்ன மலையின் வாழ்க்கையைச் சிறு நாடகமாக எழுதி வகுப்பில் நடித்து காட்டுங்கள்.



# நோய் முதல்நாடி

## நாட்டுப்புற மருத்துவம்

நாட்டுப்புற மக்கள் தங்கள் வாழ்க்கையில் நோய்களைத் தீர்க்க நாள்தோறும் கையாளும் முறைகளை நாட்டுப்புற மருத்துவம் என்று கூறுவர். வீடுகளில் உள்ள முதியவர்களும் அனுபவசாலிகளும் சிறந்த நாட்டுப்புற மருத்துவர்களாக விளங்குகின்றனர். மருத்துவ முறைகளை வழிவழியாகச் செவி வழியாகவே அறிந்திருந்தனர். பழக்கமும் பயிற்சியும்தான் இவர்களுக்கு இம்மருத்துவ முறையில் சிறந்த பலனைத் தந்தன. நாட்டுப்புறங்களில் நாட்டு வைத்தியம், கைமருத்துவம், வீட்டு வைத்தியம், கை மருந்து வைத்தியம், பாட்டி வைத்தியம், மூலிகை மருத்துவம் என்று பலவாறாகக் குறிக்கப்படுகின்றன.

இந்திய நாட்டுப்புற மருத்துவத்தைப் பற்றி இதுவரை தமிழில் பெரும்பாலான நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால் அவற்றுள் பெரும்பாலான நூல்களில் மருத்துவக் குறிப்புகளே இடம் பெற்றுள்ளன. க.வெங்கடேசன் அவர்களின், ஆய்வு நோக்கில் நாட்டுப்புற மருத்துவம் என்ற நூல் நாட்டுப்புற மருத்துவங்களைச் சொல்லக் கூடிய நல்ல நூலாகும்.

நாட்டுப்புற மக்கள் பொருளாதார வசதியில் மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள். இவர்கள் எளிய முறையில் குறைந்த செலவில் நாட்டுப்புற மருந்தினை ஏற்றுக்கொள்வர்.

கிராமப்புற மக்களின் பண்பாட்டோடும், பழக்க வழக்கத்தோடும் சமூக அமைப்போடும் இணைந்த ஒரு முறைதான் நாட்டுப்புற மருத்துவ முறை. மக்களின் நம்பிக்கைக்கேற்ப மருத்துவ முறைகளை மேற்கொண்டனர். நாட்டுப்புற மக்கள், உணவே மருந்து, மருந்தே உணவு என்ற முறையில் வாழ்க்கையை நடத்தி வந்தனர். உடலில் நோய் வராமல் தடுக்கச் சில உணவு முறைகளையும், சில நோய்களைக் குணப்படுத்த சில உணவு முறைகளையும் மேற்கொண்டு வந்தனர்.

நாட்டுப்புறப் பாடல்களும், பழமொழிகளும், நாட்டுப்புற மருத்துவத்தைப் புலப்படுத்தும்,

*"உடம்பெல்லாம் நோகுதம்மா? கண்ணே*
*உனக்கு ஒத்தடம் கொடுக்கட்டுமா?*
*ஏலமும் இஞ்சிச்சாறும் கண்ணே உனக்கு*
*எட்டுச் சொட்டு கொடுக்கட்டுமா?"*

என்று பாடிய பாடலால், உடம்பு வலிக்கு ஏலமும் இஞ்சிச்சாறும் ஏற்ற மருந்து என்பதைத் தெரிந்து கையாண்டுள்ளனர் என்பதை அறிந்த கொள்ள முடிகிறது.





*“வயித்து வலி அடங்க*
*வெளக் கெண்ணெ தேய்க்கட்டுமா?*
*சூடு தணிந்திடவே*
*தலைக்குத் தண்ணி ஊத்தட்டுமா?”*

என்று பாடும் பாடலால், வயிற்று வலி என்றால் விளக்கெண்ணெயை வயிற்றில் தேய்ப்பர். உடம்பில் சூடு அதிகம் என்றால், தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளித்து விடுவர். இதிலும் அரப்பு என்று சொல்லும் பச்சைநிறம் கொண்ட தூளைத் தேய்ப்பர் (அரப்பு மரம் என்ற ஒருவகை மரம். அந்த மரத்தின் இலைகளைக் காயவைத்து, உரலில் இடித்து, சல்லடையில் சலித்து வைத்துக் கொள்வர். ஒரு வருடத்திற்கும் இது கெட்டுப் போகாது. தலைக்கு, கண்ணுக்குக் குளிர்ச்சி, ஷாம்பு நுரைப்பது போல் இந்த அரப்புத் தூளிலும் நுரை வரும். தலை முடி பட்டுபோல் இருக்கும். இன்றும் கிராமங்களில் நகரங்களில இதைப் பயன்படுத்துவர். நகர்ப்புறங்களில் காதி கிராமோதிய பவன் கடையில் ‘அரப்புத்தூள்’ விற்கப்படுகிறது)

*“பொன்னாங் கண்ணிக்குப்*
*புளி ஊற்றிச் சமைத்தால்*
*உண்ணாப் பெண்ணும்*
*ஓர் உழக்கு உண்பாள்”*

என்ற பழமொழி பொன்னாங்கண்ணிக் கீரையில், புளி சிறிது சேர்த்துச் சமைத்துக் கொடுத்தால், பசியில்லை என்று சொல்லக் கூடிய பெண்ணும் நன்கு சாப்பிடுவாள் என்பதைச் சொல்கிறது. பசியைத் தூண்டக் கூடிய சக்தி, பொன்னாங்கண்ணிக் கீரைக்கு உண்டு என்பதை இப்பழமொழியால் கூறி வந்தனர். இப்படி, எத்தனையோ பாடல்களும், பழமொழிகளும் நாட்டுப்புற மருத்துவத்தை நமக்குச் சொல்லக்கூடியதாய் அமைந்திருக்கும்.

## வருமுன் காப்பது

நோய்கள் அணுகாமல் இருக்க மக்கள் திட்டமிட்ட பழக்கத்தையும் உணவையும் கடைபிடித்து வந்தனர்.

காலை எழுந்ததும் சூரியனை வணங்கிக் கண்ணின் பார்வை சக்தியை மிகுதிப்படுத்தினர். உணவு உண்டதும் வெற்றிலை போடும் பழக்கத்தை உடையவர்களாக இருந்தார்கள். உண்ட உணவு செரிக்க, இப்பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள்.

கோடைக் காலங்களில் வியர்வையால் உடல்நலம் பாதிக்கப்படாமல் இருக்க, மொட்டை அடித்தனர். குளிர்ச்சி தரக்கூடிய கனிகள், காய்கள், நுங்கு, இளநீர், வெள்ளரிக்காய், கம்பஞ்சோறு இவற்றை உணவில் சேர்த்துக் கொண்டனர்.

## இயற்கை வைத்தியம்

இயற்கையில் கிடைக்கும் மூலிகை, தாது, இலைகள், வேர்கள், விதைகள் போன்ற பொருட்களைச் சில நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தினர். இயற்கை மருத்துவ முறை மனிதர்கள் தோன்றிய காலத்திலேயே தோன்றியது. மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இயற்கை மருத்துவம் செய்யப் பட்டு வந்தன. சில மருந்துகள் உட்கொள்ளும் மருந்தாகவும் சில மருந்துகள் பாதிக்கப்பட்ட வெளிப்பாகங்களுக்குப் பூசும் மருந்தாகவும் பயன்படுத்தி வந்தனர்.

நாட்டுப்புற மக்கள் ஒவ்வொரு நோய்க்கும் அதற்கேற்ற மருத்துவ முறைகளைக் கடைபிடித்து வந்தனர். நாட்டுப்புற மருத்துவத்தைப் பற்றி நம்பிக்கையும் கொண்டிருந்தனர். இந்த நம்பிக்கை அவர்களுடைய வாழ்வோடு இணைந்து காணப் பட்டது. நோய் வராமல் காப்பதே அவர்களுடைய உணவுப் பழக்கமாகவும் இருந்தது. மனக்கட்டுப் பாட்டுடனும், வாய்க்கட்டுப்பாட்டுடனும் இருந்து இயற்கை மருத்துவத்தைக் கையாண்டு வந்தனர்.

**- முனைவர் விஜயலட்சுமி இராமசாமி**

### செயல்பாடுகள்

- நோய்த் தொடர்பான திருக்குகுறள், பழமொழி, விடுகதைகளைத் தொகுத்து எழுதுங்கள்.
- நாட்டுப்புற மருத்துவரிடம் பேட்டிக்காண்பதற்காக வினாநிரல் தயாரியுங்கள்

## தமிழ் மருத்துவம்

20, பாறையடி 2 ஆவது தெரு
தென்காசி - 627811
சூன் - 13, 2003

அன்புள்ள ஆதனுக்கு,

உன் அன்புப் பாட்டி சிவகாமி எழுதும் கடிதம். உன் அம்மா எழுதிய கடிதத்தை இரண்டு நாள்களுக்கு முன்னர்தான் பார்த்தேன். மே முப்பத்தொரு நாளும் நான் ஊரில் இல்லை. கடந்த பன்னிரண்டு நாள்களாக மிகுதியான வேலையிருந்தது. எனவே உடனே பதில் எழுத முடியவில்லை.

இவ்விடம் நான், உன் தாத்தா, அத்தை, மாமா யாழினி ஆகியோர் நலமாக இருக்கிறோம். நீயும் உன் பெற்றோர்களும் நலமாக இருப்பீர்கள் என நம்புகிறேன். உனக்கு அடிக்கடி காய்ச்சல், சளி போன்ற உடல் நலக்குறைவு வருவதாக அம்மா எழுதியிருந்தார். உடல் நலம் பேணுதற்கான சில மருந்துகளைச் சொல்லுகிறேன்.



தமிழ் மருத்துவம் பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய். பண்டைக் காலத்தில் வாழ்ந்த சித்தர்கள் இந்த மருத்துவம் பற்றிக் கூறியுள்ளனர். ஆதலால் இது சித்த மருத்துவம் என அழைக்கப்படுகிறது.

சித்தர்கள் பலர் வாழ்ந்தனர். எனினும் பதினெட்டுச் சித்தர்கள் எனும் வழக்கு உண்டு.

உனக்கு அவ்வப்போது தேவைப்படும் மருந்துகள் பற்றி இக்கடிதத்தில் கூறுகிறேன். தேவைப்படும் போது நீயோ உன் அம்மாவோ தயாரிக்கலாம். இவை எளிதாகத் தயாரிக்கக் கூடியனவாகும்.

உனக்கு அவ்வப்போதும் வரும் உடல்தொல்லைகளுள் ஒன்று காய்ச்சல். காய்ச்சலுக்கு எண்பதுக்கு மேற்பட்ட மருந்துகள் உள்ளன. எளிதாகத் தயாரிக்கக் கூடிய மருந்தைச் சொல்லுகிறேன்.

துளசி ஐம்பது இலைகள், மிளகு இருபது ஆகியவற்றை எடுத்துக் கொள்ளவும். இவற்றைத் தூய நீரில் கழுவி ஈரம் போக உலர்த்து. இவ்விரண்டையும் மைய அரைத்து எடுத்துக்கொள். அரைத்ததைப் பயிறு அளவு சிறு சிறு மாத்திரைகளாக உலர்த்து. இம் மாத்திரைகளில் ஒவ்வொன்று காலை, மாலை இரு வேளைகளிலும் வெந்நீருடன் உட்கொண்டால் காய்ச்சல் குணமாகும்.

உனக்கு அடிக்கடி தொல்லை தருவது சளி. சளித் தொல்லையால் மூச்சுத் திணறல் ஏற்படும். சளி மிகுந்தால் காய்ச்சலும் ஏற்படலாம். இத்தொல்லைகளிலிருந்து விடுபட எளிமையாகத் தயாரிக்கக் கூடிய மருந்துகளைக் கூறுகிறேன்.

கீழே குறிக்கப்பட்டுள்ள அளவுப்படி பொருள்களை எடுத்துக்கொள்.

| | | |
|---|---|---|
| கண்டங்கத்தரி வேர் | - | 30 கிராம் |
| சுக்கு | - | 5 கிராம் |
| கொத்தமல்லி | - | 30 கிராம் |
| சீரகம் | - | 1 கிராம் |

ஆகியவற்றை இரண்டு லிட்டர் நீரில்போட்டு அரை லிட்டராகச் சுண்டக் காய்ச்சி எடுத்துக்கொள். இந்நீரை நான்கு முதல் ஆறுவேளைகள் குடித்தால் சளிக் காய்ச்சல் நீங்கும். கற்பூரவல்லி இலைகளின் காம்புகள் பதினைந்து அல்லது இருபது எடுத்துக் கொள். அவற்றைக் குடிநீராக்கிக் குடித்தாலும் சளி நீங்கும், ஆடாதோடை இலைச் சாறும் தேனும் நிகர் அளவில் கலந்து சாப்பிட்டாலும் சளி நீங்கும். சளியால் வரும் காய்ச்சலும் அண்டாது. தினமும் நான்கு வேளை இம் மருந்தைச் சாப்பிட வேண்டும்.

நீ ஓடி ஆடும்போது கீழே விழுந்து காயம் ஏற்பட நேரும். காயத்தை ஆற்றும் மருந்தையும் தெரிந்து கொள்.

அரிவாள்மனைப் பூண்டு, மிளகாய்ப் பூண்டு ஆகிய இரண்டும் காயம் ஆற்றும் குணம் கொண்டவை.

அரிவாள்மனைப் பூண்டின் இலைகள் இருபது அல்லது இருபத்தைந்தை எடுத்துக்கொள். அவற்றைக் கசக்கிச் சாற்றைக் காயத்தில் இட்டால் புண் விரைவில் ஆறும்.

மிளகாய்ப் பூண்டு இலையைக் கிள்ளினால் வெண்ணிறப் பால் வரும். அதுவும் காயத்தை ஆற்றும் குணமுடையது. காயம் பட்டவுடன் அதன் பாலைக் காயத்தில் இட்டால் காயம்பட்ட புண் விரைவில் ஆறும். இது நச்சுத் தடையாகவும் செயல்படும்.

தலைவலிக்கும் ஒரு மருந்து கூறுகிறேன். சங்குப் பூக் கொடியைப் பார்த்திருப்பாய். அதன் பச்சை வேரை நாற்பது கிராம் அளவு எடுத்து நன்றாக நசுக்கி அரை லிட்டர் நீரில் போட்டு முந்நூறு மில்லி லிட்டராகச் சுண்டக் காய்ச்சவும். அந்நீர் காக்கணக் குடிநீர் எனவும் கூறப்படும் காக்கண வேர் குடிநீரை இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறையாக ஆறு முறை சாப்பிடத் தலைவலி முழுமையாகக் குணமாகும்.

இந்த மருந்துகள் எல்லாவற்றையும் நினைவில் கொள்ளவும். தேவையான போது பயன்படுத்தலாம்.

வாழ்த்துகளுடன்
உன் அன்புள்ள பாட்டி,
சிவகாமி

முகவரி

செல்வன். ஆ. தமிழரசன்
16, அன்பகம்
சுல்தான் பத்தேரி
வயநாடு, கேரளம்

## செயல்பாடுகள்

- முறையான மருத்துவம் பெறாமல் உடல்நலம் பாதிக்கப்பட்ட உன் நண்பனுக்குச் சரியான மருத்துவ ஆலோசனை கூறும் கடிதம் ஒன்றை எழுதுக.
- இன்றைய வாழ்கைச் சூழலுக்குப் பொருத்தமானது நாட்டுப்புறமருத்துவமா? ஆங்கில மருத்துவமா? விருப்பமான தலைப்பில் பட்டிமன்றக் குறிப்பு தயாரியுங்கள்.

### சுக்கு மல்லி காப்பி

சுக்கு, மல்லியை அனைவரும் அறிந்திருப்பீர்கள். சிறிதளவு சுக்கும் மல்லி நான்கு அல்லது ஐந்தும் இடித்துப் பொடித்து நீரில் கொதிக்க வைத்து பனைவெல்லம் கலந்து பால் இல்லாமல் தினமும் மாலைவேளையில் குடிக்கலாம். இதனால் நெஞ்சில் உண்டாகக் கூடிய சளி விரைவில் கரையும். சளியைச் சேர விடாது. சளி உருவாவதைத் தடுக்கும் அருமருந்து இது.



### கடுகு மருந்தா? விஷமா?

நீண்ட நெடுங்காலமாக நம்முடைய சமைய லறைகளில் முதல் மரியாதையோடு அமர்ந்து கொண்டிருப்பது தான் கடுகு. எந்தப் பொருளைத் தாளிக்கச் செய்தாலும் எண்ணெய் காய்ந்தவுடன் முதலில் போய் விழுவது கடுகு தான். அதற்குப் பிறகு தான் மற்றவை எல்லாம்.

காலம் காலமாக நாம் கடுகை உணவில் பயன் படுத்தி வந்தாலும் கடுகின் தன்மைகள் பற்றி நமக்கு அதிகமாகத் தெரியாது. கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்கிற பழமொழியில் இருந்து கடுகு காரத்தன்மை கொண்டது என்பதை மட்டுமே அறிந்து வைத்திருக்கிறோம். இதற்கு மேல் கடுகைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. இதற்குக் காரணம் மிகக் குறைந்த அளவே நாம் இதைப் பயன்படுத்துவதாலும் கூட இருக்கலாம். கடுகுக்கு பல முகங்கள் இருக்கின்றன. இதில் நல்ல குணங்களும் உண்டு. எனவே கடுகு விஷயத்தில் கவனமாக இருப்பதே நல்லது.

## செயல்பாடுகள்

- நமது சுற்றுப்புற மூலிகைகளைப் பாதுகாக்கும் வண்ணம் துண்டுப் பிரசுரம் ஒன்றைத் தயார் செய்க.
- நாட்டுப்புறப் பாடலில் பயின்றுள்ள பேச்சுமொழிக்கு இணையான எழுத்துமொழிச் சொற்களை எழுதுங்கள்.
- மாணவர்களைப் பல குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிடமும் மருத்துவ இதழ் வெளியிடுவதற்கான படங்கள், பழமொழிகள், மருந்தாகும் உணவுப்பொருட்களின் பெயர்கள், பத்திரிகையில் வரும் மருத்துவச் செய்திகள் இவற்றைச் சேகரித்து வரக்கூறி, ஒருங்கிணைத்து மருத்துவ இதழ் வெளியிடுங்கள்.
- வெள்ளித்தேர் பூட்டி என்ற தாலாட்டுப் பாடலில் வரும் உவமைகளைச் சுட்டி இதுபோன்ற பிற உவமைகளையும் கண்டறிந்து எழுதுங்கள்.
- விளையாட்டுப் பாடல்களைத் தொகுத்துச் சிறு நூல் தயாரித்து வெளியிடுங்கள்.

# அலகு 5

# பாசப் பறவைகள்



தூய மனத்தினின்று வெளிப்படும் உன்னத உணர்வே மனித நேயம். இல்லாது வருந்தும் மனிதர்க்கு ஒன்று அளிக்கப்படும் பொழுது அது இறைவனைச் சென்றடைகிறது என்கிறார் திருமூலர். மனிதர்களை மட்டுமின்றிப் பிற உயிர்களையும் தன்னுயிர் போல் கருதுவதே மனித நேயம்.

**முதன்மைக் கற்றல் அடைவுகள் :**

- படைப்பிலக்கியங்களில் இன்றைய வாழ்க்கைச் சூழலையும் பிரச்சினைகளையும் பொருத்திப் பார்த்து எழுதுகிறார்கள்.
- தரப்பட்டுள்ள தலைப்பிற்கேற்பச் சொற்பொழிவு குறிப்பு எழுதுகிறார்கள்.
- சமூக மேம்பாட்டில் மாணவர்களின் பங்கினைச் சுற்றிக்காட்டி எழுதுகிறார்கள்.
- பாடப்பகுதி காட்டும் நற்கருத்துகளை உள்வாங்கி, அதற்கேற்பச் செயல்படுகிறார்கள், எழுத்துவடிவில் பிறருக்கு உணர்த்துகிறார்கள்.



# கல்லுக்குள் ஈரம்

## சுமை பேதம்

ரிக்ஷாக்கார மருதையாவுக்குப் பூர்வீகம் தென்னாற்காடு ஜில்லாவைச் சேர்ந்த விக்கிரவாண்டி.

கல்யாணம் கட்டிக்கொண்ட இரண்டு வருஷத்திற்கெல்லாம் பெண்சாதியோடு ஏற்பட்ட சச்சரவைச் சாக்காக வைத்துக் கொண்டு ஏற்கெனவே தன் உள்ளத்தைக் கவர்ந்திருந்த கௌரவ லட்சியமான மிலிட்டரியில் சேர்ந்து இரண்டு வருஷத்திற்குப் பின் கையில் இரண்டு நூறு ரூபாய் ரொக்கத்துடன் விக்கிரவாண்டிக்கே திரும்பி வந்து பழைய மருதையாவாகவே காலம் கழித்து வந்தான்.

என்னதான் இருந்தாலும் அந்த வானம் பார்த்த பூமியில் அவனால் வாழ்க்கை நடத்த முடியவில்லை. கடைசியில் கையிலிருந்த சில பத்து ரூபாய்களை வைத்துக் கொண்டு என்ன 'பிசின்ஸ்' நடத்திப் பிழைத்து விடலாமென்று நினைத்தானோ? தன் சகதர்மிணி சகிதமாக ஒரு நாள் சென்னை வந்து சேர்ந்தான்.

என்னென்னவோ முயற்சிகள்.... எல்லாவற்றிலும் அவனைப் போன்றவர்களின் போட்டியும் கூட இருந்தது. முயற்சிகள் யாவும் வியர்த்தமாயின. பின்புதான், தன்னையொத்த மனிதர்களுடன் போட்டியிடுவதைவிட யந்திரங்களுடனும், கால்நடைகளுடனும் போட்டியிடுவது எவ்வளவோ மேல் என்று நினைத்து, முடிவில் ஒருநாள் கம்பீரத்துடன் 'ரிக்ஷா' வண்டியின் ஏர்க்காலைப் பற்றிக் கொண்டு தார்ரோட்டில் வியர்வைத் துளிகள் சிந்தித் தெறிக்க ஓடி ஓடி உழைத்தான்; சம்பாதித்தான்.

எழும்பூர் ரயில்வே ஸ்டேஷன் அருகே மேம்பாலத்தின் இறக்கத்தில் தூங்கு மூஞ்சி மரத்தடியில் அவன் குடும்பம் நடத்தினான்.... அவனைப் போன்று அவன் சகாக்கள் பலரும் அப்படித்தான் அங்கு வாழ்ந்தனர்.

அவன் மனைவி பூங்காவனத்துக்கு மட்டும் சிற்சில சமயங்களில் தன் ஊரில் தான் வாழ்ந்த வாழ்க்கையும், இப்படி மரத்தடியில் காய்ச்சிக் குடிக்க வேண்டிய காலம் வந்ததையும் நினைக்கும் போது மனம் நையத்தான் செய்யும்.... என்றாலும் மருதைய்யாவின் சிரிப்பும் பாட்டும், கிண்டலும் கேலியும் அவற்றையெல்லாம் தட்டியெறிந்து மறக்கடித்து விடும்.

அன்று ஊரிலிருந்து பூங்காவனத்தின் தம்பி செல்லப்பன் வந்திருந்தான். தன் மாமன் பட்டணத்தில் என்னவோ பெரிதாக வேலை பார்ப்பது போலவும் தனக்கும் 'ஏதாவது வேலை கெடைச்சி ஒழுங்கா பொழச்சிக்கலாம்' என்றும் எண்ணமிட்டு வந்த செல்லப்பனுக்கு "அக்காவும் மாமனும் மரத்தடியில் பொங்கித் திங்கறதும், மாமன் மாடு மாதிரி மனுசனை வண்டியிலேத்தி இஸ்த்துக்கினு போறதும்" பெருத்த ஏமாற்றமாகவும் அவமானமாகவும் இருந்தது.

"ஏ, மாமா... போயும் போயும் பட்டணத்துக்கு ரிக்ஷா வலிக்க வா வந்தே?......'' அவன் கேள்வியில் கிண்டலும் வருத்தமும் கலந்திருந்தன.

''வேறே என்னடா பண்றது? இதைவிட நல்ல வேலென்னு வேறே ஒண்ணும் எனக்குத் தோணலே... எனக்கே இன்னிக்கு இஸ்டம்னா வண்டியெ வலிச்சிக்கினு ரெண்டு சவாரி அடிப்பேன்! அப்போ மாமனுக்குக் கறியுஞ் சோறுந்தான்.... ஒரு நாளைக்கு அலுப்பா இருந்துதுனா எப்பேர்ப்பட்ட ராஜா வந்து சவாரி கேட்டாலும், போடா ஜாட்டான்னு வண்டியிலேயே படுத்துக் கெடப்பேன்.... நம்ம இஷ்டப்படி

நம்ம வேலெ... வேறெ என்னடா வேணும்...."

''அது என்னவோ மாமா.... நம்ம ஊர்க்காரங்க யாராவது பார்த்தாங்கன்னா...."

"அட... இவன் யார்ரா..... ஊர்க்காரன் ஊர்லே... இங்கே என்னா திருடறமா, கொள்ளை அடிக்கறமா... கஷ்டப்பட்டு ஒழச்சா கூலி... இதிலே என்னா மச்சான் அவுமானம்?...."

"எனக்கு என்னவோ பிடிக்கலை மாமா...."

''போடா.... இவுரு கலெக்டரு பேரன்.... கவுனரு உத்தியோகந்தான் பாப்பாரு- நம்மாலே ஆவாதுடா சாமீ-"

சரி... சோத்தெத் துன்னுப்புட்டுப் பேசுங்க...." என்று அழைப்பு விடுத்தாள் பூங்காவனம்.

அலுமினியம் தட்டிலிருந்த பழைய சோத்தைச் சாப்பிட்டுக் கொண்டே சொன்னான் மருதை :

"தோ... பாருடா மச்சான்.... இந்தக் காலத்திலே எந்த வேலையும் செஞ்சப் பொழைக்கலாம்... அதுலே என்னா கேவலம்! வேணும்னா சொல்லு; நம்ம நாயுடு வூட்லே இன்னும் ரெண்டு வண்டி புதுசா வருது..... ஒனக்கும் ஒண்ணு வாடகைக்குப் புடிச்சி தர்றேன்."

''சே.... சே.... நா மாட்டேன்; வந்த வழியெப் பார்த்துக்கினு ஊருக்குப் போறேன்."

''ஐய, அவனெப் புடிச்சிக்கிட்டு நீயேன் வம்பு குடுக்கிறே... என்னமோ வந்தான்... ரெண்டு நாளுக்கு இருந்துட்டுப் போறான்'' என்று தன் தம்பிக்குப் பரிந்து பேசினாள் பூங்காவனம்.

"டேய்.. மச்சான், எங்கூட வர்ரியா பட்டணமெல்லாம் சுத்திக் காட்றேன், உம்... நீதான் ராத்திரிக்கு ஊருக்குப் போறியே; சரி... ஏறு வண்டியிலே அந்தப் பக்கம்தான் போறேன்...."

"சீ... என்னெ ஒக்காரவெச்சி மாமன் இழுக்கிறதா?" என்று நினைத்துச் செல்லப்பன் தயங்கினான்

"வேணாம்... நா நடந்தே வர்றேன்....."

"டே... ஏர்ரா... எந்தெந்தப் பசங்களெயெல்லாம் நா ஏத்திக்கினு போறேன். ஒன்னெ ஏத்திக்கினா என்னாடா? உம்... சும்மா ஏறி உக்காரு..."

வண்டியில் ஏறி உட்காரும்பொழுது செல்லப்பனுக்கு உடல் குன்றி உள்ளமெல்லாம் கூசியது.

'லைட் ஹவுஸ்' பார்க்க செல்லப்பனை விட்டுவிட்டு அதற்குள் எங்கோ ஒரு சவாரி போய்விட்டு மீண்டும் ஹைகோர்ட் அருகே மரத்தடியில் வந்து நின்றான் மருதையன்.

உள்ளே சென்ற செல்லப்பன் இன்னும் வெளியே வரவில்லை.

மருதையனுக்கு அருகே யாரோ ஒரு மனிதர் பேப்பர் படித்துக் கொண்டு நின்றிருந்தார்.. உள்ளிருந்து வருவோரையும் பேப்பரையும் மாறி மாறி அவர் பார்ப்பதிலிருந்து அவரும் யாருக்காகவோ காத்திருக்கிறார் என்று தெரிந்து கொண்டான் மருதை.

"என்னா சார்... யாருக்கொசரமாவது காத்துக்கினு இருக்கிறியா..." என்று பேச்சுக் கொடுத்தான்.

''ஆமா... பொண்டுவ போயிருக்காங்க இன்னங் காணமே'' என்று சொல்லிக்கொண்டே மீண்டும் பேப்பரில் பார்வையை ஓட்டினார் அந்த ஆசாமி.

''என்ன சார் பேப்பரிலே விசேஷம்? சண்டே வருமா?"


"உம்... நம்ம இந்தியாவுலே வராது...."

"மந்திரிங்க எதனாச்சும் பேசி இருக்காங்களா சார்...."

''ஓ.... பேசி இருக்காங்க. இந்த ரிக்ஷா வண்டியெல்லாம் எடுத்துப்புடணுமின்னு கூடப் பேசி இருக்காங்க...."

"என்னா சாமி....? என்னா....."

''மனிதனை மனிதன் சுமந்து செல்லும் ரிக்ஷா வண்டிகள் மிகவும் அநாகரீகமானவைகள் தான்னு ஒரு மந்திரி பேசி இருக்கார்'' என்று பேப்பரில் இருந்த வாசகத்தைப் படித்துக் காட்டினார் அவர்.



“அது என்னா சாமி எப்பப் பார்த்தாலும் இப்படிப் பேசிக்கினே இருக்காங்க?.... நானும் ரொம்ப தடவை கேட்டுப்புட்டேன் இல்லே... நான்தான் கேக்கறேன்... மாட்டு வண்டி ஒஸத்தியா குதிரை வண்டி ஒஸத்தியா? சொல்லு சாமீ...”

“குதிரை வண்டிதான்....”

“அப்படின்னா மனுசன் மாட்டையும் குதிரையையும் காட்டியும் மட்டமாவா பூட்டான்? மாடு வலிக்கிற தெங்காட்டியும் குதிரை வண்டி ஒஸத்தினா, மனுஷன் இஸ்கற வண்டி எல்லாத்தியங்காட்டியும் ஒஸத்தி இல்லிய சாமீ...” அந்த மனிதருக்குப் பதில் சொல்ல முடியவில்லை... சிரித்தார்.

லைட் அவுஸுக்குள்ளிலிருந்து செல்லப்பனும் வந்துவிட்டான்.

செல்லப்பனை ஏற்றிக்கொண்டு அவன் புறப்பட்ட நேரத்தில், ‘‘ஏ! ரிக்ஷா’’ என்ற குரல் கேட்டுத் திரும்பினான்.

“ராயபுரத்துக்கு வர்ரியா..”

‘‘இல்லே, எம்மச்சானெ ரெயிலுக்கு ஏத்திக்கினு போறேன்” என்று சிரித்தான் மருதை!

வண்டி எர்ரபாலு செட்டித் தெருவில் வந்து கொண்டிருந்தது. பெரிய பெரிய பேல்களையும் மூட்டைகளையும் ஏற்றிய கட்டை வண்டிகளையும் மூன்று நான்கு பேராய் வியர்வை கசிந்து கசிந்து உடலெல்லாம் வழிய,

‘‘ஏறு... ஹம்... தள்ளு... அடி..... அடி...’’ என்று பெருஞ்சப்தமிட்டுக் கொண்டு தள்ளி வருவதையும் செல்லப்பன் கண்டான். ‘‘டே..... மச்சான்... இது தேவலாமாடா?” என்றான் மருதை.

‘‘பின்னே என்ன மாமா? இது எவ்வளவோ தேவலாமே...” என்றான் செல்லப்பன்.

மருதை சிரித்தான்.

“டேய்... எல்லாச் சொமையும் ஒன்னுதான்”

“அதில்லே மாமா. என்னா இருந்தாலும் ஒரு மனுசனை வெச்சு இன்னொரு மனுஷன் வலிச்சிக்கினு போறதுன்னா கேவலந்தான்.”

"டேய் மச்சான், நம்ம வண்டியிலே எதெ வச்சி இஸ்த்தாலும் பாரம் பாரந்தான்; அதிலே எதுக்கு இது மனுஷன் பாரம் இது மூட்டே பாரம்னு நெனைச் சிக்கணும்? என்னமோ ஒரு மூட்டென்னு நெனைச் சிக்கறது. அவங்களெ மனுஷனா மதிச்சாத்தானே நமக்குக் கேவலம்? நம்பளை மனுசன்னு மதிக்காமெ நம்ம முதுவு மேலே ஒக்காந்திக்கிற வங்களை நாம்ப ஏன் மனுசன்னு நெனைக்கணும்?"

ஒருகணம் செல்லப்பன் யோசித்தான். வண்டி பிராட்வேயில் வந்து கொண்டிருந்தது.

"மாமா ரிக்ஷாவெ நிறுத்து என்றான். மருதைய்யா ஒன்றும் புரியாமல் வண்டியை நிறுத்தவே, கீழே குதித்த செல்லப்பன் நா நடந்து வர்ரேன் மாமா" என்றான்.

"என்னடா மச்சான் திடீர்னு?"

"அதுவா மாமா, நா மனுசன் அதனாலே" என்று 'பளிச்' செனக் கூறினான் செல்லப்பன்.


மருதையா சப்தம் போட்டுச் சிரித்தான்.

மறுநாளிலிருந்து செல்லப்பனும், தன் மாமனைப் போலவே 'ரிக்ஷா வலிக்க' ஆரம்பித்துவிட்டான்!

தார் ரோட்டில் வியர்வைத் துளிகள் சிந்தித்தெறிக்க ஓடி ஓடி உழைத்தான். ஆமாம். அவன் அகராதிப் படி ரிக்ஷாவை இழுத்தால் மனிதன் தான்.... ரிக்ஷாவில் சவாரி செய்பவர்களைப் பற்றி அவனுக்குக் கவலையில்லை.

**– ஜெயகாந்தன்**

### ஜெயகாந்தன்



இன்றைய தமிழ்ச்சிறுகதையின் ஏற்றத்துக்கு ஜெயகாந்தனின் கதைகள் பெருமளவு உதவியுள்ளன. எதார்த்த உலகின் குரூர பயங்கரங்களையும், சமுதாயத்தின் இருண்ட மூலைகளையும் ஜெயகாந்தனின் சிறுகதைச் சாட்டை பதம் பார்த்துள்ளது. இனிப்பும் கரிப்பும், ஒரு பிடிசோறு, தேவன் வருவாரா?, சுமைதாங்கி, யுகசந்தி, உண்மை சுடும், புதிய வார்ப்புகள் முதலிய சிறுகதைத் தொகுப்புகள் இருபெரும் முழுத்தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. சிறந்த நாவலாசிரியர் ஆவார். சாகித்திய அக்காதமியின் ஞானபீடம் விருது பெற்றவர்.

## செயல்பாடுகள்

- "அப்படின்னா மனுசன் மாட்டையும் குதிரையையும் காட்டியும் மட்டமாவா பூட்டான்? மாடு வலிக்கிற தெங்காட்டியும் குதிரை வண்டி ஒஸத்தினா, மனுஷன் இஸ்கற வண்டி எல்லாத்தியங்காட்டியும் ஒஸத்தி இல்லிய சாமீ..." அந்த மனிதருக்குப் பதில் சொல்ல முடியவில்லை... சிரித்தார். என்னும் கதைப்பகுதியைத் தூய தமிழில் எழுதுங்கள்.
- 'மனித நேயம் மானிடத்தை மாண்புறச் செய்யும்' என்ற தலைப்பில் பத்திரிகை தலையங்கம் எழுதுங்கள்.
- ரிக்ஷாக்கார மருதையாவின் பாத்திரப்படைப்பை ஆய்வு செய்து விமர்சனக் குறிப்பு எழுதுங்கள்.

# புத்தரும் ஏழைச் சிறுவனும்

(அரண்மனையை விட்டு வெளியேறிய புத்தர், வழிநடந்த களைப்பால் ஓரிடத்தில் சோர்ந்து கிடந்தார். அவரைக் கண்ட ஆயர் குலச் சிறுவன் ஒருவன், தன் தாழ்ந்த குடிப் பிறப்பை எண்ணிக் கலயத்தில் பால் கறந்து அவருக்குக் கொடுக்கத் தயங்கினான். அந்நேரம் பிறப்பினால் உயர்வு தாழ்வு பாராட்டக் கூடாது என்று புத்தர் அவனுக்குப் போதித்த வரலாறு இங்குக் கூறப்படுகிறது)

## புத்தர் அறிவுரை

உலகம் புகழ்பெரியோன் - இந்த
உரையினைக் கேட்டநநாள்
அலகில் கருணையினால் - சொன்ன
அமுத மொழிஇதுவாம்.

இடர் வரும்போதும் - உள்ளம்
இரங்கி டும்போதும்
உடன்பி றந்தவர்போல் - மாந்தர்
உறவு கொள்வர்அப்பா!

ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப்பார்த்தாலும் - சாதி
தெரிவ துண்டோஅப்பா?

எவர்உ டம்பினிலும் - சிவப்பே
இரத்த நிறமப்பா!
எவர்வி ழிநீர்க்கும் - உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா!

பிறப்பி னால்எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!

நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்.



- கவிமணி


### கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை (1876-1954)



கன்னியாகுமரி மாவட்டம் தேரூரில் பிறந்தவர். அமைதியும், மென்மையும் தவழும் இவரது கவிதைகள் சிறுவர் இலக்கியத்துக்காகச் சிறப்புடன் நினைவு கூறப்படுபவை. இவருடைய முக்கிய நூல்கள் மலரும் மாலையும், ஆசிய ஜோதி, நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம், உமர்கய்யாம் ஆகியனவாகும்.

### செயல்பாடுகள்

- ஆசியஜோதி எனும் நூலின் ஆசிரியர் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை. 206 பக்கங்களைக் கொண்ட இந்நூல் செய்யுள் வகையைச் சேர்ந்தது. இதன் விலை ரூ.200. இது விஜயா பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. இதனை நூலடைவு செய்க.
- புத்தரின் அறிவுரை என்ற கவிதையின் பொருளைத் தொகுத்து எழுதுங்கள்.
- இப்பாடலுக்கான மையக் கருத்தைச் சுட்டி நயம் பாராட்டுங்கள்.
- நீங்கள் பார்த்த அல்லது செய்த மனிதநேயச் செயல்பற்றி ஒரு அனுபவக் குறிப்பு எழுதுங்கள்.
- மனித நேயத்தை உணர்த்தும் செய்திகளைச் சேகரித்து இதழ் ஒன்று தயார்செய்து வெளியிடுங்கள்.



# நெஞ்சம் மறப்பதில்லை

## அன்னை தெரசா

ஐரோப்பா கண்டத்தில் அல்பேனிய நாட்டில் ஸ்காப்சி என்ற சிற்றூரில் 1910ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27ஆம் நாள் சாதாரண குடும்பத்தில் தெரசா பிறந்தார். தெரசாவுக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் 'ஆக்னஸ் கான்ஸ்கா' என்பதாகும்.

ஆக்னஸ் தொடக்கக்கல்வியை 'சேக்ரட் ஹார்ட் சர்ச்' ஆரம்பப்பள்ளியில் கற்றாள். அப்பள்ளியில் பயின்ற ஏழைக்குழந்தைகளுக்குப் பாதிரியார்கள் கல்வியுடன் உணவும் உடையும் கொடுத்து ஆதரித்ததை ஆக்னஸ் பார்த்தாள். மாணவியாக இருந்த போதே கிறித்தவ மன்றம் ஒன்றில் உறுப்பினராகவும் சேர்ந்தாள். ஏழைகளுக்குத் தொண்டு புரிய வேண்டும் என்ற ஆர்வம் ஆக்னஸ் மனத்தில் விதைக்கப்பட்டது இந்த நேரத்தில்தான்.

யூகோஸ்லேவியாவிலிருந்து அனுப்பப்பட்ட ஜெசூட் பாதிரியார்கள் இந்தியாவில் வறுமையாலும், நோயாலும் வாடியிருந்த வங்காள மக்களுக்குத் தொண்டு புரிந்து கொண்டிருந்தனர். அவர்கள் நாடு திரும்பிய போது கல்கத்தாவில் உள்ள லோரெட்டா கன்னியர் மடத்தைப் பற்றி ஆக்னஸிடம் தெரிவித்தனர். இந்த மடத்தின் தலைமையகம் அயர்லாந்தின் தலைநகரான டப்ளினில் இருந்தது. வங்காளத்திற்குச் சேவை புரியச் செல்லும் கன்னிமார்களில் ஒருவராகச் சேர்ந்துகொள்ள ஆக்னஸ் உறுதி பூண்டார்.

1928ஆம் ஆண்டு ஆக்னசுக்குப் பதினெட்டு வயது நிறைவுற்றது. 1928 நவம்பர் 28ஆம் நாள் முதல் டப்ளின், ராத்ஃபான்ஹாம் ஆகிய நகரங்களில் இருந்த லோரெட்டோ கன்னி மடங்களில் துறவு நிலைப் பயிற்சியைத் துவங்கினார். சுமார் இரண்டு மாதங்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.

1928 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தியாவுக்குக் கப்பலில் பயணம் மேற்கொண்டார் ஆக்னஸ். அவரது கப்பல் பயணத்தின் போதே புத்தாண்டு 1929 ஆம் ஆண்டு பிறந்தது.

கொல்கத்தா நகரம் வந்த ஆக்னஸ் அங்குச் சில நாட்கள் தங்கியிருந்தார். நகரில் அவர் கண்ட கொடுமையான பஞ்சம், பசியாலும், நோயாலும் வாடிக் கிடக்கும் தெருவோரக் குழந்தைகள், தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட குடிசைவாசிகள், இவற்றையெல்லாம் கண்ணுற்ற ஆக்னஸ் மனம் வேதனையடைந்தார்.

ஆக்னஸ் 1929 ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் நாள் டார்ஜிலிங் அனுப்பப்பட்டார். இங்குள்ள துறவுப் பயிற்சிப் பள்ளியில் இரு ஆண்டுகள் கிறித்தவ மதக் கல்வியும், ஆசிரியப் பயிற்சியும் பெற்றார். 1931 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் நாள் கிறித்தவ சமயத்தின் மரபுப்படி பெண் துறவியாக உறுதிமொழி எடுத்துக் கொண்டார் ஆக்னஸ். அப்போது தனது பெயரினைச் சகோதரி தெரசா என்று மாற்றிக் கொண்டார்.



கொல்கத்தா புறநகர் பகுதியான எண்டல்லியில் இருந்த புனித மேரி மகளிர் பள்ளியில் பணிபுரிய சகோதரி தெரசா அனுப்பப்பட்டார். அந்தப் பணியினை மிகவும் சிறப்பாகச் செய்தார் தெரசா.

1937ஆம் ஆண்டு தெரசா அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியையாகப் பதவி உயர்வு பெற்றார். அவருடைய பள்ளிக்கு அருகிலேயே ஏழைகள் வாழும் சுகாதாரமற்ற மோதிஜில் என்னும் குடிசைப் பகுதியைப் பார்த்து உள்ளம் வேதனை கொண்டார். ஏழைகளுக்கு நம்மால் இயன்ற தொண்டை ஏன் செய்யக்கூடாது? என்று அவர் சிந்திக்கத் தொடங்கினார்.

1948ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆம் நாள் தெராசா ஹேரெட்டரி கன்னிமடத்தை விட்டு வெளியேறினார். பீகாரின் தலைநகரமான பாட்னாவில் உள்ள செயிண்ட் ஃபேமிலி மருத்துவமனையில் முதலுதவி புரிதல், புண்ணைக் கழுவி மருந்து போடுதல் முதலிய அடிப்படைப் பணிகளில் பயிற்சி பெற்றார். அங்கிருந்த செவிலியர் பயிற்சி நிலையத்திலும் அவர் சுமார் மூன்று மாதங்கள் அடிப்படை மருத்துவப் பயிற்சியினைப் பெற்றார். சகோதரி தெரசா அன்னை தெரசா என அழைக்கப் பட்டார்.

1948 ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் நாள் கொல்கத்தா வந்து சேர்ந்தார் தெரசா. அவர் மோதிஜில் பகுதியில் தான் தனது முதல் சேவை யைத் தொடங்கினார்.

நாட்கள் செல்லச்செல்ல நல்ல உள்ளம் படைத்தோர் தாங்களாகவே முன் வந்து நிதியுதவிகளை வழங் கினர். பகல் முழுவதும் குடிசைப்பகுதியில் கல்விப் பணியும், மருத்துவப்பணியும் செய்து வந்த அன்னைக்குத் தங்குவதற்கு வசதியான இடம் தேவைப்பட்டது.

பாதிரியார் ஹென்றிக்கு மைக்கேல் கோம்ஸ் என்ற செல்வந்தரின் மாடிவீடு கொல்கத்தாவின் மையப் பகுதியில் இருப்பது தெரியும். இந்த வீட்டின் இரண்டாவது மாடியைப் பாதிரியார் அன்னைக்கு ஏற்பாடு செய்து கொடுத்தார். அங்கே குடியேறினார் அன்னை தெரசா. அன்னைக்கு உதவியாகப் பன்னிரண்டு கன்னியர் வந்து சேர்ந்தனர்.

1950ஆம் ஆண்டு அன்னை தெரசாவால் கொல்கத்தாவில் 'மிஷனரிஸ் ஆப் சேரிட்டி' என்ற அறக்கட்டளை இயக்கம் தொடங்கப்பட்டது.

அன்னையின் தொண்டு ஒரு குறிப்பிட்ட துறையில் மட்டும் அடங்குவது அன்று. அது பன்முகத் தன்மை கொண்டது. ஏழைக் குழந்தைகளுக்குக் கல்வி அறிவு புகட்டல், திக்கற்ற குழந்தைகள் காப்பகம், இரப்போர் நல இல்லம், முதியோர் காப்பகம், தொழு நோயர் இல்லம் என்று சமுதாயத்தில் ஆதரவற்ற அனாதைகளுக்குத் துணையாய் இருந்து பாதுகாத்து வந்தார்.

1971ஆம் ஆண்டு நடைபெற்ற வங்கதேசப் பிரிவினையின் போது கிழக்கு பாகிஸ்தானிலிருந்து லட்சக்கணக்கான அகதிகள் கொல்கத்தாவில் குவிந்தனர். அகதிகள் முகாமை பார்வையிட வந்த

அமெரிக்க செனட்டர் எட்வர்ட் கென்னடி அன்னை யாரின் அறக்கட்டளைக்கு ஒரு லட்ச ரூபாய் நன்கொடை வழங்கினார்.

இரப்போர் நல இல்லம் தொடங்கிய 1954 முதல் 1980 வரை சுமார் 35,000 க்கும் மேற்பட்ட முதியோர் களுக்கு இந்த இல்லத்தில் பாதுகாப்பும் சிகிச்சையும் கொடுக்கப்பட்டிருந்தன. இதில் பாதி பேர் நோய் முற்றிய நிலையில் இயற்கை எய்தினர்.

உலகில் உள்ள தொழுநோயாளிகளில் ஐந்தில் ஒரு பகுதியினர் ஏழைநாடான இந்தியாவில் வசிக் கின்றனர். ஏழைகள் வாழும் குடிசைப்பகுதிகள் மிகுந்த கொல்கத்தாவில் தொழுநோயாளிகள் ஏராளம்! அன்னை தெரசா 1957 ஆம் ஆண்டு கோப்ரா என்ற பகுதியில் முதலில் ஐந்து தொழு நோயாளிகளை வைத்து தொழுநோய் இல்லம் தொடங்கினார்.

போப் ஜான் அமைதிப்பரிசு 1971 ஆம் ஆண்டு அன்னை தெரசாவுக்கு வழங்கப்பட்டது. பரிசுத் தொகையான 21,500 டாலரை தொழுநோய் இல்லத் திற்கு வழங்கி விட்டார்.

அன்னையின் தொண்டு கடல் கடந்தும் பரவியது. உலகின் மிகச்சிறந்த பரிசான நோபல் பரிசு 1979 ஆம் ஆண்டு அன்னை தெரசாவிற்குக் கொடுக்கப் பட்டது. முப்பது ஆண்டுகாலம் ஆதரவற்ற ஏழைகளுக்கும், தொழு நோயாளிகளுக்கும் இடையறாத தொண்டு புரிந்ததற்காக இந்த அமைதிக்கான பரிசு அன்னைக்கு வழங்கப்பட்டது.

1980ஆம் ஆண்டு இந்தியாவின் மிக உயரிய விருதான பாரத ரத்னா விருது அன்னைக்கு வழங்கப்பட்டது. அன்னையின் பிறந்தநாள் 1980 அக்டோபர் 27 ஆம் நாள் கொண்டாடப்பட்டது. இந்த எழுபதாவது பிறந்தநாளின் போது இந்திய அரசின் தபால்துறை அன்னையின் உருவப் படம் கொண்ட அஞ்சல் தலையை வெளியிட்டது.

1988 ஆம் ஆண்டு நடந்து செல்லும் போது கீழே விழுந்து விட்டார். அவரின் மூன்று இடுப்பெலும் புகள் முறிந்துவிட்டன. 1989 ஆம் ஆண்டு அன்னை கடுமையான மாரடைப்பால் பாதிக்கப் பட்டார்.

1997 மார்ச் 13 இல் அறக்கட்டளையின் தலைமைப் பதவியை அன்னை தெரசா 67 வயதான சகோதரி நிர்மலாவிடம் ஒப்படைத்தார். அப்போது அன்னை யின் வயது 86.

1997 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆம் நாள் அன்னை தெரசா கொல்கத்தாவில் இயற்கை எய்தினார். பொதுமக்கள் அஞ்சலிக்காக அவரது உடல் ஒரு வாரம் கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்தது. செப்டம்பர் 13 ஆம் நாள் அன்னையின் இறுதி ஊர்வலம் நடைபெற்றது. அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டார்.

**– மணிமேகலைப் பிரசுரம்**

## செயல்பாடுகள்

- மனித நேயத்தை வலியுறுத்தும் வகையான ஊர்வலத்தில் ஏந்திச் செல்வதற்கான முத்திரை வாக்கியம் தயாரியுங்கள்.
- மனித நேயப்பண்பை உணர்த்தும் பிற கவிதைகளைச் சேகரித்து வெளியிடுங்கள்.

# விபத்து

அதிகாலை நேரம்,

சியாமளா அந்த மருத்துவமனையில் ஒரு இருக்கையில் அமர்ந்திருந்தாள். அடிக்கடி ஒரு நடந்ததை நினைத்தாள். அவள் அனுமதி யின்றியே கண்ணீர் துளிர்த்தது.

காலை நேரம் என்பதால் மருத்துவமனையில் கூட்டம் அவ்வளவாக இல்லை. அறையில் இருந்து மருத்துவர் விஜி வெளிப்பட்டாள். அவள் சியாமளாவின் தோழியும் கூட, 'விஜி' எனக்கு ரொம்ப பயமாக இருக்கு டி நான் வேணும்னு பண்ணல டி" என்றாள் கண்ணீருடன். "நீ பயப்படாத சியாமளா நான் இருக்கேன் முடிஞ்ச வரையில் முயற்சி செய்றேன். உன் நல்ல மனசுக்கு ஏதும் ஆகாது. தைரியமா இரு'' என்று ஆறுதல் கூறிவிட்டு "இன்னைக்கு டூட்டி வேற லீவ் நாள் தான் அவுட் பேசன்டையும் பாக்கணும். நீ கொஞ்சம் நேரம் உக்காரு. நான் டாக்டரைப் பாத்துட்டு வரேன். அப்பறம் அந்த ஆளுக்கு ஸ்கேன் ரிப்போர்ட் எல்லாம் வந்துடும். அதை பாத்துட்டு "நாம ஒரு முடிவுக்கு வரலாம்" என்று சொல்லிவிட்டு அவள் பணியைப் பார்க்கச் சென்று விட்டாள்.

ஆனால் சியாமளாவுக்குத்தான் மனம் அமைதி கொள்ளவில்லை.

சியாமளா கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படிப்பவள். நல்ல அழகானவள். சியாமளாவின் தந்தை சதாசிவம், ஊரில் நல்ல வசதி படைத்த மனிதர். சியாமளாவின் தாய் பார்வதம். அவர்களுக்கு சியாமளாதான் ஒரே மகள். சந்தோசமே வாழ்வென வாழ்ந்து வந்த பெற்றோர் சியாமளாவின் விருப்பத்திற்கு மாறாக எதுமே செய்தது கிடையாது. சியாமளாவும் தன் தாய் தந்தையின் மனம் புண்படும்படி என்றும் நடந்ததில்லை. அவளைப் பொறுத்த மட்டில் வாழ்வின் எல்லா சுகங்களும் ஒரு சேரக் கிடைத்துவிட்டது.

சியாமளாவுக்கு கார் ஓட்டுவது மிகவும் பிடிக்கும். எல்லாக் கார் பந்தையங்களிலும் கலந்து கொள்வாள்.

அவளிடம் இருக்கும் இன்னொரு பண்பு அவளின் விளையாட்டுத்தனம். எதற்கும் கவலை இல்லை. வாழும் அவளுக்கு இது பிறவி குணமாகவே இருந்தது.

மருத்துவமனையில்,

விஜி தன் அறையில் அமர்ந்தது அந்த மனிதனின் ஸ்கேன் ரிப்போர்ட்-ஐப் பார்த்துக் கொண்டிருந்தாள். எதிரே சியாமளா, " விஜி அந்த ஆள் பிழைப்பாரா விஜி" என்று பயத்துடன் கேட்டாள்.

விஜி அந்தக் காகிதங்களை நன்றாக ஆராய்ந்து பார்த்துவிட்டு ஒரு சலிப்புடன் சியாமளாவை ஏறி விட்டாள். கொஞ்சம் கஷ்டம்தான் சியாமளா அவருக்கு தலையில் அடிபட்டு இருக்கு" என்ன விஜி சொல்ற அவருக்கு ரத்தமே வரலையே" இது சியாமளா.

''அது தான் இப்ப பிரச்சினையே, பொதுவா தலையில் அடி பட்டால் உடனே ரத்தம் வந்திடணும் அப்படி வந்துட்டா கொஞ்சம் சிரமம் இல்லாம ட்ரீட்மென்ட் கொடுக்கலாம். ஆனா அவருக்கு இரத் தம் பிளாக் ஆயிடுச்சி. அதாவது அந்த காயத்து லேயே ரத்தம் உறஞ்சிடிச்சி. சரி இந்த விபத்து எப்படி ஆனது சொல்லு சியாமளா" என்றாள் விஜி.

"....................." சியாமளாவிடம் மௌனம் மட்டுமே

''இதோ பாரு சியாமளா ஒரு விபத்து நடந்து ஒருவருக்கு சிகிச்சை கொடுக்கணும்னா காவல் துறையோட கவனத்திற்கு கொண்டு போய் அவங்க விசாரிச்சா தான் முடியும். ஆனா நான் பண்ணல நீ என் தோழி. அதனால்தான் உடனே சிகிச்சை அளிக்க ஒத்துக்கிட்டேன். ஆனா நீ என்கிட்ட சொல்லவே தயங்குற. சொல்லு சியாமளா என்ன

நடந்தது. நீ சொல்றத வச்சி தான் மேற்கொண்டு என்ன செய்யலான்னு முடிவு பண்ணனும். சொல்லு சியாமளா" என்று வற்புறுத்தினாள்.


சியாமளா மெல்ல நடந்தவற்றைக் கூறினாள். விஜி காலைல நான் வழக்கம் போல நடைபயிற்சிக்காக கடற்கரைக்குப் போனேன். அங்க ரெண்டு பேர் என்ன பின்தொடர்ந்து வந்தாங்க. நான் அவங்களுக்கு பயந்து வேகமாக கார்ல ஏறிட்டேன். ஆனா என்னை வெரட்டிட்டு வந்தாங்க. நான் .... பயத்துல வண்டிய வேகமா ஓட்டினேன். அப்போ எதிர்பாராதவிதமாக இந்த விபத்து நடந்துடுச்சு. எனக்கு என்ன பண்றதுனே தெரியல்ல. உடனே உனக்கு கால் பண்ணினேன்'' என்றாள் விசும்பலோடு.

''சரி நீ ஏன் அங்கிளுக்கு இந்த விஷயத்த சொல்லாம இருக்க அவர்கிட்ட சொன்னா ஏதாவது ஸ்டெப் எடுத்து உன்ன இதிலிருந்து காப்பாற்றுவாரே" என்றாள் விஜி.

"இல்ல விஜி இது நான் செஞ்ச தவறு. நான் தான் சரி செய்யனும்" என்றாள் சியாமளா. "இதில் உன் தவறு ஒன்றும் இல்லை. இது ஒரு விபத்து நீ தேவைல்லாம அலட்டிக்காத. சரி வீட்டுக்கு போய் அங்கிள்ட விசயத்த சொல்லு. அவர் பாத்துப்பாரு" என்று கூறிவிட்டாள். சியாமளாவிற்கு அவள் கூறியதன் அர்த்தம் புரியாமல் இல்லை. தன் தந்தையிடம் சொன்னா அடிபட்ட மனிதரின் மருத்துவ செலவைத் தானே ஏற்றுக்கொள்வார். ஏன் அவர் இறந்தால் கூட அதற்கான நஷ்ட ஈடாக எதாவது கொடுத்துவிடுவார்.

ஆனால் சியாமளாவின் மனம் அதனால் அமைதி பெறாது. ஒரு மனிதரின் உயிரை வெறும் காகிதத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பவள் இல்லை. அவள், ஏனோ சியாமளாவிற்கு அந்த மனிதரின் விபரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது.

எப்படித் தெரிந்துக்கொள்வது? தந்தையிடம் கூறலாமா



வேண்டாமா என்ற சிந்தனையுடனே வீட்டுக்கு வந்தாள்.

எதிரே சியாமளாவின் அம்மா “என்ன சியாமளா காலங்காத்தல போன பொண்ணு இப்ப வர......... போயிருந்த இவ்ளோ நேரம்” என்று வினவினாள்.

சியாமளாவிற்கு நடந்ததை கூறிவிடலாமா என்று கூடத் தோன்றியது. ஆனால் ஏனோ கார் ...... டோவ்ன் என்று பொய் சொன்னாள். அம்மாவிற்கு தெரிந்தால் பிறகு வெளியில் அனுப்பவே யோசிப்பார், பயப்படுவார் என்றெல்லாம் நிறைய காரணங்கள் இருக்கிறது.

சியாமளா பின் குளித்து முடித்து, டைன்னிங் டேபிள் வந்தாள். அவள் தந்தை அமர்ந்து....... கொண்டிருந்தார். இவளும் சேர்த்து சாப்பிட்டாள். தந்தையிடம் கூறலாமா வேண்டாமா மனப் போராட்டம் தான் சொல்லலாம் என முடிவெடுத்து வாயெடுத்தால், தொலைபேசி அழைத்து அவர் அதனுடன் உறவாடச் சென்றுவிட்டார்.

அதற்கு மேல் அவள் அங்கு இருக்கவில்லை. மருத்துவமனை நோக்கி ஓடினாள். ஒருமுடிவு எடுத்தவளாக.....

மருத்துவமனையில் அந்த மனிதர் இறந்து விட்டார் என்ற செய்தியே சியாமளாவிற்கு காத்திருந்தது. நேரே விஜியிடம் சென்று, ''என்னாச்சு விஜி? எப்படி? என்றெல்லாம் கேள்வி அவளிடம்.

விஜியோ, சாரி, சியாமளா நான் எவ்வளவோ ட்ரை பண்ணேன், பட் இப்படி ஆயிடுச்சு” என்று மருத்து வருக்கே உண்டான பாணியில் கூறிவிட்டாள்.

இருந்தும் சியாமளா தான் எடுத்த முடிவை அரங்கேற்றவே எண்ணினாள். அதை விஜியிடம் கூறியபோது......

“ஐயோ வேண்டாம் சியாமளா நீயோ கல்யாணம் ஆகவேண்டிய பெண். உன் குடும்பமோ மிக வசதியான குடும்பம். நீ இப்படி செஞ்சா உன் குடும்ப மானமே போய்விடும். நீ இத அங்கிள்கிட்ட விட்டுடு. அவர் பாத்துபாரு, சொன்ன கேளு சியாமளா என்று கெஞ்சினாள்.

ஆனால் சியாமளாவோ அவள் முடிவில் உறுதியாக இருந்தாள். அதற்கு மேல் அவளை விஜி வற்புறுத்தவில்லை. அவள் விருப்பம் என்றே விட்டுவிட்டாள்.

மாலை மணி 5.30

இதுவரையில் தன் வாழ்வில் பயணிக்காத ஒரு பாதையில் சியாமளா சென்று கொண்டிருந்தாள். அருகில் அவள் தோழி விஜி.

''சியாமளா நீ செய்ய போற காரியம் எனக்கு இன்னும் பயமா தான் இருக்கு. அவங்கலாம் எங்கே இருப்பாங்களோ என்னவோ நல்ல யோசிச்சு தான் இந்த முடிவுக்கு வந்தியா” என்றாள் விஜி.

“விஜி நான் நல்ல யோசிச்சிட்டேன். நான் செஞ்ச தப்ப என் அப்பாகிட்ட சொல்லி மறைச்சட விரும்பலை. என்னால பாதிக்கப்பட்ட அந்த குடும்பத்துல இருக்கிறவங்ககிட்ட சொல்லி மன்னிப்பு கேட்கப் போறேன். அவங்களுக்கு மனம் இருந்தா, என்ன மன்னிக்கட்டும். இல்லைனா, அவங்க என்ன தண்டனை கொடுத்தாலும் நான் ஏத்துக்கிறேன் என்றாள்.

சியாமளா வழியில் சிலரிடம் விலாசம் கேட்டு கொண்டு ஒரு வாராக கைலாசத்தின் வீடு சேர்ந்தாள். கைலாசம், ஆம் அவர்தான் சியாமாவின் காருக்குப் பலியானவர். ஆனாலும் நல்ல மனிதர்போலும் அவரின் விலாசத்தை தேடும் சிரமம் கூட அவர் சியாமாளாவிற்கு வைக்கவில்லை.

அவர் யார் என்று குழம்பிய சியாமாளாவிற்கு அவரின் பாக்கெட்டில் இருந்த மணிபர்சே வீடு சொன்னது. அதில் பணம் இல்லை. ஆனால் கைலாசத்தின் மனம் தெரிந்தது. அதில் அவர் வைத்திருந்தது வாக்காளர் அடையாள அட்டை. உடல் உறுப்பு தானம் செய்வதற்கான டோனர் கார்டு முதலிய ஒரு நல்ல குடிமகனுக்குத் தேவையான அம்சங்கள் அதிலிருந்து அவரின் விலாசம் கண்டுபிடித்து வந்து சேர்ந்தாள் சியாமளா.

சியாமளா இப்போது தனக்குள் ஒரு புது தைரியத்தை

வரவழைத்துகொண்டு கதவை தட்டியதும் 40 வயது மதிக்கத் தக்க ஒரு பெண்மனி கதவைத் திறந்தாள்.

சியாமளா யார் என்று வினாவினாள். ''நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசணும் அம்மா" என்றாள் நா தழுதழுத்தது.

அவள் சியாமளாவை உள்ளே அழைத்துச் சென்றாள். சியாமளா யார் என்ன என்று வினவினாள்.

திடீரென சியாமளா அழுதது ஏன் என்று அந்த பெண்மணி திகைத்து நின்றாள். அவளிடம் அழற ஏன் அழற" என்று வினா தான் வந்தது.

சியாமளா தன் அழுகையோடு நடந்த யாவற்றையும் கூறினாள். " தங்கள் என்ன தண்டனை கொடுத் தாலும் நான் ஏற்றுக் கொள்வேனம்மா'' என்று கதறினாள்.

ஆனால் அந்தப் பெண்மணி எதும் கூறாமல் கல்போல் இருந்தாள். அவளின் முடிவு என்னவாக இருக்குமோ என்ற பயம் விஜி மனதில்.

அந்த பெண்மணியோ," என் கணவரை நான் பார்க்க வேண்டும்" என்று மட்டும் கூறினாள். காலடியில் முகம் புதைத்து அழுதுகொண்டிருந்த சியாமளா விற்கு அதிர்ச்சி, தவறு செய்தவளாக இருக்கிறேன். என்னை ஒரு சொல் கூட ஏசாமல் தன் கணவரின் உடலைக் காண நினைக்கும் பெண்ணின் உணர்வு களை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

மூவருமாக மருத்துவமனை சென்றனர். அந்தப் பெண்மணி தன் கணவரின் உடலைக் கண்டு அழுது கொண்டிருந்தார். இதற்கிடையில் விஜி ஒரு வேலை செய்தாள் சியாமளாவின் அப்பாவிற்கு போன் செய்து எல்லா விபரத்தையும் சொல்லிவிட்டாள்.

சியாமளாவின் தாயும் தந்தையும் மருத்துவமனை வந்து சேர்ந்தனர். தன் தாயையும் தந்தையையும் அங்கு எதிர்ப்பார்க்காத சியாமளா விஜியிடம் கடிந்து கொண்டாள்.

சியாமளாவின் பெற்றோர் பயத்துடனே இருந்தனர். அந்தப் பெண்மணி என்ன முடிவு எடுப்பது அது எந்தவிதம் தன் பெண்ணின் வாழ்வைப் பாதிக்குமோ என்றெல்லாம் எண்ணினார்.

அந்த இடமே அந்தப் பெண்மணியின் ஒரு சொல்லிற்காகக் காத்திருந்தது. சியாமளாவின் தந்தை, அவர்களுக்கு எவ்வளவு பணம் வேண்டு மானாலும் தரக் காத்திருந்தார்.

அந்தப் பெண் விஜியிடம் வந்து, "என் கணவர் உடல் தானம் செய்தவர். அவரின் உடலில் எந்த உறுப்புகளை எடுத்துக்கொள்ள முடியுமோ எடுத்துக்கொள்ளுங்கள். மேலும் அவரது உடலை மருத்துவப் படிப்பிற்கான ஆய்விற்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டாள்.

அதுவரை பயப்பட்ட விஜி அந்தத் தாயின் மனம் கண்டு கண்ணீர் சிந்தினாள்.

அந்தப் பெண்மணி சியாமளாவிடம் வந்து, "மகளே இந்த உலகில் பிறந்த உயிர் அனைத்தும் இறந்தே ஆக வேண்டும். அது விபத்து நீ நினைத்திருந்தால் அதை மறைத்து இருந்திருக்கலாம். ஆனால் உன் நல்ல மனசு அதைச் செய்யவில்லை. என் கணவர் பிற உயிர்களை மதிப்பவர் இன்று பல உயிர்க்கு அவர் வாழ்வளித்துள்ளார். அவர் ஒரு சிரஞ்சீவி" என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டாள்.


சியாமளா அந்தப் பெண்மணியை பார்த்தபடியே நின்றாள்.

**– பத்திரிகைச் செய்தி**



## செயல்பாடுகள்

- சியாமளாவின் பாத்திரப் படைப்பைத் திறனாய்வு செய்து திறனாய்வுக் குறிப்பு எழுதுங்கள்.
- உங்கள் பகுதியில் உள்ள மனித நேயப் பண்பாளர் ஒருவரைச் சந்தித்து நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.



# கொள்ளெனக் கொடுத்தல்

## உள்ளத்தில் நல்ல உள்ளம்

தன்னார்வத்துடன் ரத்ததான சேவை செய்வோருக்காக உலக அளவில் எப். 2 எஸ் என்ற இணையதளம் செயல்பட்டு வருகிறது. ராமநாதபுரத்தில் இந்த அமைப்பின் சார்பில் ரத்ததான சேவை செய்தவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளர் உடல் உறுப்பு தானத்தின் உன்னதம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேசினார்.

தனது மூத்த மகன் அ.பு.ஹிதேந்திரன் விபத்து ஒன்றில் பலத்த காயம் அடைந்தது. மூளைச்சாவு ஏற்பட்டு, இனி உயிர் பிழைக்க வழியில்லை என்று தெரிந்து விட்ட பிறகு அவரது உடல்உறுப்புக்களை பிறர் உயிர் பிழைக்க தானமாக வழங்கியதாகப் பேசிய டாக்டர்.சு.அசோகனின் கண்கள் குளமாயின. அவரது உருக்கமான பேச்சு அனைவரையும் நிமிர்ந்து உட்காரச் செய்ததுடன் மனதை நெகிழவும் வைத்தது. விழா முடிந்தவுடன் அந்த உயர்ந்த உள்ளத்தைச் சந்தித்துப் பேசினோம்.

நானும் என் மனைவி புஷ்பாஞ்சலியும் சொந்த ஊரில் பொது மற்றும் குடும்ப நல மருத்துவத்தில் 27 ஆண்டுகள் அனுபவம் உடைய மருத்துவர்கள். எங்களுக்கு ஹிதேந்திரன், லெட்சமணன் என இரு மகன்கள். மூத்த மகன் ஹிதேந்திரன் பிளஸ் ஒன் படித்துக் கொண்டிருந்த நிலையில் இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது மோட்டார் இல்லாத 3 சக்கரங்கள் பொருந்திய வாகனம் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டது.

முதலில் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கும் பின்னர் சென்னை அரசு மருத்துவமனைக்கும் கொண்டு போய்ச் சிகிச்சையளித்தோம். சென்னை தேனாம்பேட்டையில் உள்ள ஒரு பிரபலமான தனியார் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுமதித்தோம். உடலில் எந்த ரத்தக் காயங்களோ வெளிக்காயங்களோ இல்லை. தலையில் அறுவைசிகிச்சை செய்ய வேண்டும் என்று மருத்துவர் சொன்னதால் ரூ.1.50 லட்சம் செலவு செய்தும் அரை சதவீதம் கூட உயிர்பிழைக்க வாய்ப்பில்லை என்று சொன்னபோது நானும், என் மனைவியும் மனதளவில் சுக்கு நூறாக நொறுங்கிப் போனோம்.

நானும், என் மனைவியும் மருத்துவர்களாக இருந்ததால் எங்கள் செல்ல மகன் உயிர் பிழைக்கமாட்டான் என்று தெரிந்து விட்டதும் உடனடியாக ஒரு முடிவுக்கு வந்தோம். மூளை மட்டும் தான் இறந்து விட்டதே தவிர மற்ற உடல் உறுப்புகள் அனைத்தும் நன்றாகத்தான் இருக்கின்றன என்பதை உணர்ந்தோம். மூளைச்சாவு ஏற்பட்டு விட்ட பிறகு உடல் உறுப்புகள் அனைத்தும் 3 நாள்கள் வரை உயிரோடு இருக்கக் கூடியவை என்பது எங்களுக்குத் தெரிந்திருந்தததால் உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டு மரணப்படுக்கையில் இருக்கும். பிறருக்குத் தானமாகக் கொடுத்து அவர்களையாவது உயிர்பிழைக்க வைக்கலாமே என நல்லதொரு முடிவெடுத்தோம்.


அன்பு மகனின் மரணத்தால் மனதுக்குள் இருவருமே அழுதாலும் பிறரையாவது பிழைக்க வைக்க நம்மால் முடியும் என்று நினைத்து மனதைத் தேற்றிக் கொண்டோம். நாங்கள் முடிவெடுத்த

நேரத்தில தமிழகத்தில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைதான் பிரபலமாக நடந்து வந்தது. நாங்கள் தைரியமாக முடிவு எடுத்து எங்கள் அன்பு மகள் ஹிதேந்திரனின் கண்கள், இருதயம், கல்லீரல், சிறுநீரகங்கள் ஆகிய அனைத்தையும் பிறருக்குத் தானமாக வழங்கினோம்.

கண்கள் இரண்டும் கருவிழி பாதிக்கப்பட்ட இருவருக்கும், மரணத்தின் பிடியில் சிக்கித் தவித்த 30 வயதுடைய கேரளப் பெண்ணுக்கு மகனின் கல்லீரலும் பொருத்தப்பட்டது. அந்த கேரளப் பெண் 4 வருடங்களுக்குப் பிறகு இரண்டாவது முறையாக கருவுற்று ஆண் குழந்தை பெற்றிருப்பதாகச் சொன்னபோது நாங்கள் இருவரும் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. மகனின் இருதயம் பெங்களூரைச் சேர்ந்த 9 வயது சிறுமியான அபிராமிக்கும், சென்னையில் வசிக்கும் இருவருக்குச் சிறுநீரகங்களும் பொருத்தப்பட்டன. எங்கள் மகன் ஒருவனின் உடல் உறுப்புகளால் 6 பேர் பயன் பெற்றிருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தோம்.

உடல் உறுப்பு தானத்தின் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்து வதற்கா கவே எங்கள் மகன் பெயரிலேயே ஹிதேந்திரன் அறக்கட்டனை ஒன்றையும் உருவாக்கினோம். இந்த அறக்கட்டனை மூலமாக ஊர், ஊராகச் சென்று உடல் உறுப்பு தானத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி வருகிறோம். இதற்காகவே குறுந்தகடு ஒன்றையும் தயாரித்திருப்பதுடன் ஏராளமான துண்டுப் பிரசுரங்களையும் அச்சடித்தும் விநியோ கித்தும் வருகிறோம்.

இருக்கும்போது ரத்ததானம் இறந்தபின் கண்தானம், விபத்துகளில் சிக்கி மூளைச்சாவு ஏற்பட்டு விட்டால் உடல் உறுப்புதானம், மண்ணுக்குள் புதைதத்தும் எரித்தும், வீணாகும் உன்னத உடல் உறுப்புகளை, உயிர் காக்கும் மாற்று உறுப்புகளுக்காகச் சாவின்



விளிம்பில் தத்தளித்தும் கொண்டிருக்கும் சக மனிதர்களுக்குக் கொடையாக அளிப்பதே உலகில் உன்னத அறம். உறுப்புதானம் மனித உயிர்களைக் காப்பது மட்டுமில்லாமல் மதம் கடந்த மனித நேயத்தையும் விதைக்கிறது. வளர்க்கிறது. மண்ணுக் குள் மக்கிப்போகும் மனித உடல் உறுப்புகளை எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் தானமாக வழங்கிட முன் வர வேண்டும் என்றார்.

**– சி. வ. சு. ஜெகஜோதி**

| | |
|---|---|
| முதல் கண்தானம் : 1905ஆம் ஆண்டு | முதல் சிறுநீரகத் தானம் : 1954ஆம் ஆண்டு |
| முதல் இரத்த தானம் : 1918ஆம் ஆண்டு | முதல் இதய தானம் : 1967ஆம் ஆண்டு |



## செயல்பாடுகள்

- உறுப்பு தானம் பற்றி ஒரு மருத்துவரிடம் நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.
- உறுப்பு தானம் செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் முகாமில் பங்குபெற்று உரையாற்றுவதற்கானச் சொற்பொழிவு எழுதுங்கள்.

## கண்ணப்ப நாயனார் புராணம்



கண்ணுதல் கண்ணில் தங்கண் இடந்து அப்பிற் காணும் நேர்பாடு
எண்ணுவார் தம்பி ரான்தன் திருக்கண்ணில் இடக்கால் ஊன்றி
உண்ணிறை விருப்பினோடும் ஒரு தனிப் பகழிகொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்ற தரித்திலர் தேவ தேவர்

செங்கண்வெள் விடையின் பாகர் திண்ணனார் தம்மையாண்ட
அங்கணர் திருக்காளத்தி அற்புதர் திருக்கை அன்பர்
தங்கண்முன் இடக்குங் கையைத் தடுக்கமூன்றடுக்குநாக
கங்கணர் அமுதவாக்குக் கண்ணப்ப நிற்க என்ற

கானவர் பெருமானார் தங்கண்ணிடந் தப்பும் போதும்
ஊனமு துகந்த ஐயர் உற்றுமுன் பிடிக்கும் போதும்
ஞானமா முனிவர் கண்டார் நான்முகன் முதலாயுள்ள
வானவர் வளர்பூ மாரி பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப

பேறினி இதன்மேல் உண்டோ பிரான்திருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்கண் இடந்தப்ப உதவுங் கையை
ஏறுயர்த் தவர் தங் கையால் பிடித்துக்கொண்டு என்வலத்தில்
மாறிலாய் நிற்க என்று மன்னுபேர் அருள் புரிந்தார்.

– **சேக்கிழார்**

'வாழ்க்கையில் சிலர் குளவிகளாக மாறிக் கொட்டிக் கொண்டேதான் இருப்பார்கள்; அவர்களையும் நம் நயமான நாகரிகப் பண்பால் திருத்த வேண்டும்'. - காந்தியண்ணல்.

"பிறர் உங்களுக்கு எதைச் செய்தால் அது உங்களுக்குப் பிடிக்காதோ, எதைச் சொன்னால் நீங்கள் மனம் வருந்துவீர்களோ, அவற்றை மற்றவர்க்கு நீங்களும் செய்யாதீர்கள்"

'மூன்று அங்குல நீளமே உள்ள மனித நாக்குதான், தான் செய்யும் குற்றத்தால் ஆறடி உயர மனிதனையே குப்புற வீழ்த்துகிறது!

### செயல்பாடுகள்

- கண்தானம், ரத்த தானம் செய்திட விரும்புவர்களுக்கு உதவும் வண்ணம் ஒலிபெருக்கி அறிக்கை தயார் செய்யுங்கள்.
- இரத்த தானம் செய்வதன் நன்மைகளைக் குறிப்பாக எழுதுங்கள்.
- கருணை, மனிதநேயம் இரக்கம் என்னும் சொற்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர்களில் ஒருவரின் வாழ்க்கைக் குறிப்பு எழுதுங்கள்.

# அலகு 6

# ஒருகூட்டுப் புறாக்கள்



'யாதும் ஊரே! யாவரும் கேளிர்' என்ற பாடலை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தந்தவர் தமிழகத்திலே வாழ்ந்த சான்றோர் கணியன் பூங்குன்றனார். தேசிய ஒருமைப்பாடு என்னும் கருத்தை முன் வைக்கிறது இவ்வலகு.

**முதன்மைக் கற்றல் அடைவுகள்**

- கவிதைகளை வாசித்து இரசனைக்குறிப்பு எழுதுகிறார்கள்.
- வெவ்வேறு ஆசிரியர்களையும் படைப்புகளையும் ஒப்பீடு செய்து கட்டுரை படைக்கிறார்கள்.
- மொழிபெயர்ப்புத் திறன் பெறுகிறார்கள், மொழி பெயர்க்கிறார்கள்.
- பாடப்பகுதி குறிப்பிடும் வாழ்க்கை விழுமியங்களை இன்றைய வாழ்வியல் சூழலுடன் பொருத்திப் பார்த்து எழுதுகிறார்கள்.

# இலக்கியம் காட்டும் ஒருமைப்பாடு

## வேற்றுமையில் ஒற்றுமை

நம் நாடு பழம்பெரும்நாடு. இந்நாட்டில் பல மாநிலங்கள் உள்ளன. இவற்றில் வாழும் நாம் அனைவரும் இந்தியரே. இந்தியராகிய நாம் பல மொழிகள் பேசுவோராய்ப் பல்வேறு பழக்க வழக்கங்களையும் நெறிகளையும் கொண்டவராய் உள்ளோம். ஆனால், இந்தியப் பெருநாடு முழுவதிலும் ஒரே விதமான பண்பாடு வாழ்வின் ஊடிழையாகக் கொண்டு நிலவுகிறது. அப்பண்பாட்டின் அடிப்படைகள் பல சமய நெறிகளில் அடங்கியுள்ளன. கடவுள் உண்மையும் கடவுள் நம்பிக்கையும் ஆகிய கோட்பாடுகளைக் கொண்டு பண்பாடு - கோயிற் கட்டடங்கள், சிலைகள், நுட்பமான சிற்ப வேலைப்பாடுகள் உருவாகி வளர்ந்து தழைக்கக் காரணமாயிற்று. மக்களிடையே பல்வேறு வகையான வழிபாடுகள் இருந்தாலும் அவையாவும் இறைவனை நோக்கியே செல்கின்றன. எனவே வழிபாட்டு முறையில் வேறுபாடிருந்தாலும் அடிப்படையில் ஒருமைப் பாட்டுக்கு வழிவகுப்பனவாகவே அமைகின்றன.

### பூனைக்குடும்பம்


சமயத்துறையில் மட்டுமல்லாமல் பொதுவாகப் பிற வாழ்க்கைத் துறையிலும் ஒற்றுமை வளர வேண்டும். மக்களிடையே பல்வகைப் பண்பாட்டுக் கூறுகள், நிறவேறுபாடுகள் இருந்தாலும் அவை சமுதாய வாழ்வில் எவ்விதப் பிரிவினையும் உண்டாக்கலாகா. ஒரு பூனைக் குடும்பத்தைப் பாடும் பாங்கில், பாரதியார், நமக்கு இந்திய ஒருமைப்பாட்டுணர்வை வலியுறுத்துகின்றார். பிள்ளைகள் பெற்றது அப்பூனை, சாம்பல் நிறமொரு குட்டி, பாலின் நிறமொரு குட்டி எனப் பல நிறங்களில் குட்டிகள் பிறந்தாலும் அவற்றுள் வேறுபாடில்லை. ஒரே நிறமானவையில்லை என்றாலும் ஒரே தரமானவை. வண்ணங்கள் வேறு பட்டால் அவ்வேறுபாடு வாழ்க்கையில் வேறுபாடாகாது என்று அழகுறப் பாடியுள்ளார் பாரதியார், பாரத நாட்டு மக்கள் நிறங்களால் வேறுபட்டாலும் எல்லோரும் சரிசம உரிமையோடும் சமச் சிறப்போடும் சமநிலையோடும் வாழ்வதற்கு உரியோர் என்பதைப் பின்வரும் 'பாரத சமுதாயம்' என்ற பாடல் வாயிலாக நமக்கு உணர்த்து கின்றனர்.

*"எல்லாரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம்*
*எல்லாரும் இந்திய மக்கள்*
*எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர்விலை*
*எல்லாரும் இந்நாட்டு மன்னர்"*

என்று பாடி ஒருமைப்பாட்டுச் சிந்தனையை, குறிக்கோளை உறுதியாக முழங்கியுள்ளார்.

### ஒருமைப்பாட்டுணர்வு

''நாரொன்றிற் கட்டிய பூமாலை, நவமலர்கள் பூத்ததொரு சோலை'' என்னுமாறு பாரத மக்கள்



ஒருமைப்பாட்டுடன் வாழ ஒவ்வொருவர் மனத்திலும் ஒருமைப்பாட்டுணர்வு மலர வேண்டும். பசுக்களின் நிறங்கள் வேறெனினும் அவை தரும் பால் நிறம் ஒன்றாகவே இருப்பதுபோல் மனிதர்கள் புறத்தோற்றத்தாலும் உருவத்தாலும் வேறெனினும் அடிப்படை மனித இயல்புகளால் ஒரே வகையினரே ஆவார்கள். நாமெல்லாம் ஒரே மரத்தின் இலைகள் என்று காந்தியடிகள் ஒரு சமயம் குறிப்பிட்டார். அதே போல் அனைவரும் ஒரே நாட்டின் உயர்ந்த மக்களாக வாழ்ந்து சிறக்க வேண்டும்.

### பண்பாட்டுக்குத் துணை

ஏழு நிறங்கள் ஒன்றி ஒரு வானவில்லை அழகாகக் காட்டுவது போல் பலவகைப் பண்பாட்டுக்கூறுகளும் சேர்ந்து ஒரே வகையான பாரதப் பண்பாட்டை உண்டாக்குகின்றன. ஏழு சுரங்களும் ஒன்றாகச் சேர்ந்து இன்னிசைப் பண்ணொன்றை அமைப்பது போலவே பலவிதப் பண்பாட்டுக் கூறுகள் ஒரே வகையான பாரதப் பண்பாட்டுக்குத் துணை புரிகின்றன.

நம்நாட்டு மாநிலங்கள் பலவற்றின் தனிச்சிறப்புகளை நாம் அறிவதற்கு ஏதுவாக மாநிலங்களிடையே கலாச்சாரப் பரிவர்த்தனை நிகழ்ந்து கொண்டேயிருக்க வேண்டும். அதுமட்டும் அல்லாது ஒரு மாநிலத்து மக்களை மற்ற மாநிலத்தார் பாராட்டுவதற்கு வாய்ப்பு ஏற்படும் வண்ணம் மாநிலங்களுக்கிடையே பண்பாட்டுக் கலை விழாக்கள் நிகழ்ந்தபடியிருக்க வேண்டும்.

### ஒருமைப்பாடு வளர வழிகள்

இந்தியப் பெருமக்கள் யாவரும் ஒருமைப்பாட்டுணர்வை மேலும் மேலும் வளர்த்துக் கொள்வதற்கு வாய்ப்பாக ஒவ்வொரு மாநிலத்தின் விளை பொருட்களும் தொழில் ஆக்கங்களும் பிற மாநிலத்தினருக்கும் பயன்பட வேண்டும். பாரத தேசம் என்னும் தலைப்பின் கீழ் அமைந்த பாடலில் பாரதியார், கங்கை நதிப்புறத்துக் கோதுமையைக் காவிரி வெற்றிலைக்கு மாறாகக் கொள்வோம் என்றும், மராட்டியர் கவிதை கொண்டு சேரத்தின் தந்தங்களைப் பரிசாகத் தருவோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

*“கங்கை நதிப்புறத்துக் கோதுமை பண்டம்*
*காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்வோம்*
*சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு*
*சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்”*

என்று பாரதியார் இந்திய ஒருமைப்பாட்டுக்கு அரண் செய்யவல்ல பொருளாதாரப் பரிவர்த்தனையை நயமாய்ப் பாடியுள்ளார். கி.பி 1962–63இல் இந்திய எல்லையில் ஊடுருவல் செய்த சீனரின் ஆக்கரமிப்பின் போது ஒருமைப்பாட்டுச் சிந்தனை நம் சமுதாயத்தில் புதுவேகமும் புத்துயிர்ப்பும் எழ நினைவுபடுத்தப்பட்டது. மேலும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நாட்டியல் நாட்டுவோம் என்ற பாடலில்

*“இமயச் சாரலில் ஒருவன் இருமினான்*
*குமரி வாழ்வான் மருந்தது கொண்டோடினான்*
*ஒருவர்க்கு வந்தது அனைவர்க்கும் என்ற*
*மனப்பாங்கு வளர்ந்தது வேண்டிய மட்டும்”*

என்று சீன ஆக்கிரமிப்பை எதிர்க்கும் இந்தியரின் மனவொருமைப் பாட்டைப் பாடியிருக்கின்றார்.

*“சத்தியம் தவறாது காக்கும் கொடி – சாதி*
*சமயச் சழக்குகளைப் போக்கும் கொடி*
*உத்தம வீரர்களும் பத்தினிகளும் – தத்தம்*
*உயிருக்குயிராகப் போற்றுங்கொடி”*

என்னும் கொடி வணக்கப் பாடலில் இந்தியர் யாவரும் சாதிமத பேதங்களைக் கடந்து ஒருமைப்பாட்டு உணர்வுடன் வாழ வேண்டும் என்பதை நுட்பமாகவும் தெளிவாகவும் உணர்த்துகின்றார்.

நீர்வளமும் இயற்கை வளமும் போலவே ஒருமைப் பாடென்னும் மனவளமும், சேர்ந்து வாழும் உணர்வு வளமும் நம் மக்களிடையே அமையும்போது அனைத்து இந்தியாவும் ஒருமைப்பாட்டில் ஓங்கி நின்று சிறக்கும் என்பதை மேற்கூறிய தமிழிலக் கியப் பாடல்கள் மூலம் உறுதியாக உணரலாம்.

**– டாக்டர் மின்னூர் சீனிவாசன்**



### செயல்பாடுகள்

- தேசிய ஒருமைப்பாட்டை உணர்த்தும் உறுதிமொழி ஒன்று தயார் செய்க.
- நம் பாரதத் திருநாட்டில் பொதுவாகக் கொண்டாடக் கூடிய விழாக்கள் பற்றிக் குறிப்பு வரைக

## என்வீடு

இந்திய நாடு என்வீடு
இந்தியன் என்பது என் பேரு
எல்லா மக்களும் என் உறவு
எல்லோர் மொழியும் என் பேச்சு
திசைகளைத் தொழுபவர் என் தோழர்
தேவன் ஏசுவும் என் கடவுள்
எல்லா மதமும் என் மதமே
எதுவும் எனக்கு சம்மதமே
ரகுபதி ராகவ ராஜா ராம்
பஜீத்த பாவன சீதா ராம்

கங்கைப் பாயும் வங்கம்
செந்நெல் கதிர்கள் சாயும் தமிழகம்
தங்கம் விளையும் கன்னடம் – நல்
தென்னை வளரும் கேரளம்

ஆந்திரம் அசாம் மராட்டி
ராஜஸ்தான் பாஞ்சாலமும்
சேர்ந்து அமைந்த தேசம்
எங்கள் அன்னை பூமி பாரதம்

இரிகோ இரிகோ இக்கட பாருங்கோ
சுந்தரத் தெலுங்கினில் பாடுங்கோ
குச்சுப்புடி நடனங்கள் ஆடுங்கோ – ஜல்
மோகன ரங்கா பாடுங்கோ

ஸ்ரீ சைலம் திருப்பதி க்ஷேத்திரம் ஒன்று
தரிசனம்பண்ண வாருங்கோ
கப்பல் கட்டுற விசாகப்பட்டினம்
கடற்கரை உண்டு பாருங்கோ – நல்
மோகன ரங்கா பாடுங்கோ

ஏனுசாமி இல்லிநோடு எங்க ஊரு மைசூரு
காவரி பிறந்த கன்னட நாட்டை
யாவரும் போற்றிக் கொண்டாடு
பிருந்தாவனமும் சாமுண்டிக் கோயிலும்
நோடு சாமி நீநோடு
எல்லா மதமும் எல்லா இனமும்
ஒன்னு கலந்தது பெங்களூரு

படைச்சோன் படைச்சோன் எங்கள படைச்சோன்
அல்லா எங்கள் அல்லா அல்லாஹு அல்லா
நானும் இவளும் ஜனனம் எடுத்தது
கேரளம் திருச்சூர் ஜில்லா
தேக்கு தென்னை பாக்கு மரங்கள்
இவிடே நோக்கணும் நீங்க
தேயிலை மிளகு விளைவதைப் பாத்து
வெள்ளையன் வந்தான் வாங்க



சுனோ சுனோ பாய் சுனோ
சுனோ சுனோ மே பஞ்சாப்
வாலா கீத் சுனோ
தங்கக் கலசம் பொற்கோவில்
எங்கள் ஊரில் தேக்கோ தேக்கோ
சீலம் சட்லஜ் நதிகள் பாயும்
கோலம் காண ஆவோ ஆவோ

ஆவோ ஆவோ.....
பஞ்சாப் சிங்கம் லாலா லஜபதி
பகத்சிங் பிறந்த பொன்நாடு
எங்கு பிறந்தும் எங்கு வளர்ந்தும்
எல்லாம் ஒரு தாய் பிள்ளைகள்
பாரத விலாசில் ஒன்றாய் சேர்ந்து
பேசிப் பழகும் கிள்ளைகள்
சத்தியம் எங்கள் வேதம்
சமத்துவம் எங்கள் கீதம்
வருவதைப் பகிர்ந்து உண்போம்
வந்தே மாதரம் என்போம்
வந்தே மாதரம்! வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

**-கண்ணதாசன்**

### கண்ணதாசன் (1927-1981)



சிறுகூடல் பட்டி முத்தையா என்பது இயற்பெயர். நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள், ஐந்தாயிரத்திற்கம் மேற்பட்ட திரைப்படப் பாடல்கள், நவீனங்கள், கட்டுரைகள் பல எழுதியவர். தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்தவர். சாகித்ய அகாதமி விருது பெற்றவர். திரையுலகில் கவியரசராக நிலைத்து வாழ்பவர். ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, தைப்பாவை இவற்றோடு இயேசு காவியமும் பாடியவர்.

### செயல்பாடுகள்

- மண்ணின் பெருமையை உணர்த்தும் சிறுகதை ஒன்று எழுதுக,
- பாடலை வாசித்து விமர்சனக் குறிப்பாக எழுதுங்கள்.



# குடையின் கீழ்

## பைத்தியக்காரி

ஆமாம், நீ சொல்வது முன்பு பிரான்சிற்கும் ருஷியாவிற்கும் சண்டை நடந்ததை, அப்பொழுது நடந்த பயங்கரமான நிகழ்ச்சியை என் நினைவிற்குக் கொண்டு வருகிறது” என்று கூறத் தொடங்கினார் மூஸேடி‘ என்டோலின்.

பாபர்க்கு கார்மீலில் இருக்கிற எனது வீடுதான் உங்களுக்குத் தெரியுமே! ருஷ்யர்கள் படையெடுத்து வந்த பொழுது எனது பக்கத்து வீட்டில் ஒரு பைத்தியக்காரி வசித்து வந்தாள். அவளுக்குப் பைத்தியம் ஏற்பட்டதே ஒரு பெருங்கதை. இந்த உலகத்திலே துன்பத்தில் யாருக்குத்தான் பங்கு கிடையாது. அவளது இருபத்தைந்தாவது வயதில் தகப்பனாரை இழந்தாள். அவர் இறந்த ஒரு மாதத்திற்குள் அவள் புருஷனும், அப்பொழுதுதான் பிறந்த குழந்தையும் அவரைத்தொடர்ந்து சென்றார்கள். இப்படி ஒன்றன் பின் ஒன்றாக வந்த துன்பத்தின் கடாக்ஷத்தால் அவள் படுத்த படுக்கையாகி, பல நாட்கள் ஜன்னிகண்டு பிதற்றினாள். இதன் பிறகு கொஞ்ச நாள் சோர்வும். அமைதியும் அவளைக் கவ்வின, அசையாது அலுங்காது. படுத்தபடுக்கையாக, வெறுமெனக் கண்களை மிரளமிரள விழித்துக் கொண்டு கிடந்தாள். உடம்பு குணமாகிவிட்டது என்று நினைத்து அவளைப் படுக்கையைவிட்டு எழுந்திருக்கும்படி செய்ய முயற்சி செய்தார்கள். ஆனால், அவளைத் தூக்க முயன்றவுடன் அவள் கூச்சலிட்டாள். கொல்லப்படுபவள் போல். மாற்றுவதற்கு மட்டுமே அவளைப் படுக்கையிலிருந்து எடுக்கவும், மற்றபடி படுத்த படுக்கையாகவே கிடக்கவும் அனுமதித்தார்கள்.

வயது முதிர்ந்த வேலைக்காரி ஒருத்தி அவள் பக்கத்தில் இருந்து அவளுக்கு வேண்டிய உதவியைச் செய்துகொண்டிருந்தாள்.

அந்தப் பிரமை மண்டிய உள்ளத்தில் என்ன ஏற்பட்டுக் கொண்டிருந்தது என்று ஒருவருக்கும் ஒன்றும் தெரியாது. அவள் மறுபடி பேசியதே கிடையாது. என்ன நடந்தது என்று திட்டமாக அறியாமல் வெறும் துன்பக் கனவு கண்டு கொண்டிருக்கிறாளா? அல்லது அவளது கலங்கிய மூளை சலனமற்று விட்டதா? இப்படிப் பதினைந்து வருஷங்கள் கழிந்தன. இத்தனை காலமும் அவள் உயிர்ப் பிணமாகக் கிடந்தாள்.

சண்டை ஆரம்பித்தது. டிசம்பரில் ஜெர்மானியர் கார்மீலுக்குள் வந்தனர். எல்லாம் நேற்று நடந்த மாதிரி இருக்கிறது. அப்பொழுது நல்ல மாரிக்காலம். ஜலம் கல்லைப் போல் உறைந்து பாறைகளைக்கூட உடைத்துத் தகர்த்துவிடும் போல் இருந்தது,

எனக்கோ, அங்கு இங்கு அசைய முடியாதபடி கீல்வாதம். நாற்காலியில் சாய்ந்தபடியே அவர்கள் தட்தட்என்று கால் வைத்துப் போகும் சப்தத்தைக் கேட்டுகொண்டிருந்தேன்.

ராணுவப்படை இடைவிடாமல் சென்று கொண்டேயிருந்தது; தட்தட் என்ற சப்தம் காதில் இடித்துக் கொண்டேயிருந்தது. ராணுவ அதிகாரிகள் தங்கள் படைகளைப் பிரித்து. உணவு கொடுக்கும்படி.

வீட்டுக்குப் பத்து இருபது பேராக எங்கள் ஊர்க்காரர்மீது சுமத்தி விட்டனர். எனது பக்கத்து வீட்டிற்குப் பன்னிரண்டு பேர் சுமத்தப்பட்டனர். அதில் ஒருவன் ராணுவ அதிகாரி –மேஜர்– வெறும் தடியன், முரடன்.

கொஞ்ச நாட்களுக்கெல்லாம் அமைதியாக நடந்து வந்தது. பக்கத்து வீட்டுக்காரி நோயாளி என்று அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டது. முதலில் அவன் அவளைக் கவனிக்கவில்லை. கொஞ்ச நாட்களில் அவர்கள் பார்க்க முடியாத ஸ்திரீ என்பது அவனது மனத்தை உறுத்தியது. அவளுக்கு என்ன வியாதி என்று கேட்டான். தீராத் துயரத்தால், பதினைந்து வருஷங்களாகப் படுத்த படுக்கையாக இருக்கிறாள் என்று கூறினார்கள்; அவன் நம்பவில்லை. அந்தப் பைத்தியம் தன் மனத்தில் இதைப் பெருமை என்று நினைத்துக்கொண்டு, 'படுக்கையை விட்டு எழுந்திருக்கமாட்டேன்' என்கிறது என்று எண்ணிக் கொண்டான். இப்படி நோயாளி என்று வேஷமிட்டு. பிரஷ்யர் முன்பு வராமல் ஏமாற்ற முயலுகிறாள், அடைந்து கிடக்கிறாள் என்று எண்ணிவிட்டான்.

அவன், அவளைப் பார்க்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தி,. அவள் அறைக்குள் சென்றான்.,

"எழுந்து கீழே வா! நாங்கள் எல்லோரும் உன்னைப் பார்க்கவேண்டும்''; என்று முரட்டுத்தனமாகக் கூறினான்.

அவள் பதில் சொல்லாமல் மிரள மிரள விழித்தாள்.

''அதிகப்பிரசங்கித்தனத்தை நான் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டேன். மரியாதையாக நீ எழுந்து கீழே வராவிட்டால், உன்னை நடக்கச் செய்ய எனக்குத் தெரியும்!" என்றான் அந்த முரட்டு மேஜர்.

அவள் அவனைக் கேட்டதாகத் தெரியவில்லை. சலனமற்றுக் கிடந்தாள். அவள் பேசாமல் இருப்பதே தன்னை அவமரியாதை செய்வது என்று நினைத்துக்கொண்டு. "நாளைக்கு நீ கீழே இறங்கி வராவிட்டால்...." என்று தலையை அசைத்து உருட்டி விழித்துவிட்டு, அவ்விடத்தை விட்டு வந்து விட்டான்.

மறுநாள் கிழட்டு வேலைக்காரி பயந்து போய் அவளுக்கு உடைகளை அணிவிக்க முயன்றாள், அதற்குப் பைத்தியம் கூச்சலிட்டுக் கொண்டு தன் முழு பலத்தோடும் முரண்டியது.

அந்த முரடன் சப்தத்தைக் கேட்டு மேலே ஓடினான் வேலைக்காரி, அவனை இடைமறித்து. காலில் விழுந்து, ''அவள் வரமாட்டேன் என்கிறாள், எஜமான், மன்னிக்க வேண்டும். துயரத்தில் மூளை கலங்கியவள்" என்றாள்.

படைவீரன் கோபத்தால் துடித்தாலும். சிறிது தயங்கினான். அவளைப் பிடித்து இழுத்து வரும்படி உத்தரவிடவில்லை.

பிறகு. உடனே கலகலவென்று சிரித்து விட்டு, ஜெர்மன் பாஷையில் உத்தர விட்டான். சிறிது நேரங்கழித்து. சில சிப்பாய்கள் ஒரு படுக்கையைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தார்கள். அந்தக் கலைக்காத படுக்கையில், பித்துக்குளி மௌனமாக. என்ன நடக்கிறது என்பதைப் பற்றி சிறிதும் கவனிக்காது படுத்துக் கிடந்தது. படுக்கையைவிட்டு எழுப்பாதவரை அதற்கு என்ன கவலை? அவன் பின்பு ஒரு சிப்பாய் பெண்கள் உடையை எடுத்துக்கொண்டு நடந்தான்.

அந்த முரட்டு மேஜர், "நீயாக உடுத்திக் கொண்டு நடந்து வருகிறாயா, இல்லையா? அதைத்தான் பார்க்கிறேன்!'' என்று கைகளைத் தேய்த்துக் கொண்டான்.

இந்தக் கூட்டம் இமாவில் காட்டுப் பக்கம் சென்றது. இரண்டு மணி நேரங்கழித்து. சிப்பாய்கள் மட்டும் தனியாகத் திரும்பினார்கள். பைத்தியக்காரி என்னவானாள் என்பது தெரியவில்லை. அவளை என்ன செயதார்கள்? எங்கு கொண்டு சென்றார்கள்? ஒருவருக்கும் ஒன்றும் தெரியாது.

பனி அதிகமாகப் பெய்தது. எங்கு பார்த்தாலும் உறைபனி. காடுகள் பனித்திரைகள் மாதிரி நின்றன. ஓநாய்கள் வீட்டுக் கதவண்டைவரை வந்து ஊளையிடத்தொடங்கின.

அந்தப் பைத்தியத்தின் கதி என் சிந்தனையைவிட்டு அகலவில்லை. பிரஷ்ய அதிகாரிகளிடம் இதற்காக மனுச்செய்துகொண்டேன். அதற்கே என்னைக் சுட்டுவிட முயற்சித்தார்கள். வசந்த காலம் வந்தது. வீட்டுக்குத் தலைவரியாகச் சுமத்தப்பட்ட படை சென்றுவிட்டது. ஆனால், எனது பக்கத்து வீடு அடைத்தபடியே கிடந்தது. வீட்டைச் சுற்றிய தோட்டத்தில் புல்லும் பூண்டும் கண்டபடி வளரத் தொடங்கின. கிழட்டு வேலைக்காரி மாரிக் காலத்திலேயே இறந்துவிட்டதால், அந்தச் சமா சாரத்தைப் பற்றி ஒருவரும் கவலை கொள்ள வில்லை. நான் ஒருவன்தான் அவளைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். அவளை என்ன செய்தார்கள்? அவள் காட்டு வழியாகத் தப்பித்துக் கொண்டாளா? யாராவது அவளைக் கண்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றார்களா? அவள் தான் பேசாமடந்தையாச்சே! சந்தேகம் தீர்ந்த பாடில்லை. காலந்தான் சிறிது சிறிதாகக் கவலை யைக் குறைத்தது.

அடுத்த இலையுதிர் காலம் வந்துவிட்டது. காட்டுக்கோழி ஏராளம். கீல்வாதத்தைக்கூடப் பொருட்படுத்தாமல் காட்டிற்குச் சென்று ஐந்தாறு பட்சிகளைச் சுட்டு வீழ்த்தினேன். அதில் ஒன்று ஒரு குழிக்குள் விழுந்து விட்டது. மண்டையோட்டின் பக்கத்தில் கிடந்தது. உடனே அந்தப் பித்துக் குளியின் ஞாபகம். என் மனத்தில் எதை வைத்தோ அடித்தது போல். எழுந்தது. அந்த நாசமாய்ப் போன வருஷத்தில் எத்தனை பேரோ இறந்திருக்கலாம். ஆனால் அந்தப் பித்துக்குளியின் மண்டை யோடுதான் இது என்று நான் திட்டமாகக் கூறுவேன்.

உடனே எல்லாம் ஸ்பஷ்டமாக விளங்கிவிட்டது. அந்தக் குளிரில் யாருமற்ற காட்டில் படுக்கையை வைத்துவிட்டு வந்துவிட்டார்கள். பித்துக்கு, மனப் பிராந்திப் பிடித்துக்கொண்டு, குளிரில் விறைத்து விட்டது. பனி அவளை மூடியது.

ஓநாய்கள் அவளைத் தின்றன. பட்சிகள் மெத்தைப் பஞ்சை எடுத்துக் கூடுகட்டின. அந்த மண்டை யோட்டிற்கு மட்டும் ஒரு புழுவும் குடியிருக்க வரவில்லை. அவள் அஸ்தியை நான் சேகரித்து.' நமது சந்ததி இனியாவது யுத்தத்தை அறியாமல் இருக்க வேண்டும்' என்று அதன் மீது பிரார்த் தித்தேன்.

**மொழிபெயர்ப்பு – புதுமைப்பித்தன்**



## செயல்பாடுகள்

- தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் துண்டுப்பிரசுரம் ஒன்றைத் தயார் செய்யுங்கள்.
- சிறுகதையினை வாசித்து விமர்சனக் குறிப்பு எழுதுங்கள்.

# ஒரு தாயின் செல்வர்

மக்கள் நலத்துக்கு மதமா? -அன்றி
மதத்தின் நலத்துக்கு மக்களா சொல்வீர்! - மக்கள்
திக்கெட்டும் உள்ளவர் யாரும் - ஒன்று
சேராது செய்வதே மதமாகு மானால்
பொய்க்கட்டு நீக்குதல் வேண்டும் - அப்
பொல்லாங்கில் எல்லாரும் நீங்குதல் வேண்டும்
எக்கட்சி எம்மதத்தாரும் - இங்
கெல்லாரும் உறவினர் என்றெண்ண வேண்டும்

- மக்கள்

எல்லா மதங்களும் ஒன்றே - அவை
எல்லாரும் இன்புற்று வாழ்வீர்கள் என்றே
சொல்லால் முழங்குவது கண்டீர் - அவை
துன்புற்று வாழ்ந்திடச் சொல்லியதும் உண்டா
எல்லாரும் மக்களே யாவர் - இங்
கெல்லாரும் நிகராவர் எல்லாரும் உறவோர்
எல்லாரும் ஒரு தாயின் செல்வர் - இதை
எண்ணாத மக்கள் மாக்களென் போமே!

- மக்கள்

**- பாரதிதாசன்**

## பாரதிதாசன்



1891 ஆம் ஆண்டு புதன் இரவு புதுவையில் கனக சுப்புரத்தினம் பிறந்தார். தந்தை கனகசபை, தாய் இலக்குமி அம்மையார். புதுவைத் தமிழக ஏடுகளில் கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டற்காரன், பாரதிதாசன் என்ற புனைப் பெயர்களில் பாடல், கதை, கட்டுரை, மடல்கள் எழுதினார். 10 ஆண்டு காலம் பாரதியார்க்கு உதவியும் உறுபொருள் கொடுத்தும் தோழனாய் இருந்தார். 1964 ஏப்ரல் 21 ஆம் நாள் இவர் இயற்கை எய்தினார். 1972 ஏப்ரல் 29, பாவேந்தரின் முழு உருவச்சிலை புதுவை அரசால் நிறுவப்பெற்றது.




### செயல்பாடுகள்

- பாரதியார், பாரதிதாசன் போன்றோரின் தேசிய ஒருமைப்பாட்டுப் பாடலை இன்றைய ஏதேனும் ஒரு புதுக்கவிதையுடன் ஒப்பிட்டு எழுதுங்கள்.

# அமைதி யுத்தம்

பண்பாட்டிற்கும்
அமைதிக்கும் பாலம் அமைப்போம்
பன்முகங்களை ஒன்றாக்கி
ஒற்றுமை மகுடம்
செய்வோம்

அன்புக்கரங்களை நீளநீட்டி
அகில உலகை
ஆரத்தழுவுவோம்
அறிவு மரத்தின்
நல்ல கனிகளையே
நாளும் சுவைப்போம்



வாசல் கோட்டிற்குள்
இருப்பவர்களை
வெளியில் வரச் சொல்லி
வசந்தகோலம்
வரையச் செய்வோம்

வாழ்வின் வலைப்பின்னலிலிருந்தும்
சிக்கல் சிறையிலிருந்தும்
வெளியேறி
அமைதிக் கூடு கட்டுவோம்.

இரைச்சல்களுக்கு
இதழ்ப்பூட்டு போட்டு
வல்லோசைகளின்
வாயை மூடுவோம்

அமைதியின்
கீதம் பாடுவோம்.
புதிய தலைமுறைக்கு
அ என்றால் அமைதி என்று அகிம்சைப்பாடம்
நடத்துவோம்

இனி போர்களுக்குத் தேவை
மனிதக் கேடயங்களல்ல
அமைதிக் கேடயங்களே!

இறுதிப்படுக்கையில்
இருக்கும்
வையத்திற்கும்
மனிதப் பண்புகளால்
மருத்துவம் பார்ப்போம்.

**போ. மணிவண்ணன்**



## செயல்பாடுகள்

- "புதிய தலைமுறைக்கு
அ என்றால் அமைதி என்று
அகிம்சைப் பாடம் நடத்துவோம்"
என்னும் வரிகளின்மூலம் ஆசிரியர் சமூகத்திற்கு உணர்த்தும் செய்தியை விளங்குங்கள்.
- அமைதி யுத்தம் என்ற கவிதையின் பொருளுக்கிணங்க "தேச ஒற்றுமையைக் காப்போம்" என்ற தலைப்பில் உறுதிமொழி எழுதுங்கள்.

## உலகம் உண்டு

உலகம் பொல்லாதது, உலகம் பொல்லாதது என்று எல்லாரும் முறையிடுகிறார்கள். ஏன் பொல்லாதது ஆயிற்று என்று எண்ணுவார் ஒருவரும் இல்லை. உண்மைக்குக் காலம் இல்லை, நியாயத்துக்குக் காலம் இல்லை, நன்மைக்குக் காலம் இல்லை என்று எல்லோரும் குறை சொல்கிறார்கள். காலம் ஏன் இப்படிக் கெட்டுவிட்டது என்று ஆராய்கிறவர் ஒருவரும் இல்லை.

உலகம் என்பது ஒன்று தனியாக எங்கோ இல்லை. காலம் என்பதும் ஒன்று தனியாக இல்லை. மக்கள் வாழும் வாழ்க்கையைப் பொறுத்தே உலகத்தின் நிலைமையும் காலத்தின் நிலைமையும் மாறி மாறி அமைகின்றன. அதனுள், உலகம் பொல்லாதது என்று உலகத்தைப் பழிப்பதை விட்டு, வாழ்க்கையை நடத்தும் மக்களைப் பழிக்க வேண்டும். காலம் கெட்டுவிட்டது என்று காலத்தைப் பழிக்காமல். மக்களின் வாழ்க்கையைப் பழிக்க வேண்டும். புகழும் போதும் இப்படித்தான் செய்ய வேண்டும்.

ஔவையார் என்னும் பெரும் புலவர் இது போன்ற கருத்தை வலியுறுத்தியிருக்கிறார். நாடு அல்லது

காடு, மேடு அல்லது பள்ளம் என்னும் இந்த வெளித் தோற்றத்தைக் கண்டு யாராவது நல்ல நிலம் கெட்ட நிலம் என்று பிரிக்கிறார்களா? அவ்வாறு பிரிப்பது தான் பொருத்தம் ஆகுமா? மக்கள் எந்தப் பகுதியில் நல்லவர்களாக விளங்கிச் சிறந்த வாழ்வு வாழ்கிறார் களோ, அந்த நிலப் பகுதியை நல்ல நிலம் என்று கூற வேண்டும். எங்கே நல்ல மக்கள் இல்லையோ, அந்த நிலப் பகுதியை நல்ல நிலம் என்று கூற முடியாது – இதுதான் அந்தப் புலவர் வற்புறுத்தி யுள்ள கருத்து.

*“நாடாகொன்றோ காடாகொன்றே*
*அவலா கொன்றோ மிசையா கொன்றே*
*எவ்வழி நல்லவர் ஆடவர்*
*அவ்வழி நல்லை வாழிய நிலனே”*

(புறநானூறு – 187)

இப்படிப்பட்ட ஆராய்ச்சியை இன்றும் செய்ய வேண்டும். செய்த பிறகுதான் உலகத்தையும் காலத்தையும் பழிக்கலாம். கண்மூடி வாய்ப்பாடு களால் பழித்துப் பேசுவதால் பயன் விளையாது.

உலகம் நல்ல உலகமாக விளங்க வேண்டும் என்று அரசியல் சட்டங்கள் ஏற்பட்டன. நாடுதோறும் அப்படிப்பட்ட சட்டங்கள் ஏற்படுத்தித்தான் ஆட்சி நடந்துவருகிறது. அமைதியும் ஒழுங்கும் எங்கும் வாழ வேண்டும் என்றே சட்டங்கள் அமைந்தன. ஆனால் சட்டங்கள் அழியாமல் இருக்கின்றன; அமைதி ஒழுங்கு முதலியவை அழிந்து வரு கின்றன. அதன் காரணம் என்ன? சட்டங்கள் சிலரிடம் செல்கின்றன; சிலரிடம் செல்வதில்லை. ஏழைகளைமட்டும் சட்டங்கள் அடக்கி நசுக்கு கின்றன; செல்வர்களைக் கண்டதும் அந்தச் சட்டங்களே அடங்கி நசுங்குகின்றன. ஏழைகள் சட்டங்களுக்கு அஞ்சுகிறார்கள்; செல்வர்கள் சட்டங்களை விலை கொடுத்து வாங்குகிறார்கள், ஏழை மக்கள் கொண்டால் திருட்டு என்று பெயர்; செல்வர்கள் செய்தால் வியாபார முறை என்று பெயர். ஏழைகள் ஒழுக்கம் கெட்டால் விபச்சாரம் என்று பெயர்; செல்வர்கள் ஒழுக்கம் கெட்டால் நாகரிகப் புதுமை என்று பெயர். ஏழைகள் புளுகினால் பொய் என்று பெயர்; செல்வர்கள் புளுகினால் தந்திரம் என்று பெயர். இவ்வாறு சட்டங்கள் ஏழை மக்களுக்கு ஒரு வடிவிலும், செல்வர்களுக்கு மற்றொரு வடிவிலும் பயன்படு கின்றன. இவற்றை விளக்குவதற்காக அறிஞர் பெர்னார்ட்ஷா சிறைச்சாலைகளைச் சுட்டிக் காட்டி, அங்கெல்லாம் ஏழை மக்கள் நெடுங்காலம் இருப்பதையும், செல்வர்கள் மட்டும் நுழைந்தவுடன் விடுதலை பெற்று வெளியேறுவதையும் விளக்கு கிறார். ஆகையால், பணம் இருக்கும் பக்கமாகச் சட்டங்கள் திரும்புகின்றன. இப்படிப்பட்ட சட்டங்கள் எப்படி அமைதியையும் ஒழுங்கையும் நிலை நிறுத்தி உலகத்தைத் திருத்த முடியும்?

இந்தச் சட்டங்களைச் செய்கிறவர்கள் யார்? முன்னெல்லாம் அரசர்களும் அமைச்சர்களும் சட்டங்களைச் செய்துவந்தார்கள். சில வேளை களில், அறிஞர்கள் வழிகாட்டிவந்தார்கள். அவர்கள் எல்லோருமே பொதுமக்கள் என்ன எண்ணுவார்கள் என்று ஆரய்ந்து பார்த்தே அந்தச் சட்டங்களை இயற்றினார்கள். சுருங்கக் கூறினால், முற்காலத்தில், சட்டங்களுக்கும் பொது மக்களின் எண்ணங் களுக்கும் உறவு இருந்துவந்தது; அது மறை முகமான உறவு.

இப்போது சட்டங்களுக்கும் பொது மக்களுக்கும் உள்ள உறவு, நேர்முகமான உறவு. இதுதான் குடியரசால் விளைந்த பயன். இப்போது சட்டங்கள் இயற்றுகிறவர்கள் அரசர்களும் அல்ல; அமைச்சர் களும் அல்ல; பொதுமக்களே. அந்தப் பொதுமக்கள் சிலரைத் தோந்தெடுத்து அனுப்புகிறார்கள்.

அவர்கள் ஒரு சபையாகக் கூடிச் சட்டங்களைச் செய்கிறார்கள். அதனால் தான் அந்தச் சபைக்குச் சட்டசபை என்று பெயர்.

அப்படியானால், நல்ல சட்டங்களை இயற்றி உலகத்தைத் திருத்தலாமே, அந்தப் பொறுப்புப் பொதுமக்கள் கையில் தானே இருக்கிறது என்று கேட்கலாம். அங்கும் ஓர் உண்மை விளங்குகிறது. பொதுமக்கள் நல்லவர்களாகவும், வல்லவர் களாகவும் இல்லை. அதனால்தான் ஊழல் இருந்து வருகிறது. பொதுமக்கள் இன்னும் தாங்களாக எண்ணிப் பார்க்கும் திறமை பெறவில்லை. நாளைக்கு என்ன நடக்கும் என்று அப்பால் எட்டிப் பார்க்கும் பார்வையும் பொதுமக்களுக்கு இன்னும் வரவில்லை. வருமானால் உலகம் உடனே திருந்தி விடும். வரும் வரையில் அல்லல் இருந்தே தீரும்.

இதற்கு உதாரணமாக ஒன்று பார்ப்போம்; ஏழைமக்கள் பலருக்குப் பல தீமை செய்கிறான் ஒருவன். ஆனால், அவனே நிறையச்செல்வம் சேர்த்துப் பணக்காரன் என்று புகழும் பெற்று ஒரு பொது நிலையக் கட்டிடம் கட்டிவிடுவானானால், பொதுமக்கள் எல்லோரும் அவனைப் புகழ்கிறார்கள். இதனால், பொதுமக்களின் மனம் இன்றும் ஆற்றல் பெறவில்லை என்பது தெரியவில்லையா?

உடம்பைக் கொண்டோ, மூளையைக் கொண்டோ ஒருநாளும் ஒருவகை உழைப்பும் செய்யாத ஒருவனை எடுத்துக்கொள்வோம். அவன் மற்றவர் களின் உழைப்பையெல்லாம் காசாக மாற்றிப் பெட்டியில் சேர்த்து வைக்கிறான், பல லட்ச ரூபாய் சேர்ந்த பிறகு சில ஆயிரம் செலவு செய்து ஒரு கோவில் கட்டுகிறான், அல்லது ஒரு திருவிழா செய்கிறான். உடனே, பொதுமக்கள் அவனைப் புகழ்ந்து பாராட்டுகிறார்கள். யாருடைய உழைப்பு, யாருடைய வியர்வை, யாருடைய முயற்சி என்று எண்ணிப் பார்க்கும் மனம் இன்னும் பொது மக்களுக்கு வரவில்லை.

திருக்குறளில் அறத்துப்பாலில் சொன்ன விதிகள் எல்லாவற்றையும் மீறி நடந்து ஒருவன், வாழ்க்கை நடத்துகிறான். அவன் ஏழையாக இருக்கும் வரையில் அவனை எல்லோரும் பாவி என்று பழிக்கிறார்கள். கொலைஞன், திருடன், குடிகாரன், காமுகன், பொய்யன், அறமில்லாதவன் என்று அவனை எல்லோரம் கடிகிறார்கள். அவனே எப்படியோ செல்வம் சேர்த்து முன்னுக்கு வரு கிறான். ஆனால், பழைய கெட்ட வாழ்க்கை மாறாமல் அப்படியே வாழ்ந்துவருகிறான். அப்போது, அவனைக் கொலைஞன் திருடன், பொய்யன் என்று ஒருவரும் பழிப்பதில்லை. அதற்கு மாறாக அவனைப் புகழ்ந்து பணிகிறார்கள். அவன் இட்டவேலைகளையும் செய்யக் காத்துக் கொண்டி ருக்கிறார்கள். அறநூல்களைப் பாராட்டும் திருவிழாக்கள், அறநிலையத் திறப்பு விழாக்கள், அறவோர் நினைவு நாட்கள் முதலியவற்றிற்கு அவனையே தலைவனாக்கி, அவன் திருவடியின் கீழ்க் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இப்படியெல்லாம் அறம், அமைதி, ஒழுங்கு எல்லாம் கெடுவதற்குத் தாங்களே காரணமாக இருந்து விட்டு, உலகம் பொல்லாதது என்றும், காலம் கெட்டுவிட்டது என்றும் பொருள் தெரியாமல் பழிக்கிறார்கள்.

சட்டங்களும் வலிமை இழந்த நிலையில், பொதுமக்களும் ஆற்றல் பெறாத நிலையில், உலகம் திருந்த வழி இல்லை என்று சோர்வடையக் கூடாது. முற்காலத்திலும் அறிஞர்கள் உலகத்தைக் காப்பாற் றினார்கள். இக்காலத்திலும் அறிஞர்கள் அவ்வாறு காப்பாற்ற முயல்கிறார்கள். அதன் பயன்தான் அங்கங்கே நடக்கும் இயக்கங்களும் கிளர்ச்சி களும்.

முற்காலத்தில் அறிஞர்களின் கடமை எளியது. அப்போது, சிலர் அமைச்சர்களாக அமைந்து விட்டால் போதும். சட்டங்களையும் ஏற்படுத்தி அந்தச் சட்டங்கள் நேர்மையாக ஆளும்படியாகவும் செய்ய அவர்களால் அப்போது முடிந்தது. இப்போது, அவர்கள் பொதுமக்களைத் தட்டிஎழுப்பி, தூண்டிவிட்டு, இயக்கம் அமைத்து, கிளர்ச்சி விளைக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால், முற்காலத்தில் ஆள்வோர் சிலர்; ஆளப்படுவோர் பலர், இக்காலத்தில் எல்லோரும் ஆள்வோர்; எல்லோரும் ஆளப்படுவோர். எல்லோரும் குடி மக்கள்; எல்லோரும் முடிமன்னர். இதுதான் குடியரசின் இயல்பு; இதனால் தான் இயக்கங்களும் கிளர்ச்சிகளும் வேண்டியிருக்கின்றன.

அறிஞர்கள் அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரையில் ஒரே நெறியில் வாழ்க்கையைக் கோலி வருகின்றார்கள். அன்று வலியுறுத்திய உண்மை களை இன்றும் வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால், அன்று சிலர் மட்டும் திருந்தி, நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் இருந்தால் போதும்; மற்றவர்கள் அவர்களைப் பார்த்துக் கண்மூடி நடந்தால் போதும் என்று நம்பினார்கள். அந்த நம்பிக்கை தோற்று விட்டது. பல பரீட்சைகளில் அது தவறிவிட்டது; பல முறையும் தோற்றுவிட்டது. அதனால்தான் இப்போது அறிஞர்கள் குடியரசு முறையை வற்புறுத்து கிறார்கள். எல்லோரும் உரிமை பெற்றால்தான். எவரும் ஏமாறாமல் வாழ வழி உண்டு என்று எடுத்துரைக்கிறார்கள். எல்லோரும் வல்லவர் களாக ஆனால்தான் எவரும் ஏங்காமல் வாழ முடியும் என்று விளக்குகிறார்கள். எல்லோரும் வல்லமை பெற்றால்தான், எல்லோரும் நல்லவர் களாக வாழக் கூடும் என்று தெளிவாகச் சொல் கிறார்கள். அப்போதுதான் உலகம் நல்லது, காலமும் நல்லது என்று காணமுடியும் என்பது அவர்கள் பெற்றுள்ள புதிய நம்பிக்கை.

இந்த முயற்சியில் சட்டங்கள் தோற்ற பிறகும், பொதுமக்கள் சோர்ந்த பிறகும் அறிஞர் சிலர் பின் வாங்கவில்லை; அவர்களிடம் தளராத உறுதி இருந்து வருகின்றது. அதுதான் அவர்களுடைய மனச்சான்றின் உறுதி. சட்டங்கள் பணத்துக்குப் பணிந்து விட்டன; பொதுமக்கள் பணத்துக்குப் பணிந்து விட்டார்கள்; ஆனால், இந்த அறிஞர் பணியவில்லை. பணம் பெரியது அல்ல, குணமே பெரியது என்று தொன்று தொட்டுச் சொல்லிவரு கிறார்கள். அறத்தை வணங்கு, அதிகாரத்தை வணங்காதே என்று அன்று முதல் வலியுறுத் திவருகிறார்கள். சட்டங்கள் குணத்தைவிட்டுப் பணத்தின் பின்னே சென்றன. பொதுமக்கள் அறத்தை வணங்காமல். அதிகாரத்தை வணங்கி னார்கள். இந்த அறிஞர்கள் மட்டும் மனச் சான்றின் வழியில் உறுதியோடு நின்றார்கள். இந்தச் சான்றோர்களால்தான் உலகம் திருந்தப்போகிறது.


உலக வாழ்க்கையக் கெடுக்கவும் எடுக்கவும் ஆற்றல் பெற்றுள்ளவை மூன்று; சட்டம், பொது மக்களின் போக்கு, சான்றோரின் மனச்சான்று. இம் மூன்றும் மூன்றுவகை வேலிகள். பொதுமக்கள் ஏமாந்து கலங்கினால் சான்றோர் தாங்குவது திண்ணம். சான்றோரின் மனச்சான்றே உண்மையான வேலி. இதனால்தான் திருவள்ளுவர் அவர்களைப் போற்றும் போது, ''பண்புடையவர்கள் இல்லை யானால், உலகம் எப்போதோ மண்ணுள் மறைந்து அழிந்து போயிருக்கும்'' என்றார்.

*பண்புடையாா்ப் பட்டுண் உலகம் அதுஇன்றேல்*
*மண்புக்கு மாய்வது மன்.*

(திருக்குறள்)

**– மு. வரதராசனார்**

## மு. வரதராசனார்



இலக்கியத் தரமான செந்தமிழ் நடையிலும், நல்ல நாவல்களைப் படைக்க முடியும் என்பதற்கு மு.வ.எடுத்துக்காட்டு. கரித்துண்டு, கள்ளோ காவியமோ இரண்டும் பூரணத்துவம் பெற்ற படைப்புகளாகக் கூறலாம். மற்ற நாவல்கள், அல்லி, பாவை, மலர்விழி, அகல்விளக்கு, மண்குடிசை, கயமை, நெஞ்சில் ஒரு முள், பெற்ற மனம் ஆகியவையாகும்.

## செயல்பாடுகள்

- தேசப்பற்றை வலியுறுத்தும் வகையில் புதுக்கவிதை ஒன்றை எழுதி பொருத்தமான தலைப்பிடுக.
- வேற்றுமையில் ஒற்றுமை காப்போம் என்ற தலைப்பில் குடியரசு தினவிழாவில் உரையாற்றச் சொற்பொழிவுக் குறிப்பு தயாரியுங்கள்.
- தேசிய ஒருமைப்பாட்டை உணர்த்தும் கவிதைகளைத் தொகுத்து எழுதுங்கள்.
- தேசிய ஒற்றுமைக்காகப் பாடுபட்ட பெருந்தலைவர்களின் புகைப்படங்களைத் தொகுத்துப் படத் தொகுப்பு உருவாக்குங்கள்.
- உங்கள் பள்ளியில் சுதந்திரத் தினத்தன்று விடுதலை வீரர்களின் தியாகச் செயலைப் போற்றுமாறு கருத்தரங்கம் ஒன்று நடைபெற உள்ளது. இதில் சட்டமன்றத் தலைவர் பங்குபெற்றுத் தலைமையுரை ஆற்றுகிறார். இதற்கான சுவரொட்டி ஒன்று தயாரிக்கவும்.
- சுதந்திரப் போராட்டம் தொடர்பான அரிய படங்கள், செய்திகள், பாடல்கள் போன்றவற்றைச் சேகரித்துக் கண்காட்சி நடத்துங்கள்.

# சொல்லகராதி

## அ

அகனமர் - உள்ளத்தில் அமர்த்திருத்தல்
அகில் - நறுமணமுடைய மரம்
அவல் - பள்ளம்

## ஆ

ஆரம் - மாலை, வளையம்

## இ

இணர் - மலர்வது
இழை - நூல்

## ஈ

ஈகை - கொடை

## உ

உடு - நட்சத்திரம்
உதிரம் - இரத்தம்
உப்பரிகை - மாளிகையிலிருந்து வெளியே பார்ப தற்காக அமைக் கப்பட்ட பகுதி.
உஷார் - சுறுசுறுப்பு

## ஊ

ஊருணி - குளம்
ஊறு - துன்பம், தீங்கு

## எ

எழில் - அழகு

## ஒ

ஒண்ணாதார் - பகைவர்

## க

கங்கணர் - ஒரு பிரிவு மக்கள்
கண்ணுதல் - கண்ணையுடைய நெற்றி
கதுப்பு - கன்னம்
கவின் - அழகு, எழில்
களிமயில் - ஆனந்த நடனமாடும் மயில்
கேளிர் - உறவினர்கள்
கொற்றன் - அரசன்
கோதை - மலர்

## ச

சுழி - சிறுவட்டம், சுழல்
செவ்வரை - செம்மையான மலை
சேல் - கெண்டை மீன்

## த

துஞ்சான் - தூங்கமாட்டான்
துவன்றி - நெருங்கி
தேறு - அமைதிகொள்

## ந

நயன் - நன்மை
நரன் - மனிதன்
நறுஞ்சினை - சினை (நறு - உரிச்சொல்)
நிலைபேறு - நிலைத்திருப்பது, சாசுவதம்
நுந்தை - உன் தந்தை
நூலிழை - மிகக்குறுகிய இடைவெளி
நெடுவரை - நீண்ட மலை

## ப

பகழி - அம்பு
பரணி - ஊறுகாய் இட்டு வைக்கும் கலம்
பாகர் - பகுதியாகக் கொண்டவர்
பாழி - அடுக்கு
பிரமை - மனத்தில் ஏற்படும் தோற்றம், பொய்யான நம்பிக்கை
புகல் - உட்செல்லுதல்
புனல் - நீர்
புனை - அணி (ந்த)

## ம

மமதை - கர்வம்
மன்னுபேர் - வீழ்ச்சியிலாது நிலைத்திருப்போர்
மாரி - மழை
மிசை - மேடு
மிழற்ற - கூற
முகடு - உச்சி
முகில் - மேகம்
முகிழ்ந்த - தோன்றிய
முழை - தோன்று

## வ

வளாகம் - தொடர்புடைய அனைத்து இடங்களையும் குறிக்கும் சொல்